Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
ஜன.18–24,1998
11/00

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 240

## தலைநகரில் கழுகுகள்

## இரகசிய நகர்வு

## அம்பலமாகும் தேர்தல் உத்திகள்



## "சங்கீதா அப்பாவி"

## வயதான இளமைக் காதல்

சூடு – சுவை – சுவாரசியம் அது தான் தினமுரசு

# முரசம்

## கெடுப்பார் கைக்கருவிகள்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

'ஊர் ரெண்டுபட்டால்
கூத்தாடிக்கு கொண்டாட்டம்:'
அமெரிக்காவும்
ஒரு கூத்தாடிதான்!
ஆரியக்கூத்தாடினாலும்
காரியத்தில் கண்ணாயிருக்கும்
கூத்தாடி!
உலகைத் தன் பிடியில்
வைத்திருக்கும்
காரியம் மீதே கண்!
நாடுகளுக்குள்ளும்
நாடுகளுக்கிடையேயும்
கலகம் மூட்டிவிடுவதும்
அமெரிக்காதான்!
அடிபட்டுக் கொள்ள
ஆயுதம் கொடுப்பதும்
அமெரிக்காதான்!
அமெரிக்காவின்
பிரதான உற்பத்திகளில்
ஆயுத தயாரிப்பும்
அடக்கம்!
ஆயுத வியாபாரிகள்
ஆட்சியிலும்
செல்வாக்கு செலுத்துகின்றனர்.
அமெரிக்க பாராளுமன்றமான
காங்கிரசிலும்
ஆயுத வியாபாரிகளதும்
பெரு முதலாளிகளதும்
ஆட்கள்தான்
அங்கம் வகிக்கிறார்கள்!
அமெரிக்காவை
தட்டிக் கேட்க ஆளில்லாத
சண்டப் பிரசண்டனாக்குவதே
அமெரிக்க காங்கிரசினதும்
ஆத்மார்த்த ஆசை!
கொந்தளிப்புகள்,
கலகங்கள்,
உள்நாட்டு யுத்தங்கள்
கொளுந்து விட்டெரிந்தால்தான்,
உபதேசம் செய்வதுபோல
உள்ளே புகமுடியும்!
அதனால்தான்- முதலில்
அடிபட்டுக் கொள்ள
ஆயுதத்தையும்,
பின்னர், உபதேசத்துக்காக
தன் ஆட்களையும்
அனுப்பி வைக்கிறது
அமெரிக்க வல்லரசு!
மூட்டிவிடுவதும்,
மூண்ட தீயை அணைக்க வருவதும்,
இரண்டுமே
உலகப் பொலிஸ்காரன்
உத்தியோகத்துக்காகத்தான்!
இலங்கையில் தலையிடுவது
இந்தியாவுக்கு
அருகே இன்னொரு
தளம் தேடுவதற்காக!
இங்கே தளம் இருந்தால்
அங்கே எட்டிப் பார்க்கலாம்!
இந்தியாவை
மறைமுகமாக எச்சரிக்கலாம்!
இந்தியாவை சுற்றிவர
சதி வலை பின்னிவிட்டு
தென்னாசியாவில்
தன் பலத்தை
உயர்த்திக்கொள்ள
அமெரிக்கா துடிக்கிறது!
இதனால் ஆபத்து
இந்தியாவுக்கு மட்டுமல்ல;
இலங்கைக்கும் ஆபத்து!
மூவின மக்களுக்கும்
தீராத ஆபத்து!
இனப்பிரச்சனையில்
அரசைத் திருப்திப்படுத்தக்கூடிய
அணுகுமுறையை
அமெரிக்கா கையாள்வது,
அரசை நன்றாக இழுத்து
தனது கைக்குள்
போட்டுக்கொள்ளத்தான்!
இலங்கை அரசை
தன் கைக்குள்
போட்டுக் கொண்டபின்னர்
தன் சுயரூபத்தை இங்கும்
படிப்படியாகக் காட்டும்!
இலங்கை அமெரிக்காவின்
திறந்த சந்தையாகும்!
சுரண்டல் காடாகும்!
இவற்றையெல்லாம்
அரசாங்கம்
சிந்திக்காமல் இருப்பதற்கு
யுத்த வெற்றி ஆசையும்
அதனோடு கலந்த
அரசியல் நோக்கங்களும்
காரணமாக இருக்கின்றன!
பேரினவாதிகளும்
முன்னாள் இடதுசாரிகளும்
ஒத்து ஊதுகிறார்கள்!
எல்லாம் சரி;
சில தமிழ்க் கட்சிகளும்
எதற்காக
அமெரிக்காவுக்கு
ஆலவட்டம் பிடிக்கின்றன?
எடுப்பார் கைப்பிள்ளைகளாக
மாறி விட்டன
தமிழ்க் கட்சிகள்
என்று நினைத்தோம்!
கெடுப்பாரின் கையிலுள்ள கருவிகளாகவும்
மாறிவிட்டனவே!
திருந்தவே முடியாதோரை
எண்ணி- வருந்திப்
பலன் என்ன?

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## இறையன்பு

நமது காரணகாரியங்களைப் புரிந்து கொள்ளாமல் நாம் நேசிப்பவர்கள், நெருங்கிப் பழகுகின்றவர்கள், "இவன் இப்படித்தான், இவனுக்கு வேலையே இதுதான், துன்பத்தில் இன்பம் காண்பதே பொழுது போக்கு," என்று தூற்றித் திரிவார்கள்.

இஸ்ரவேல் மக்களின் அடிமைத்தன வீடாகிய எகிப்தில் இருந்து பாலும், தேனும் ஓடுகின்ற கானான் தேசத்துக்கு அழைத்து வந்த கடவுளுக்கும், மோசேக்கும், விரோதமாக வனாந்தரத்தில் ஏற்பட்ட பசி, தாகம், நோய், அழிவு இவைகளால் முறுமுறுக்கத் தொடங்கினார்கள். ஆனால் கண்ட, கற்ற கஷ்டங்கள், கானானைக் கண்டபோது களிப்பாக மாறியது.



கடவுளின் அன்பு நெருக்கி ஏவியது, அது உபத்திரவமாக தோன்றியது. இறுதியில் வாழ்வை வளமாக்கிய இறையன்பாக திகழ்ந்தது மக்களுக்கு...

"அன்பு சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்." (1 கொரி 13:7)

பருவம், வயது, சூழ்நிலை, எதிர்கால நோக்கம் என்பவற்றை உணர்ந்து, அன்பு செலுத்த நாம் இறைவனால் அழைக்கப்பட்டு இருக்கிறோம். இதை நன்குணர்ந்து அன்பின் இலட்சணங்களை சீர்தூக்கிப் பார்த்து இறையன்பு போல் இருக்கும் இறையடியார்களின் அன்பை புரிந்துகொண்டு, ஆண்டவர் இயேசுவுக்கு மகிமையாக வாழ்வோமாக!

சகோ. எஸ். யேசுநாதன்,
தளவாய், செங்கலடி.

## ரமழானின் சிறப்புக்கள்

அல்லாஹ் ரமழான் மாதத்தை அது அல்லாத மாதத்திற்கில்லாத பல சிறப்பம்சங்களை கொண்டு சிறப்பித்துள்ளான். அவற்றில் சில:-

1. நோன்பாளிகள் நோன்புதிறக்கும் வரை அவர்களுக்காக மலக்குகள் பாவமன்னிப்புத் தேடுகின்றனர்.
2. அல்லாஹ் தனது சுவர்க்கத்தை ஒவ்வொரு நாளும் அழகுபடுத்துகிறான், மேலும் (சுவர்க்கத்தை நோக்கி) எனது நல்லடியார்கள் தங்களின் கஷ்டங்களையும், சிரமங்களையும் தாங்கிக்கொண்டு உன்னிடம் வர இருக்கிறார்கள் எனக் கூறுகிறான்.
3. மூர்க்கத்தனம் செய்யும் ஷைத்தான்கள் விலங்கிடப் படுகிறார்கள்.
4. ஆயிரம் மாதங்களைவிட சிறப்பான கண்ணியமிக்க இரவு இதில் உள்ளது.
5. ரமழானின் கடைசி இரவில் நோன்பாளிகளுக்கு மன்னிப்பு வழங்கப்படுகிறது.
6. ரமழானின் ஒவ்வொரு இரவிலும் அல்லாஹ் நரக விடுதலை வழங்குகிறான்.
7. ரமழானில் செய்கின்ற உம்ரா ஹஜ்ஜுக்குச் சமமாகும்.

நோன்பின் விளக்கம் என்ற ஹதீஸ் புத்தகத்திலிருந்து.

தொகுப்பு: ரிஸான் ஸஹான்.

## கவிதைப் போட்டி இல.237

பரிசுக்குரிய கவிதை

### விடுதலை

பொன்விழாவுக்கு
முன்னே இந்த
சுதந்திரத்தை
விடுதலை செய்யுங்கள்!

ஏ.எச்.எம் மௌஜுத்-
ஹிஜ்ராபுரம்.

### இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

**ஜனநாயகம்—மறுபக்கம்!**

கண்டுகொள்-ஆனால்
காணாதது போல் நின்று கொள்!
புரிந்து கொள்-ஆனால்
புரியா மௌனியாய் இருந்து கொள்!
மீறின்,
கைவிலங்கும், கால்விலங்கும்
பிணித்து உனை
உருத்தெரியாதழித்துவிடும்!

அ.சந்தியாகோ-
அசோகா வித்தியாலயம்- கண்டி.

**நட்பு**

கண்ணிருந்தும் குருடர்களாய்
காதிருந்தும் செவிடர்களாய்
வாயிருந்தும் ஊமைகளாய்
ஆளும் தரப்பு அரங்கேற்றும்
நாடகத்தில் நட்புக்காய்
நடிக்கும் நம் இனத்து
தலைவர்களோ?

சி.மு.சுந்தரேசன்- மஸ்கெலியா.

## கவிதைப் போட்டி இல.240





**அவர்கள்**

வசிப்பிடம்?
சிறை!
வேலை?
கொலை!!

எஸ்.பிரபா-பதுளை.

**கவனியுங்கள்!** எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 24.01.1998

**முகவரி:** கவிதைப் போட்டி இல.240,
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல—1772, கொழும்பு.

**நமது நிலை**

கொன்று குவிக்கின்ற
கொடுமைகளைப் பாராதே!- இங்கே
கண்டாலும் அதை எவர்க்கும்
கனவினிலும் பேசாதே!
உந்தன் புய முயர்த்தி
ஒரு வினாவும் எழுப்பாதே!
இந்த நிபந்தனைக்கு
இஷ்டமின்றேல் இதே கதிதான்!

கு.திருமால்-அமிர்தகழி-மட்டக்களப்பு.

**பழமை**

சிறையில் கொலை!
உலகில் புதுமை
இலங்கையில் பழமை!

ஏ.ஆன் ஷியாமளா-
வைரவப்புளியங்குளம்- வவுனியா.

**வித்து**

இது
நிஜங்களின்
நிழல்கள்-ஆனால்
விழுதுகளின்
வித்துக்கள்.

சுபா வரன்- கண்டி.

**உடல்**

உயிர் தமிழுக்கு!
உடல், ஜெயிலுக்கு!

ஆ.அம்மையப்பன்-
மஸ்கெலியா.

**விளம்பரம்**

வெலிக்கடைக்கும்
களுத்துறைக்கும்
தமிழினத்தின்
தலை விதிக்கும்
தரமான விளம்பரம்!

அனஸ்றா- கல்முனை.

**சுதந்திரம் எங்கே?**

சுதந்திரப் பொன் விழாவில்,
தமிழர் தம் வாழ்வு கூறும்
'தலை' சிறந்த ஓவியங்கள்!

திருமதி ராஜேஸ்வரி கிருஷ்ணன்-
பூவரசன்குளம், வவுனியா.

# வாசக(ர்)சாலை




'அல்பிரட் துரையப்பா முதல் காமினி'வரை தொடரில், என்னைப் போன்ற இளைஞர்கள் பழைய உண்மைகளை அறிய முடிகிறது. 'எக்ஸ்ரே ரிப்போர்ட்'டும் உண்மைகளை வெளிப்படுத்துகிறது.

ஸ்ரீ.தமிழ்ச்செல்வன்,
வெள்ளவத்தை.

அன்பின் முரசே!

அரசியல் அரங்கத்தை மேலும் அதிகப்படுத்த பக்கங்கள் ஒதுக்க வேண்டும். எமது மக்கள் நாள் தோறும் படும் துன்பங்கள், இழப்புக்கள் அனைத்துக்கும் நிரந்தரமான தீர்வை ஏற்படுத்தினால்தான் விமோசனம் ஏற்படும். பத்திரிகைகளின் பங்கும் அதற்கு முக்கியமாகும்.

தி.சிவகுகன், மீசாலை.

அரசியல்த் தீர்வு முயற்சிகளை இழுத்தடிப்பது மட்டுமல்ல, உலகின் கவனத்தையே தம் பக்கம் இழுத்துவிட்டனர் ஆட்சியினர். தேர்தல் கிலு கிலுப்பை சத்தம் கேட்டு ஓடிவிட்டன எங்கள் கட்சிகள். அரசியலில் விரல் சூப்பும் குழந்தைகளாக உள்ள கட்சிகளால் அரசாங்கத்திற்கு சந்தோசம்தான்.

பா.மோகன், திருமலை.

முரசே! அரசியல் அலசல் அபாரம்! இராஜதந்திரிக்கு பாராட்டு. காலம் அறிந்து, காலத்துக்கு ஏற்ற கருத்தை தருகிறார். அரசின் விருப்பு வெறுப் பின்படியே தேர்தலை நடத்துவதா? நடத்தாமல் இருப்பதா? என்பது முடிவு செய்யப்படுகிறது. காங்கேசன்துறை இடைத்தேர்தலை 1975ல் நடத்த மறுத்தவர் சிறிமாவோ அம்மையார். சூழல் சரியில்லை என்று கூறினார். இன்று...? தகுந்த நேரத்தில் வரலாற்றை நினைவூட்டிய இராஜதந்திரிக்கு சபாஷ்.

பி.அருணாசலம், மட்டக்களப்பு.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

### விருப்பம் இல்லையா?

அன்பு முரசுக்கு!

யாழ் மாவட்ட உள்ளூராட்சித் தேர்தல் என்பது, அரசு தன் தேவையை முன்னிட்டு நடத்துகிறது என்பதை யார்தான் அறிய மாட்டார்கள்! தமிழ்க் கட்சிகளுக்கு மட்டும் இது தெரியாதா? இல்லை, நன்கு தெரியும்! மனச்சாட்சி உறுத்துவதால்தான் விருப்பமின்றி போட்டியிடுவது போல பேசி வருகின்றனர். விருப்பம் இல்லை என்றும் கூறிவிட்டு விழுந்தடித்து ஆடம்பரமாகவும் பிரசாரம் செய்கிறார்கள். யாழ்ப்பாண மக்களுக்கு இதெல்லாம் தெரியாது என நினைக்க வேண்டாம்!

சி.தர்மலிங்கம், கொக்குவில்.

### பொம்மலாட்டம்

அன்பின் முரசே!

, , அரசு தமிழ்க் கட்சிகளை பொம்மலாட்டம் ஆட்டுகிறது. தமிழ்க் கட்சிகள் தமிழ் மக்களை பொம்மையாட்டுகிறார்கள்.

எஸ்.ஜீவன், சூசையப்பர் குளம்.

### பகிரவும் முடியாது

தேர்தலில் போட்டியிட பொதுப் பட்டியலுக்காக நடைபெற்ற பேச்சுவார்த்தையே தோல்வி கண்டுவிட்டது. பதவிகளை விட்டுக் கொடுக்க வேண்டாம், பகிர்ந்து கொள்ளக்கூட தமிழ்க் கட்சிகள் தயாராக இல்லை. இவ்வாறானபோது ஒற்றுமை, ஐக்கியம், என்றெல்லாம் இக் கட்சிகள் பேசுவதும் தமது தேவைக்கே.

எம்.ரவிகரன், திருமலை.

### யாழ் மக்களா சொன்னார்கள்?

முரசுக்கு, வணக்கம்.

யாழ் மக்களில் நானும் ஒருவன். நீண்டகால சண்டைகளால் நாம் துயர்பட்டது உண்மைதான். இப்போதும் துயர் தொடர்வதும் உண்மைதான். ஆயினும் கண்ணை விற்று சித்திரம் வாங்கும் தங்கள் துரோகத்தனங்களுக்கு, எங்கள் துயரங்களை தமிழ்க் கட்சிகள் காரணம் காட்டத் தேவையில்லை. தேர்தல் தேவையில்லை என்பதுதான் யாழ் மக்களின் அபிப்பிராயம் என்பது தெரிந்தும்தான் தமிழ்க் கட்சிகள் போட்டியிடுகின்றன. தங்கள் துரோகங்களுக்கு மட்டும் மக்கள் களைத்துப் போய் இருக்கிறார்கள். நிவாரணம் கேட்கிறார்கள், சலுகை கேட்கிறார்கள் என்று மக்களையும் துரோகிகளாக சித்தரிக்கிறார்கள்.

ஆ.திவ்வியநாதன், கொடிகாமம்.

அன்பின் முரசுற்கு!

நீ தாங்கிவரும் அனைத்தும் சூப்பர். அதில் இனிய தொடரான 'மேக்கப் புன்னகை' 'இனி என் முறை' ஆகிய இரு தொடர்களும் எம்மை அசத்துகின்றன. அதை தாங்கி வரும் முரசுக்கு பாராட்டுக்கள்

கி.றெஜிச்சந்திரன், வத்தளை.

**முரசுக்கு மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்படமுடிந்தவர்கள்:**

- ★ கே.கிருபாகரன், யாழ்ப்பாணம்.
- ★ பி.சித்திராங்கன், வவுனியா.
- ★ ஜீ.நந்தன், கல்முனை.
- ★ கே.சுஜீகரன், வவுனியா.
- ★ எஸ்.செல்வக்குமார், உம் கட்டை.
- ★ வா.கிருஷ்ணகுமார், ஹட்டன்.
- ★ எஸ்.எம்.தேவன், கண்டி.
- ★ ஆ.ஜெகதீஸ்வரன், புசல்லாவ.
- ★ எம்.கோமதி, பெரிய நீலாவணை.
- ★ சிறி, புத்தளம்.
- ★ வீ.பிரமிளா, அவிசாவெல.
- ★ தாவூத்றியாஸ், ஏறாவூர்-03.
- ★ அ.றஜீவன், வவுனியா.
- ★ நல்ஷியா ராசீக், தெகிவளை.
- ★ பா.ராஜன், ஜெர்மன்.
- ★ ரி.தினேஷ்காந்த், வத்தளை.
- ★ எஸ்.நஜாத்கான், கிண்ணியா-01.
- ★ எம்.தேவராஜா, ஹொறப்டன்.
- ★ கே.வேணி, பலாங்கொடை.
- ★ இ.தமிழன்பன், கல்முனை.
- ★ எம்.குமுதா, மட்டக்களப்பு.
- ★ ஏ.மங்களேஸ், மட்டக்குளி.
- ★ அ.இராஜமணி, தெய்யோவிற்ற.
- ★ பி.நடராஜி பாலசுப்பிரமணியம், நானுஓயா.
- ★ வி.கிருஷ்ணகுமார், கனடா.
- ★ எஸ்.லேயோலா நிலாந்தி, கொழும்பு-13.
- ★ ஸலீம் எம். கடாபி, ஹொறவபொதானை.
- ★ மா.மகேஸ்வரன், மட்டக்களப்பு.
- ★ ஜெயந்தி, மண்டூர்.
- ★ எம்.தயானந்தன், ஃபிரான்ஸ்.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட
சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர், த.பெ.இல:- 1772, கொழும்பு.

# ஜனநாயகமும்– வியாக்கியானங்களும்!

**அலசுவது– இராஜதந்திரி**

தற்போது இலங்கை அரசியலில் தமிழர் தரப்பு நிலை மிகப் பலவீனமானதாக அமைந்திருக்கிறது.

பகிரங்க அரசியலில் ஆறு, ஏழு தமிழ்க் கட்சிகளின் பெயர்கள் அடிபட்டு வருகின்றன. இந்தக் கட்சிகளில் எதுவும் தேர்ந்த அரசியல் தலைமைத்துவத்தை கொண்டிராத கட்சிகளாகவே உள்ளன.

இவற்றில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தங்கள் சட்டப் புலமைகளையும், அரசியல் சாணக்கியங்களையும் ஆட்சியாளரின் நலன் கருதி பிரயோகித்து வருகின்றனர்.

தமிழ்க் காங்கிரஸ் கட்சி தலைவர் குமார் பொன்னம்பலத்தின் குரல் இடைக்கிடையே துணிச்சலாக ஒலித்தாலும்கூட, தீர்க்கமான அரசியல் பங்களிப்பை வழங்கும் அளவுக்கு அவரது அரசியல் நடவடிக்கை முனைப்புப் பெற்று விளங்கவில்லை.

ஏனையவை முன்னர் ஆயுதம் ஏந்திச் செயற்பட்ட கட்சிகளாகும். இக் கட்சிகள் தமிழ்ழக் கோரிக்கையை மட்டுமல்லாமல், தமிழ் பேசும் மக்களின் சகல நலன்களையும் நடைமுறையில் கைகழுவிவிட்டுள்ளன.

**பாராளுமன்ற பதவிகள் உள்ளூராட்சி சபை நாற்காலிகள், பந்தாக்கள், படாடோபங்கள் என்று முன்னாள் போராளித் தலைவர்களின் நடைமுறைகளும், ஆசா பாசங்களும் வேறு ஒரு திசையில் திரும்பியுள்ளன.**

இத்தகைய தங்கள் ஆசாபாசங்களுக்கு ஏற்ப மக்களின் மனோ நிலையையும் மாற்றியமைக்கவே தமிழ்க் கட்சிகள் விரும்புகின்றன.

தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்கான போராட்டம் முதலில் சாத்வீக வழியிலேயே முன்னெடுக்கப்பட்டது.

அப் போராட்டங்கள் ஆட்சியாளரின் அடக்குமுறைகளால் இரத்தத்தில் மூழ்கடிக்கப்பட்ட பின்னரே, ஆயுதப் போராட்டம் காலத்தின் கட்டாயமாக உருப்பெற்றிருந்தது.

**சாத்வீகப் போராட்டம் மட்டுமல்லாமல், ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களை ஒடுக்கும் ஆயுதபாணியான அரச வன்முறையை எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போராடுவதும் ஜனநாயக ரீதியான போராட்டமேயாகும்.**

ஆயுதம் ஏந்திப் போராடிய கால கட்டத்தில் சகல போராளி அமைப்புகளும் தங்கள் போராட்டம் ஜனநாயக ரீதியானது என்றே பிரகடனம் செய்திருந்தன.

ஆயினும், இன்று முன்னாள் போராளி கட்சிகள் சில தாங்கள் இப்போதுதான் ஜனநாயக பாதையில் செயற்படுவதாக வாய் ஓயாமல் கூறிவருகின்றன.

அரசியல் அகராதியே தெரியாதளவுக்கு கற்றுக் குட்டிகளாகவுள்ள முன்னாள் போராளிக் கட்சிகள், தங்கள் பலியான சகாக்களின் தியாகங்களையும்

கொச்சைப்படுத்தி வருகின்றன.

**ஆயுதத்தை கைவிடுவதுதான் ஜனநாயகப் பாதையென்று அர்த்தப்படுத்திக் கொண்டால், இக் கட்சிகளில் இருந்து போராடி பலியான உறுப்பினர்கள் ஜனநாயக விரோதப் பாதையில் சென்று பலியானவர்கள் என்றே அர்த்தமாகும். 'பயங்கரவாதிகள்' என்று அவர்களை ஆட்சியாளர் முன்னர் அழைத்ததும் சரியென்று பொருளாகும்.**

ஜனநாயகப் பாதை, ஜனநாயக நீரோட்டம் என்ற பதங்களை வெறும்வாய் வீச்சுக்களாகவும், தங்கள் குத்துக்கரணங்களை நியாப்படுத்தவுமே முன்னாள் போராளி கட்சிகள் பயன்படுத்திவருகின்றன.

தமிழ் மக்களை ஜனநாயக நீரோட்டத்தில் இணைக்கவே யாழ் குடாநாட்டில் தேர்தல் நடத்தப்படுவதாக சமீபத்தில் ஒரு அறிக்கை வெளியாகி இருந்தது.

தேர்தல் கண்காணிப்புக் குழுவினரால் அந்த அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது. ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ, புளொட் ஆகிய மூன்று கட்சிகளும் அதில் கையெழுத்திட்டிருந்தன.

தேர்தல்களில் பங்குபற்றுவது மட்டும்தான் ஜனநாயக செயற்பாடு, ஏனைய போராட்ட வடிவங்கள் ஜனநாயகமானவையல்ல என்பது ஒடுக்கப்படும் மக்களை ஏமாற்றுவதற்காக ஆட்சியாளர்கள் வெளியிட்டு வருகின்ற கருத்துக்களாகும்.

**தேர்தல்களில் பங்குபெற்றுவது மட்டுமல்ல, தேர்தல்களைப் பகிஷ்கரிப்பது, வாக்குச் சீட்டுக்களை செல்லாதவையாக்குவது போன்றவைகூட ஜனநாயகரீதியான போராட்டங்கள்தான்.**

ஒடுக்குமுறைகளுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழாமல் தடுப்பதற்காகவும், மக்களின் கோபாவேசங்களைத் திசை திருப்பவும் தேர்தல்களில் வாக்களிப்பது மட்டும் ஜனநாயகம் என்றும், ஐந்தாண்டுக்கு ஒருமுறை தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்துவிட்டு கைகட்டி நின்று வேடிக்கை பார்ப்பதுதான் ஜனநாயக உணர்வு என்றும் மூடத்தனமான நம்பிக்கைகளை ஆட்சியாளர்கள் ஏற்படுத்த முனைவர்.

ஆயுதங்கள் மூலமும், அவற்றின் சுடும் பலத்தின் மூலமும் மக்களை அடக்கியாள்வது, பிரதேசங்களைப் பிடித்து வைத்திருப்பது, அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விடுவது என்பவையே ஒடுக்குமுறையாளரின் அணுகுமுறையாக உலகெங்கும் இருந்து வருகிறது.

**அந்த ஒடுக்குமுறைகளுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழும் போதெல்லாம், அதிருப்திக்கு உள்ளாகும் போதெல்லாம், தேர்தல்கள் என்ற வடிகால்கள் மூலம் அவற்றை வடிந்தோடச் செய்வதும் ஒடுக்குமுறையாளர்களது ஏமாற்றுத் தந்திரமாக அமைவதும் வழக்கமாகும்.**

துப்பாக்கிக் குழாய்கள் ஊடாக பிறப்பிக்கப்படும் தங்கள் ஆட்சியதிகாரத்திற்கு ஜனநாயக மூடுதிரை போடுவதுடன், தங்கள் ஆட்சியதிகாரத்தை ஆட்டம் காணச் செய்யும் போராட்ட சக்திகள்மீது மக்கள் நம்பிக்கை கொள்ளாது







## சலுகை ஆசைகள்– மீண்டும் துரையப்பாக்கள்

தடுக்கவும் தேர்தல்கள் ஆட்சியாளருக்கு உதவுகின்றன.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு தங்கள் கையாட்களையும், காட்டிக்கொடுக்கும் கும்பல்களையும் ஆட்சியாளர்கள் பயன்படுத்துவதையே உலகில் பல நாடுகளில் காணமுடிந்தது.

கடந்த காலத்தில் தென்னிலங்கை

ஆட்சியாளர்கள் வடக்கு-கிழக்கிலும் அவ்வாறான காட்சிகளை அரங்கேற்றியிருந்தனர்.

**இன்றைய ஜனாதிபதியின் தாயாரான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தில்தான் சலுகைகளை வீசியெறிந்து, தமிழ் பேசும் மக்களை உரிமைப் போராட்டத்தில் இருந்து திசைதிருப்பும் நடவடிக்கைகள் தீவிரம் பெறத்தொடங்கின.**

அந்த நாடகத்தில் பிரதான பாத்திரம் வகித்த ஒருவராகவே அன்றைய யாழ் மாநகர முதல்வர் அல்பிரட் துரையப்பா விளங்கியிருந்தார்.

1972ல் புதிய அரசியலமைப்பைக் கொண்டுவந்து, தமிழ் பேசும் மக்களை இரண்டாம் தர பிரஜைகளாக்கியது சுதந்திரக் கட்சி ஆட்சி. அதே அம்மையாரின் ஆட்சியில்தான் தமிழ் மாணவர்களின் கல்விக்கு குழிபறிக்கும் தரப்படுத்தல் கொண்டுவரப்பட்டது.

கிளர்ந்தெழுந்த மாணவர் தலைவர்களையும், இளைஞர்களையும் நூற்றுக்கணக்காக சிறையில் தள்ளி, ஆண்டுக்கணக்காக விசாரணையின்றி தடுத்து வைத்திருந்தார் சிறிமாவோ அம்மையார்.

1974ல் ஜனவரி 10ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டில் பொலிசாரின் தாக்குதலால் ஒன்பது தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். மின்சார ஒழுக்குக் காரணமாகவே மரணம் சம்பவித்தது என்றனர் ஆட்சியாளர்கள்.

இவ்வாறு தமிழ் பேசும் மக்களின் உரிமை வேட்கையையும், உணர்வுகளையும் அடக்கி ஒடுக்க ஒருபுறம் அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டனர். மறுபுறத்தில் தமது எடுபிடியாகச் செயற்பட்ட ஆளும் கட்சிப் பிரமுகரான துரையப்பா போன்றோர் மூலம் சலுகைகாட்டி மக்களை மயக்கும் காரியத்தையும் ஆட்சியாளர்கள் மேற்கொண்டனர்.

யாழ்ப்பாண நகரில் திருவள்ளுவர், ஔவையார், பாரதியார் உட்பட பல தமிழ்ப் பெரியார்களுக்கு துரையப்பா சிலை நிறுவினார்.

அன்றிருந்த தமிழ்த் தலைமையைவிடவும் தன்னை தமிழின உணர்வுள்ள ஒருவராகக்காட்டி மக்களை ஏய்க்கவே அவ்வாறு சிலைகள் நிறுவினார் துரையப்பா.

**யாழ் நவீன சந்தை, விளையாட்டரங்கம், கூட்டுறவுச் சங்கங்களில் பல நூற்றுக்கணக்கான இளைஞர்- யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு என்று துரையப்பா மூலமாக வாரி வழங்கப்பட்ட சலுகைகளுக்கும், ஆசைகாட்டலுக்கும் நிகராக அதற்கு முன்னரும் வழங்கப்பட்டதில்லை; பின்னரும் வழங்கப்பட்டதில்லை.**

அத்தனை சலுகைகளும், தமிழ் பேசும் மக்களின் உரிமை வேட்கை முன்பாக சூரியன்மீது படிந்த தூசிப் படலம்போல பொசுங்கிப் போயின.

அல்பிரட் துரையப்பா சுட்டுக் கொல்லப்பட்டபோது, 'சரியான தண்டனை வழங்கப்பட்டுள்ளது' என்றே யாழ் குடாநாட்டு மக்கள் அபிப்பிராயம் கொண்டிருந்தனர்.

**மட்டக்களப்பில் ராஜன் செல்வநாயகம், கிளிநொச்சியில் செல்லையா குமாரசூரியர் மற்றும் சிமோல் அருளம்பலம், தியாகராசா, மார்ட்டின் போன்ற பலருக்கு தமிழர்களின் தலைவர்களாக மகுடம் சூட்டி மகிழ சிறிமாவோ பண்டாரநாயக்கா பகீரதப் பிரயத்தனம் செய்திருந்தார்.**

மேற்கண்டவர்களில் துரையப்பா, தியாகராசா இருவரும் கொல்லப்பட்டனர். துரையப்பாவை புலிகளும், தியாகராசாவை புளொட் இயக்கத்தினரும் சுட்டுக் கொன்றனர். ஏனையோர் மக்களால் நிராகரிக்கப்பட்டு, முகவரி தெரியாத ஆட்களாக மாறிப்போயினர்.

1977 தேர்தலின் பின்னர் வடக்கு-கிழக்கில் குறிப்பாக வடக்கில்- பொம்மைத் தலைவர்களை உருவாக்கி, முன்நிறுத்துவது ஆட்சியாளர்களுக்கு கடினமாக இருந்தது.

இந்தியப் படைகாலத்தில் மாகாணசபை கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எஃப். பல கோடிக்கணக்கான நிதியைக் கொட்டி புனரமைப்பு என்றும், சலுகைகள் என்றும், வேலை வாய்புக்கள் என்றும் ஆரவாரங்கள் செய்திருந்தது.

**ஆயினும் 1989ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அக் கட்சி பாரிய வெற்றி பெறமுடியவில்லை. 1994ல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு-கிழக்கில் அக்கட்சி படுதோல்வி கண்டிருந்தது. மாகாணசபை தலைமையகம் இருந்த திருமலையில்கூட அக் கட்சியினருக்கு பரிதாபகரமான தோல்வியையே மக்கள் கொடுத்திருந்தனர்.**

இனப்பிரச்சனைக்கு திருப்தியான தீர்வு கிடைக்காத நிலையில், யானைப் பசிக்கு சோளப்பொரிபோல வீசப்படும் சலுகைகளால் தமிழ் மக்களை ஏமாற்ற முடியவில்லை என்பதே இங்கு வரலாறாகவும், படிப்பினையாவும் இருந்து வருகிறது.

**இன்று, கடந்தகாலத்தைவிட தமிழ் பேசும் மக்களின் மீதான ஒடுக்குமுறைகள் தீவிரம் பெற்றுள்ளன.**

தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகளுக்கு எதிராக உலகின் அனுதாபம் திரும்பிய கடந்த கால அனுபவங்களில் இருந்து கற்றுக்கொண்ட ஆட்சியாளர்கள், வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல நாசூக்காக உரிமைப் போராட்டத்தின் குரல்வளையை நெரித்துக் கொண்டிருக்கின்றனர்.

கூட்டணி, ஈ.பி.டி.பி., புளொட், ஆகிய கட்சிகள் இப்போது பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்றன. இம் மூன்று கட்சிகளுமே தமிழர் நலன்களுக்காகவோ, நாளும், பொழுதும் பெரிதாகிக் கொண்டிருக்கும் அன்றாட அடக்குமுறைகளுக்கு எதிராகவோ போராட முடியாத கட்சிகளாகவே உள்ளன.

**தமிழ் பேசும் மக்களுக்கு அரசிடமிருந்து அதிக சலுகைகள் பெற்றுக் கொடுக்கும் திறமையுள்ளவர்கள் யார்? என்பதுதான் இந்த மூன்று கட்சிகளுக்கிடையிலுமான போட்டியாக மாறி இருக்கிறது.**

யாழ் மாவட்ட உள்ளூராட்சித் தேர்தலில் அப் போட்டி நன்கு பிரதிபலிக்கிறது.

**அதிகாரம் இல்லாத உள்ளூராட்சிச் சபைகளைக் காட்டி, அவற்றைத் கைப்பற்றினால் 'ஆணைப் பெண்ணாக்கலாம், பெண்ணை ஆணாக்கலாம்' என்று கூறாத குறையாக தமிழ்க்கட்சிகள் பிரசாரம் செய்துவருகின்றன.**

சாட்சாத் துரையப்பாவின் அதே அணுகுமுறை முன்னாள் போராளிகளான இந்நாள் கட்சிகளால் யாழ் குடாநாட்டில் புத்துயிர் பெற்றுள்ளது.

குதிரைக்கு முன்னால் கொள்ளுகட்டித் தொங்கவிட்டிருக்கும். கொள்ளு தன் வாய்க்கு எட்டும் என்ற நப்பாசையில் குதிரை களைத்து களைத்து ஓடிக்கொண்டிருக்கும். அதேபோல யாழ் குடாநாட்டில் உள்ள வாக்காளர்கள் முன்பாக, சலுகைகள் என்ற எலும்புத்துண்டுகள்- கொள்ளுக்குப் பதிலாக தொங்கவிடப்பட்டுள்ளன.

**இன்று தமிழ்க் கட்சிகள் கூறும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படப் போவதில்லை. வேலைவாய்ப்புக்கள், மீனவர்களுக்கான நிவாரணங்கள், மீன்பிடிக்க உள்ள தடைகளை விலக்குதல், நிவாரண உதவிகள், விவசாயிகளுக்கு உள்ள சுமைகளை அகற்றுதல் போன்றவை உள்ளூராட்சிச் சபைகளுக்கு உரிய பொறுப்புக்களல்ல.**

தமிழ்க் கட்சிகள் கூறுவதுபோன்று, மக்களின் அன்றாடப் பிரச்சனைக்கு உள்ளூராட்சிச் சபைகளால் பரிகாரம் காணவும் முடியாது. தெரிந்தே பொய் சொல்கின்றன தமிழ்க் கட்சிகள்.

தெருக்களைத் திருத்தும் விடயத்தில்கூட உள்ளூராட்சிச் சபைகளுக்கு முழு அதிகாரமும் கிடையாது. சில பிரதான நெடுஞ்சாலைகள் உள்ளூராட்சி சபைகளின் அதிகாரத்திற்கு உட்பட்டவையல்ல.

எனவே உள்ளூராட்சி சபை அன்றாடப் பிரச்சனைகளுக்கு பரிகாரம் காணும் என்பது மக்களை முட்டாள்களாக்கவும் தமிழ்க் கட்சிகள் துணிந்துவிட்டன என்பதற்கு துல்லியமான உதாரணமாகும்.

**மொத்தத்தில், யாழ் மாவட்ட உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் தமிழ்க் கட்சிகள் அனைத்துமே, தென்னிலங்கை ஆளும் கட்சிகளின் முன்னாள் தமிழ் பிரமுகர்கள், ஆதரவாளர்கள் ஆகியோரின் வெற்றிடத்தையே நிரப்புகின்றன.**

பொதுஜன முன்னணி ஆட்சியிடம் போதிய துரையப்பாக்கள் இல்லையென்ற குறையை தமிழ்க் கட்சிகள் தீர்த்து வைத்துள்ளன. வரலாற்றின் குப்பைத் தொட்டியில் வீசப்பட்டவர்கள், முகவரி இல்லாமல் போய்விட்டதால், அந்த வெற்றிடத்தை தமிழ்க் கட்சிகள் நிரப்புகின்றன.

**இதனை தமிழர் அரசியல் தலைமைக்கான வெற்றிடம் நிரப்பும் முயற்சியாகவும், ஜனநாயகம் என்பதின் வரைவிலக்கணமாகவும் ஆட்சியாளர்கள் பிரசாரம் செய்யத் தொடங்கியுள்ளனர்.**

ஆனால், வரலாறு கூறும் படிப்பினையை அலட்சியம் செய்துள்ள இன்றைய தமிழ்க் கட்சிகளின் எதிர்காலமும் ஒரு படிப்பினையாக மாறப்போவது மட்டும் உண்மையாகும். ஏனெனில் மக்கள் தற்காலிகமாக ஏமாந்தாலும்கூட, தொடர்ந்து ஏமாந்ததாக சரித்திரம் இல்லை, சலுகைகளை நீட்டி ஆசைகாட்டியவர்கள் சருகுகளாக காணாமல் போனதுதான் இங்கும் சரித்திரம்.

---

**சந்திக்கு வராத சங்கதிகள்** ~நக்கீரன்~

## தேர்தல் கண்காணிப்புக் குழுவின் திருகுதாளம்

தேர்தல் கண்காணிப்புக் குழு என்ற பெயரில் உள்ள ஒரு அமைப்பு அறிக்கை ஒன்றை தயாரித்து தமிழ்க் கட்சிகளுக்கு அனுப்பி இருந்தது.

**"1981ம் ஆண்டின் பின்னர் யாழ் குடாநாட்டு மக்கள் உள்ளூராட்சித் தேர்தலில் பங்குபெற்றுகின்றனர். ஜனநாயக நீரோட்டத்தில் தமிழ் மக்களை இணைக்கவே இத் தேர்தலில் போட்டியிடுகிறோம்.**

புலிகளின் அச்சுறுத்தல் மத்தியிலும் போட்டியிடுகிறோம்."

போன்ற வாசகங்கள் அந்த அறிக்கையில் காணப்பட்டன. அந்த அறிக்கையைத்தான் சில பத்திரிகைகள் 'தமிழ்க் கட்சிகள் ஒப்பந்தம்' என்று செய்தி போட்டிருந்தன. அல்லது குறிப்பிட்ட கண்காணிப்புக்குழு அவ்வாறு செய்தி கொடுத்து ஏமாற்றியதோ தெரியவில்லை.

கூட்டு அறிக்கை ஒன்றை தமிழ்க் கட்சிகள் வெளியிடவேண்டும். யாழ் குடாநாட்டில் தங்களுக்குள் மோதிக் கொள்வதில்லை என்று அந்த அறிக்கை மூலம் தெரிவிக்க வேண்டும் தமிழ்க் கட்சிகளிடம் கேட்டது தேர்தல் கண்காணிப்புக் குழு.

கூட்டு அறிக்கையை தாமே தயாரித்து ஃபக்ஸ் மூலமாக தமிழ்க் கட்சிகளுக்கு அனுப்பி வைத்தது தேர்தல் கண்காணிப்புக் குழு.

தேர்தல் நீதியாக நடக்கிறதா? குளறுபடிகள் நடக்கின்றனவா? என்பதை கண்டறிவது தான் தேர்தல் கண்காணிப்புக் குழுவின் பணி.

அவ்வாறான பணியில் ஈடுபடும் குழு சந்தேகத்துக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். ஆனால், குறிப்பிட்ட தேர்தல் கண்காணிப்புக் குழுவின் முதல் முயற்சியே, அதன் சுயரூபத்தை இனம் காட்டிவிட்டது.

யாழ் குடாநாட்டில் அரசாங்கம் என்ன நோக்கத்துக்காக தேர்தல் நடத்துகிறதோ, அந்த நோக்கத்தை மூடிமறைத்து ஜனநாயக சாயம் பூசும் முயற்சியில் குறிப்பிட்ட கண்காணிப்புக்குழு குதித்திருக்கிறது.

யாழ் மக்களை ஜனநாயக நீரோட்டத்தில் இணைப்பதற்கான தேர்தல் என்று அபிப்பிராயம் கூறும் பணியை இவர்களுக்கு யார் கொடுத்தது?

புலிகளால் தங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதாக தேர்தலில் போட்டியிடும் எந்தவொரு தமிழ்க் கட்சியும் குறிப்பிட்ட அறிக்கை வெளியாகும்வரை யாரிடமும் புகார் செய்யவில்லை.

அப்படியிருக்க, புலிகளது அச்சுறுத்தல் மத்தியில் போட்டியிடுகிறோம் என்று தமிழ்க் கட்சிகளை கூட்டாக கூறவைக்க குறிப்பிட்ட கண்காணிப்புக்குழு கரிசனை காட்டியது ஏன்?

யாழ் குடாநாட்டில் இறுதியாக உள்ளூராட்சித் தேர்தல் நடந்தது 1981ல் என்று கண்காணிப்புக் குழு கூறியிருப்பது தவறான தகவல். 1983 மே 13ல்தான் யாழ் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெற்றன. 90 வீதமான மக்கள் அத் தேர்தலை நிராகரித்திருந்தனர்.

**தனது பணிகளுக்கு தொடர்பில்லாத, தப்பான விபரங்கள் அடங்கிய ஒரு அறிக்கையைத் தயாரித்து, அதிலே தமிழ்க் கட்சிகளை கையெழுத்திடச் செய்ய குறிப்பிட்ட குழு ஏன் முயன்றது?**

அங்கேதான் இருக்கிறது விஷயம். குறிப்பிட்ட தேர்தல் கண்காணிப்புக் குழுவில் உள்ள சிலர் அரசாங்க ஆதரவாளர்கள்.

சாள்ஸ் அபயசேகரா என்பவரும் இதில் ஒரு முக்கியஸ்தர். இவர்தான் தமிழ் மொழி அமுலாக்கலுக்காக அரசால் நியமிக்கப்பட்ட குழுவின் தலைவர்.

ஆனால் குறிப்பிட்ட தேர்தல் கண்காணிப்புக் குழுவின் கடிதத் தலைப்பில் ஆங்கிலமும், சிங்களம் மட்டுமே காணப்படுவது சாள்ஸ் அபயசேகராவின் சிறப்புக்குச் சான்று(?!)

இன்னொரு தகவல், தமிழ் மொழி ஆணைக்குழுவுக்கு சாள்ஸ் அப்யசேகராவை ஜனாதிபதியிடம் சிபாரிசு செய்தவர் கலாநிதி நீலன் திருச்செல்வம். பொதுஜன முன்னணி ஆட்சிக்கு விசுவாசமாக இருப்பார் என்ற உத்தரவாதத்தின் அடிப்படையிலேயே தமிழ் மொழி ஆணைக்குழுவுக்கு தமிழ் தெரியாத அவரைத் தலைவராக்கினர்.

அதே சாள்ஸ் அபயசேகரா உட்பட அரசுக்கு சார்பானவர்களைக் கொண்ட தேர்தல் கண்காணிப்புக் குழுதான் அவசரப்பட்டுதன் சுயரூபத்தை காட்டியிருக்கிறது.

தங்களுக்குள் மோதிக் கொண்டிருக்கும் தமிழ்க் கட்சிகளையும், அவர்களது மோதலையும் அரசும், அதன் சார்புக் குழுக்களும் எப்படியெல்லாம் பயன்படுத்துகின்றன என்பதற்கு மற்றொரு உதாரணம் கிடைத்திருக்கிறது.

தமிழ்க் கட்சிகளுக்கிடையே வன்முறையை தவிர்க்கும் அறிக்கை என்ற பெயரில், யாழ் தேர்தலை நியாயப்படுத்தவும், புலிகளை ஜனநாயக விரோதிகளாக தமிழ்க் கட்சிகளைக் கொண்டே கூறவைக்கவும் தேர்தல் கண்காணிப்புக் குழு முயற்சி செய்துள்ளது.

புளொட், ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ ஆகிய கட்சிகள் அதில் கையெழுத்திட்டுள்ளன. ஈ.பி.டி.பி. மட்டும் கையெழுத்திட மறுத்து விட்டது.

ஆனால், இத்தனைக்கும் யாழ் வாக்காளர்களிடம் மேற்கண்ட கட்சிகள் அரசைத்தான் கண்டித்துப் பேசுகின்றன.

புலிகளுடன் தங்களுக்கு பிரச்சனையில்லை என்றும் சாடைமாடையாக கூறவும் செய்கின்றன.

குறிப்பிட்ட அறிக்கையில் தாம் கையெழுத்திடவில்லை என ஈ.பி.டி.பி மறுப்பு விட்டுள்ளது. ஆனால் இலங்கை வானொலியிலும், பத்திரிகையிலும் சகல தமிழ்க் கட்சிகளும் (ஈ.பி.டி.பி உட்பட) கையெழுத்து போட்டுள்ளதாக செய்தி கொடுக்கப்பட்டதன் நோக்கம் என்ன? தேர்தல் கண்காணிப்புக் குழுவே திருகுதாளக் குழுவாக உள்ளபோது, இதன் கண்காணிப்பை எப்படி நம்ப முடியும்?

பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்ற கதைதான்.

# கொள்ளை ராணி பூலான்தேவி

**78**

தருவது **ரசிகன்**

பூலான் தேவியும் மான் சிங்கும் அன்றிரவு ஒன்றாகவே தூங்கினர். காலையில் எழுந்தபோது பூலானின் முகம் பிரகாசமாக இருந்தது. கலைந்து கிடந்த கூந்தலை சரிப்படுத்திக்கொண்டாள்.

மான் சிங் அசந்து தூங்கிக் கொண்டிருந்தான். மெல்லக் குனிந்து அவன் நெற்றியில் மென்மையாக முத்தமிட்டாள்.

சட்டென்று மான் சிங் கண்களைத் திறந்து பார்த்து, பூலானை நேருக்கு நேர் பார்க்க சங்கடப்பட்டான். எழுந்து அமர்ந்துகொண்டான்.

பூலான் அவன் பக்கமாக நெருங்கி, அவன் மார்பை தன் விரல்களால் நீவி விட்டாள்.

"துர்க்கையம்மாவின் அருளால் மறுபடி சந்திப்போம்" என்றாள். அவள் குரல் தழுதழுத்தது. மான் சிங்கின் கண்களிலும் ஈரம்.

பூலானும், பல்வான் சிங்கின் காதலியான மீராவும் புறப்பட்டனர். பூலான் கைத்துப்பாக்கி ஒன்றையும், ரவைகளையும் தனக்குத் துணையாக எடுத்துச் சென்றாள்.

பாபாவும், மான் சிங்கும் விடை கொடுத்தனர். மான் சிங்கால் பூலானின் பிரிவைத் தாங்கவே முடியவில்லை. அழுது விடுவான் போலிருந்தது.

பூலான் இப்போது பிரிவைத் தாங்கும் அளவுக்கு மனதை திடப்படுத்தி இருந்தாள். இரவு மான் சிங்குடன் பகிர்ந்து கொண்ட இதமான நிகழ்வுகள் அவள் மனதை பஞ்சுபோலாக்கி இருந்தன.

பூலானும், மீராவும் நேராக பம்பாய்க்குச் சென்றனர். பூலானிடம் பணமும், நகைகளும் இருந்தன. அதனால் செலவுக்கு சிரமம் இருக்கவில்லை.

உத்தரப்பிரதேசம் எங்கும் பூலானை பொலிசார் தேடுவதாகவும், விரைவில் பூலானை பிடித்துவிடலாம் என்று நம்புவதாகவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தார்.

"பூலான் தேவியும் அவள் கோஷ்டியும் பதுங்கி இருக்கும் இடத்தை கண்டுபிடித்து நெருங்கிவிட்டோம். இன்னமும் சில நாட்களுக்குள் பூலான் உயிருடனோ, அல்லது பிணமாகவோ கிடைப்பாள்!" என்று உத்தரப்பிரதேச பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரும் கூறியிருந்தார்.

இச் செய்திகளை மீரா பூலானுக்குப் படித்துக் காண்பித்தபோது, அடக்க மாட்டாமல் சிரித்துவிட்டாள் பூலான்.

"இப்படியுமா பொய் சொல்லுவார்கள்? இதற்காகவே நிற்கவைத்துச் சுடலாம்" என்றாள்.

தினமும் பத்திரிகை வாங்கி தன்னைப் பற்றிய செய்திகளை படிக்கச்சொல்லி கேட்பது, பூலானுக்கு சுவாரசியமான பொழுது போக்காகிவிட்டது.

சிறிய வீடொன்றை வாடகைக்கு பிடித்து தங்கியிருந்தனர். அக்காவும், தங்கையும் என்று சொல்லித்தான் தங்கியிருந்தார்கள்.

மூன்று மாதகாலம் வரை பூலானும், மீராவும் யாருக்கும் சந்தேகம் வராதபடி நாட்களை கடத்திவிட்டனர்.

பூலானும், மீராவும் கடைத்தெருவுக்கு சென்றுவந்தபோது, எதிரே வந்த ஒருத்தன் மீராமேல் வேண்டுமென்றே மோதிக் கொண்டு சென்றான்.

பூலானுக்கு சட்டென்று கோபம் தலைக்கேறியது. மீரா வேகமாக பூலானின் மணிக்கட்டில் பிடித்து ஒரு அழுத்து அழுத்தியதால்தான், பூலான் நிதானமானாள்.

பூலான் நின்று தன்னை நோக்கி திரும்பி முறைத்ததை அந்த போக்கிரியும் கண்டுவிட்டான்.

விகாரமான சிரிப்புடன் எட்ட நின்றபடியே; "ஏதோ பூலான் தேவி என்ற நினைப்பு, இந்த முறைப்பு முறைக்கிறியே, போங்கடி..." அலட்சியமாய் கூறிக் கொண்டு போய்விட்டான்.

பூலானும், மீராவும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்கொண்டனர்.

பொலிசாரின் தேடுதல் வேட்டைகள் படிப்படியாக ஓய்ந்தன. பூலானுக்கு நகர வாழ்க்கையில் சலிப்பு தட்டிவிட்டது.

தனிக்காட்டு ராணிபோல திரிந்துவிட்டு நகரில் பணிந்தும், பயந்தும் நடமாடுவது வெறுப்பாக இருந்தது.

முன்னரே கூறிவைத்ததுபோல மான் சிங் ஒரு ஆளை அனுப்பி, அடிக்கடி பூலானுடன் தகவல்களை பரிமாறிக் கொண்டிருந்தான்.

மூன்று மாதத்தின் பின்னர் அனைவரும் ஒன்றுகூடவேண்டும் என்று மான் சிங்கைவிட்டு பிரியமுன்னர் பூலான் கூறியிருந்தாள். தங்கள் கோஷ்டி ஆட்களுக்கு மான் சிங் அத்தகவலை தெரிவித்திருந்தான்.

எங்கே கூடுவது? என்ற தகவலை மட்டும் பின்னர் தெரியப்படுத்துவதாக கூறியிருந்தான்.

மான் சிங்கின் ஆள் பூலானிடம் வந்து சேர்ந்தான். எந்த இடத்தில் மறுபடி ஒன்று கூடுவது என்பதை பூலானிடம் கேட்டு வரும்படி மான் சிங் அவனை அனுப்பிவைத்திருந்தான்.

பூலானிடம் இருந்து வரும் தகவலுக்காக மான் சிங் காத்திருந்தான்.

ஆனால், மான் சிங் அனுப்பிய ஆளுடன் பூலானும் மீராவும் மான் சிங் இருக்கும் இடத்துக்கே சென்றுவிட்டனர்.

பூலானைக் கண்டதும் மான் சிங் திக்குமுக்காடிப் போனான். பூலானை எதிர்பார்க்கவே இல்லை.

கலெளி கிராமத்தில் மறுபடி கூடுவது என்று தங்கள் ஆட்களுக்கு தகவல் அனுப்பச் சொன்னாள் பூலான்.

மறுபடி காக்கி உடைக்கு மாறினாள். துப்பாக்கி தோளில் தொங்கிற்று. "இப்போதுதான் திருப்தியாக இருக்கிறது" என்றாள்.

கலெளி கிராமத்தில் பூலான் கோஷ்டியினர் ஒன்று கூடும் செய்தி, எட்டக்கூடாத இடம் ஒன்றுக்கும் எட்டியது. மல்கான் சிங்.

கொள்ளைராஜன் என்று அழைக்கப்படுபவன்.

அவனது குழுவில் எழுநூறுக்கு மேற்பட்ட ஆட்கள் இருந்தனர்.

பாபாவுக்கு அடுத்தபடியாக கொள்ளைக் கோஷ்டிகளுக்குள் பிரபலமும், மரியாதையும் பெற்றிருந்தவன் மல்கான் சிங்.



பூலான்

பூலானின் பெயர் தன்னைவிடப் பிரபலமாவதால், மல்கான் சிங்குக்கு உள்ளூரப் பொறாமையாக இருந்தது.

சிறு குழுவை வைத்துக்கொண்டு, அதுவும் ஒருபெண் சம்பள் பள்ளத்தாக்கின் ராணியென்று பெயர் எடுத்துவிட்டாள்.

பத்திரிகைகளைப் பிரித்தால் பூலான். வானொலியைத் திறந்தால் பூலான்.

ஏனைய கொள்ளைக் கோஷ்டிகளும் பூலானின் பெயரைக் கேட்டால் பயம் கொள்ளத் தொடங்கியிருந்தன என்பதையும் மல்கான் சிங் அறிந்திருந்தான்.

பூலான்மீது மல்கான் சிங் பொறாமை கொண்டதற்கு இன்னொரு காரணமும் இருநதது.

பாபாவின் பின்னர் உத்தரப்பிரதேச கொள்ளைக் கோஷ்டிகளை கட்டியாளக் கூடியவன் தான் ஒருவன் மட்டுமே என்று மல்கான் சிங் நினைத்திருந்தான்.

ஆனால், இப்போது அந்த இடத்தை பூலான் பிடித்து விடுவாள் போல இருந்தது.

மல்கான் சிங்கின் பொறாமைக்கு எண்ணெய் வார்ப்பது போன்று வந்து சேர்ந்தார் உத்தரப்பிதேச அரசியல்வாதி ஒருவர்.

அந்த அரசியல்வாதி தேர்தலில் வெற்றி பெறுவதற்கும் மல்கான்தான் உதவினான்.

மல்கானுக்கு பயந்து அந்தப் பிரதேச மக்கள் அவன் கூறிய நபரையே வெற்றிபெற வைப்பார்கள்.

அந்த வெற்றிக்கு பரிசாக வெளிநாட்டிலிருந்து இறப்பர் படகொன்றை இறக்குமதி செய்து கொடுத்திருந்தார் அந்த அரசியல்வாதி.

பொலிசாரிடம் மல்கானின் ஆட்கள் மாட்டிக்கொண்டால், உடனே தலையிட்டு வெளியே எடுத்துவிடுவதும் அவர்தான்.

மல்கான் சிங்குக்கு அரசியல் பின்பலம் இருந்தமையால், அந்தப்பிரதேச பொலிசாரும் அவன் ஆட்களை நெருங்கவே பயந்தனர்.

மல்கான் சிங்கிடம் ஓர் உதவி கேட்டு வந்திருந்தார் அரசியல்வாதி.

பூலான் தேவியை பிடிக்க முடியாமையால் காங்கிரஸ் ஆட்சியை எதிர்க்கட்சிகள் அர்ச்சனை செய்கின்றன.

உயர்ந்த சாதிக்காரர்களும் காங்கிரஸ் கட்சிமீதும், ஆட்சிமீதும் கடும் சலிப்புக் கொண்டிருக்கிறார்கள்.

பூலானால் கொல்லப்பட்ட தங்கள் சாதிக்காரர்களையிட்டு அரசாங்கம் கரிசனை காட்டவில்லை என்பது அவர்களது குற்றச்சாட்டு.

இப்படியே போனால் அடுத்த தேர்தலில் வாக்குக்கேட்டு செல்லவே முடியாது. நிலமை மோசமாகிவிடும்.

அதனால் பூலான் விவகாரத்தில் அரசியலும் புகுந்தது.

மல்கான் சிங்கிடம் உள்ள உறவைப் பயன்படுத்தி, பூலானை தீர்த்துக்கட்டுமாறு அந்த அரசியல்வாதிக்கு மேலிட உத்தரவு கிடைத்திருந்தது.

அந்த உத்தரவுப்படி காரியத்தை முடித்துக்கொடுத்தால் கட்சியில் செல்வாக்குப் பெறலாம் என்பதால், சுறுசுறுப்பானார் அரசியல்வாதி.

"பூலானை பிணமாக ஒப்படை, உனக்கு தேவையான பணம் கிடைக்கும். உனக்குப் போட்டியும் இல்லாமல் போகும். என்ன சொல்கிறாய்?"

ஒரு கல்லில் இரண்டு மாங்காய்கள். மல்கான் உடன்பட்டான்.

பூலானை ஒழித்துக்கட்டும் பொறுப்பை தனக்கு நம்பிக்கையான ஆளான சோப்ரான் என்பவனிடம் ஒப்படைத்தான்.

சோப்ரான் இலேசுப்பட்டவனல்ல. தங்கள் ஆட்களில் ஒருத்தனை சுட்டுக்கொன்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரை, பொலிஸ் நிலையத்துக்குள்ளேயே புகுந்து சுட்டுக் கொன்றவன்.

அதிலிருந்து அவன்பேர் பிரபலம் பெற்றிருந்தது. ஈவிரக்கமற்ற கொலைகாரன்.

பூலான் கோஷ்டியினர் எங்கே இருக்கின்றனர்? என்ற தகவலை திரட்ட ஆரம்பித்தனர் மல்கான் சிங் ஆட்கள்.

அப்போதுதான் பூலானும் அவள் ஆட்களும் கலெளி என்ற கிராமத்தில் ஒன்றுகூடப்போவதாக தகவல் எட்டியது.

"பூலானும், மான் சிங்கும் நிச்சயமாக அங்கு வருவார்கள். இருவரையும் ஒன்றாகவே தீர்த்துக் கட்டிவிடு. இருவரில் ஒருவர் தப்பினாலும் ஆபத்து. அடிபட்ட புலியின் சீற்றத்தை நாம் சந்திக்கும் நிலை ஏற்பட்டுவிடும்" என்று சோப்ரானிடம் எச்சரித்தான் மல்கான் சிங்.

கலெளி கிராமத்திற்கு தன் ஆட்கள் மூன்று பேருடன் சென்றான் சோப்ரான்.

அக் கிராமத்தவர்கள் மல்கான் சிங் கூட்டத்தினருக்கும் பழக்கமானவர்கள் என்பதால் சோப்ரானுக்கு வரவேற்பு இருந்தது.

அக்கிராமத்தில் பூலான் கோஷ்டியைச் சேர்ந்த லால்தூ, ராம்சங்கர் ஆகிய இருவர் தங்கி இருந்தனர்.

பூலானின் கட்டளைப்படி அங்கு வந்து காத்திருந்த இருவரையும், கிராமத்தினர் சோப்ரானிடம் அறிமுகம் செய்துவைத்தனர்.

சோப்ரானுக்கு பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாகிவிட்டது.

லால்தூ, ராம்சங்கர் இருவருடனும் நெருக்கமாகிக் கொண்டான். பூலானைப் பற்றி அவர்களிடம் புகழ்ந்து பேசினான்.

பூலானும், மான் சிங்கும் எப்போது வருகிறார்கள் என்ற தகவலை அவர்களின் வாயில் இருந்து கறந்துகொண்டான்.

அதேசமயம் கலெளி பொலிஸ் நிலைய உதவி இன்ஸ்பெக்டர் யாதவ் முன்பாக தகவல் கூறும் ஆள் ஒருவன் பணிவாக நின்றுகொண்டிருந்தான்.

"உண்மையாகத்தான் சொல்கிறாயா?" என்றார் யாதவ்.

"ஆம் ஐயா. பூலான் தேவியும் மான் சிங்கும் மேலும் சிலரும் காலெணி கிராமத்தில் தங்கி இருக்கிறார்கள். மான் சிங்குக்கு நம்பிக்கையான ஆள் ராம் சங்கரை நான் கண்ணால் கண்டது மெய்" என்றான்.

"பூலான் தேவியைக் கண்டாயா? அதைச் சொல்"

அவன் சிறிது தயங்கி, "ஆம் ஐயா. சேலை கட்டிக்கொண்டு முக்காடு போட்டுக் கொண்டு வந்திருக்கிறாள்" என்றான்.

நன்கு பயிற்சி பெற்ற பதினைந்து பேருடன் புறப்பட்டார் சப். இன்ஸ்பெக்டர் யாதவ்.

அனைவரும் இயந்திரத் துப்பாக்கிகள் வைத்திருந்தனர்.

கலெளி கிராமத்தை நோக்கி ஜீப் வண்டிகள் புழுதியைக் கிளப்பிக் கொண்டு சீறிச் சென்றன. அதே சமயம் சோப்ரான் பூலானை வேட்டையாடப்போகும் நேரத்துக்காக இதயம் படபடக்கக் காத்திருந்தான்.

கலெளி கிராம எல்லையில் ஜீப்புக்கள் மூச்சை நிறுத்தின.

பொலிசார் இறங்கினர். தகவல் கொடுப்போன் வழிகாட்டிச்செல்ல முன்னேறினர்.

சப் இன்ஸ்பெக்டர் யாதவுக்கு தன் பதவி உயர்வு நிச்சயம் என்பதை நினைக்க மகிழ்ச்சியாக இருந்தது.

ஆனால் நடந்ததோ?

(தொடர்ந்து வரும்)

**கடந்த வாரம்**

**பூலான் குழுவினரின் நடவடிக்கைகளால் பொலிசாரின் தேடுதல் வேட்டை தீவிரமானது. கொள்ளைக் கோஷ்டிகள் பல பொலிசாரிடம் சிக்கின. பாபா தலைமையில் கொள்ளைக் கோஷ்டிகளின் மாநாடு நடந்தது. சில காலம் தங்கள் நடவடிக்கைகளை நிறுத்த முடிவு செய்கின்றனர்.** இனி...

## காம்ளியின் காதலி



இந்தியக் கிரிக்கெட் வீரர்களில் விளையாட்டுப் பிள்ளை வினோத் காம்ளி. "பெண்களுடன் அதிகம் சுற்றும் ஆசாமி. அதனால் நள்ளிரவில் வந்து எங்கள் தூக்கத்தைக் கெடுக்கிறார்" என்று சக வீரர்களே புகார் செய்தது உண்டு. அதனால் தண்டனையாக அணியில் இருந்து சிலகாலம் ஒதுக்கி வைத்திருந்தார்கள்.

வினோத் காம்ளிக்கு திருமணமாகி விட்டது. திருமணத்தின் முன்னர் வினோத் காம்ளி நகமும் சதையுமாகப் பழகியவர்களில் ஒருவர் நடிகை சகாரிகா சோனி.

காம்ளிக்கும் தனக்கும் கல்யாணம் நடக்கப்போவதாக சகாரிகா கனவு ஏதும் காணவில்லை. ஆனாலும் திருமணத்தின் பின்னரும் காம்ளி தன்னுடன் நண்பராக இருப்பார் என்று நினைத்தார் சகாரிகா.

என்ன காரணத்தாலோ காம்ளி சகாரிகாவை விட்டுத் தூரவிலகத் தொடங்கினார்.

"சகாரிகாவை நான் காதலித்ததே கிடையாது," என்று காம்ளி சொன்னதால் கொதித்துப்போனார் சகாரிகா.

மும்பாய் சஞ்சிகை ஒன்று சகாரிகா கொதிக்கக் கொதிக்க கொட்டிய சங்கதிகளை பிரசுரித்திருக்கிறது.

"முதன் முதலில் நாங்கள் இருவரும் கண்டதும் கவரப்பட்டதும் ஒரு ஹொட்டலில் தான்.

காம்ளி என்னுடன் பழகியது போல பல பெண் நண்பிகளுடன் பழகினார். எனக்கும் அது தெரியும். கிரிக்கெட்டைவிட பெண்களுடன் விளையாடுவது அவருக்கு ரொம்பப் பிடிக்கும்.

நானும் காம்ளியும் உடல் ரீதியாகவும் தொடர்பு வைத்திருந்தோம். இது காம்ளியின் கல்யாணத்தின் முன்னர் நடந்த சங்கதி.

வினோத் காம்ளியின் மனைவி நோயல்லா, பொல்லாத பெண்மணி. காம்ளிக்கு மனைவியைக் கண்டால் கிடுகிடு நடுக்கம். அதுதான் எங்கள் தொடர்பை மறுக்கிறார்.

காம்ளிக்கு அழகான தோற்றம் இல்லையே தவிர, ஆள் ரொம்ப அபாரமான பேர்வழி. மிகச் சூடானவர். செகஸியான மனிதர். இப்போதும் நான் அவரை நேசிக்கிறேன்," என்று அதிரடி பேட்டி கொடுத்திருக்கிறார் சகாரிகா சோனி. காம்ளி என்னாகப் போகிறாரோ!

## எல்லோரும் டயானா

இளவரசி டயானாவின்மீதான பிரிட்டிஷ் மக்களின் அபிமானம் அதிகரித்து வருகிறது.

'டயானா' என்ற பெயரில் சஞ்சிகையும் வெளியாகி உள்ளது. டயானாவுடன் தொடர்புடைய சம்பவங்கள் அதில் வெளியாகின்றன.



பிரிட்டனில் புதிதாகப் பிறக்குப் பெண் குழந்தைகளுக்கு டயானா என்று பெயர் சூட்டத் தொடங்கியுள்ளனர்.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் மட்டும் 29 குழந்தைகளுக்கு டயானா என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதற்கிடையே டயானா கர்ப்பம் என்று கூறிய ஃபிரான்ஸ் டாக்டர்களை பிரிட்டிஷ் அரச குடும்பம் பணத்தால் வாங்கிவிட்டது என்று புகார் கிளம்பியுள்ளது.

டயானா இறந்தபோது அவர் கர்ப்பமாக இருந்ததாக செய்திகள் வெளியாகின. அதனையிட்டு யாரும் அதிர்ச்சி அடையவில்லை.

டயானாவும், டோடி அல்ஃபயட்டும் முத்தமிட்டபடி நெருக்கமாக இருந்த புகைப்படங்களும், அவர்கள் இருவரும் தனிமையைக் கப்பலிலும், தனி பங்களாவிலும் கழித்த செய்திகளும் முன்னரே வெளியாகி இருந்தன.

பிரிட்டிஷ் மக்களின் நாகரிகத்தில் அது ஒரு தப்பான சமாச்சாரமல்ல.

ஆனாலும் முஸ்லிம் ஒருவருடன் டயானா பழகி கர்ப்பமானார் என்பது அரச குடும்பத்தினருக்கு கௌரவக் குறைச்சலாக இருந்ததாம். எதிர்கால மன்னரான வில்லியம்ஸ்சுக்கும் அது ஒரு பிரச்சனையாகும் என்று நினைத்தனராம்.

அதன் விளைவாக பிரிட்டிஷ் அரச குடும்பம் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாகவே ஃபிரான்ஸ் மருத்துவமனை வட்டாரங்கள் மறுப்பு விட்டுள்ளனவாம்.

அமெரிக்காவின் பிரபல சஞ்சிகையில் டயானா கர்ப்பம் என்ற தகவல் வெளியாகி பல மாதங்கள் சென்றுவிட்டன. ஃபிரான்ஸ் மருத்துவமனை வட்டாரங்கள் அதனை அப்போது மறுக்கவில்லை. இப்போதுபல மாதங்களின் பின்னரே மறுத்துள்ளன. அதுதான் பலத்த சந்தேகத்தை தோற்றுவித்துள்ளதாம்.

## கொலைக்கதை அனுபவம்

தங்கள் அனுபவங்களை பிரபலங்கள் எழுதுவதும் அவை புத்தகமாக வெளிவருவதும் புதுமையல்ல.



ஆனாலும் எந்தெந்த அனுபவங்களையெல்லாம் விபரிப்பது ஏன்று ஒரு விவஸ்தை வேண்டாமா?

அமெரிக்காவில் புளோரிடா மாநிலத்தில் வெளியான புத்தகம் ஒன்று அமெரிக்காவையே பரபரப்புக்கு உள்ளாக்கி விட்டது.

கொலைகாரன் ஒருவன் தன் அனுபவங்களை விலாவரியாக விபரித்து எழுதிய புத்தகம் தான் பரபரப்புக்குக் காரணம். 5 கல்லூரி மாணவர்களை குத்திக் கொலை செய்தான். தண்டனை பெற்று சிறையில் இருக்கிறான்.

ஐந்து கொலைகளையும் எப்படிச் செய்தான் என்று விபரித்துள்ளான்.

புத்தகம் வெளியானதும் புகார்கள் கிளம்பின. புளோரிடா மாநில அரசு புத்தகத்துக்குத் தடை விதித்தது. ஏற்கனவே விற்பனையான புத்தகங்களுக்கான பணத்தை புளோரிடா அரசிடம் ஒப்படைக்குமாறும் அந்த மாநில நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இப்படியே போனால் எத்தகைய அனுபவங்கள் எல்லாம் வெளியாகித் தொலைக்கப் போகிதோ?.

## வீரப்பன் கொண்டாட்டம்

தமிழ்நாட்டில் சந்தனக் கடத்தல் வீரப்பன் விவகாரத்தில் தமிழக அரசு நாடகமாடுகிறது என்பது 'முரசு' முன்னரே கூறிய கருத்துத்தான் .



தமிழக பத்திரிகைகளும் அதே சந்தேகத்தை கிளப்பி இருந்தன. அதன் பின்னர்தான் வீரப்பனைப் பிடிக்க அதிரடிப்படையை காட்டுக்குள் அனுப்புவது போல தமிழக அரசு பாவ்லா காட்டியது.

"இதோ இன்னமும் சில வாரங்களுக்குள் வீரப்பன் நம் கையில்" என்று அதிரடிப்படை பொறுப்பதிகாரி காளிமுத்து அறிக்கை விட்டார்.

அது நடக்காத கதை என்றும், மழைக் காலம் தொடங்கப்போகிறது என்றும் தமிழக பத்திரிகைகள் சில எழுதின. நடவடிக்கை எடுத்துபோல காட்டத்தான் இந்த அவசர நாடகம் என்றும் தெரிவித்தன.

இதற்கிடையே தி.மு.க. தொலைக்காட்சியான சன் ரி.வியில், வீரப்பனைப் பிடிக்க அதிரடிப்டை எடுக்கும் நடவடிக்கைகள் என்ன? எங்கெங்கு செல்லப்போகிறார்கள்? என்ற தகவல்கள் கூறப்பட்டுக் கொண்டே இருந்தன.

இவை யாவும் வீரப்பன் விவகாரத்தில் நடவடிக்கை எடுக்க தமிழக அரசு மனப்பூர்வமாக விரும்பவில்லை என்பதையே காட்டின.

வீரப்பனைக் கோபப் படுத்தினால் அவன் சில இரகசியங்களை உளறலாம். ஜெயலாலிதாவை திட்டிப் பேட்டி கொடுக்கச் சொன்னவர் யார்? என்ற தகவலை வீரப்பன் கூறிவிட்டால் தமிழக அரசின் நிலை தர்மசங்கடமாகிவிடும். அதனால் தான் வீரப்பனுக்கும் நோகாமல், தமிழக மக்களுக்கும் சந்தேகம் வராமல் வீரப்பனுடன் காண்ணா மூச்சி ஆடுகிறது தமிழக அரசு.

இந்திய பாராளுமன்ற தேர்தல்கள் முடியும்வரை வீரப்பனுக்கு கொண்டாட்டம்தான். யாரும் தேடிச் செல்ல மாட்டார்கள்.

# ஒன்பது மாத சமர்! 36 ஆயிரம் படைகள்

# வன்னிச் சமர் குறித்து புலிகள் தெரிவிப்பு

'ஜயசிக்குறுய்' படையினர் கனகராயன் குளத்தை கைப்பற்றிவிட்டதாக செய்திகள் வெளியாகி இருந்தன.

இதுவரை (14.01.98) நிலவரப்படி கனகராயன்குளத்திற்கு கிழக்கே உள்ள சந்தியில்தான் படையினர் நிலைகொண்டுள்ளனர்.

கரப்புக்குத்தி, கற்கிடங்கு, பெரியமடு ஆகிய பகுதிகளில் இருந்து செல்லும் பாதைகள் சந்திக்கும் சந்தியே அதுவாகும். அங்கிருந்து கனகராயன்குளத்தை சென்றடைய வேண்டுமானால் கனகராயன் ஆற்றைக் கடந்தாக வேண்டும்.

பாதையில் தேங்கி நிற்கும் வெள்ளத்தை படையினர் கடந்து செல்வதைக் காண்பித்த படி கனகராயன்குளத்தை கைப்பற்றிவிட்டதாக தொலைக் காட்சியில் செய்தி தெரிவிக்கப்பட்டது.

வவுனியா-யாழ் சாலையில் கனகராயன் குளத்தை படையினர் சென்றடைவதையே புலிகள் தடுத்து வருகின்றனர். சாலையில் இருந்து கிழக்காக உட்பாதையில்தான் படையினர் உள்ளனர்.

வவுனியா-யாழ் சாலையில் புளியங்குளத்தில் இருந்து 11 கிலோ மீட்டர் தூரத்தில் இருப்பது கனகராயன்குளம். அங்கிருந்து 10 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது மாங்குளம்.

கனகராயன்குளத்தை கைப்பற்றினால் புளியங்குளத்தில் இருந்து படைகள் முன்னேறவிடாமல் தடுத்துவரும் புலிகளின் அணிகளைப் பின்புறம் இருந்து தாக்கலாம், என்பதே படையினரின் திட்டமாகும்.

ஜயசிக்குறுய் மூன்றாம் கட்டம் ஆரம்பமானதில் இருந்து கனகராயன் குளத்தை கைப்பற்றும் முயற்சி பல முறை மேற்கொள்ளப்பட்டது.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் கரப்புக்குத்தி, கற்கிடங்கு பகுதிகள் ஊடாக கனகராயன்குளத்தை அடைய படையினர் முயன்றனர்.

கரப்புக்குத்தி, கற்கிடங்கு பகுதிகளில் படையினரை நிலைகொள்ள அனுமதித்து விட்டு புலிகள் முற்றுகையிட்டு தாக்கினர். படையினரின் விநியோக தளத்தையும் கைப்பற்றியிருந்தனர்.

கரப்புக்குத்தி, கற்கிடங்கு பகுதிகளை அண்டியுள்ள படையினரின் பாதுகாப்பு நிலைகளில் இருந்து அருகே உள்ள சந்திதான் தற்போது கைப்பற்றப்பட்டுள்ளது. புலிகள் எதிர்த்தாக்குதல் எதுவும் மேற்கொள்ளவில்லை.

படையினரின் ஆட்பலம் பல முனைகளில் பரவி இருப்பது தமக்குச் சாதகம் என்பதால்தான், புலிகள் தந்திரோபாயமாக சமர் தவிர்ப்பை மேற்கொண்டதாகத் தெரிகிறது.

பெப்ரவரி நாலாம் திகதிக்கு முன்பாக 'ஜயசிக்குறுய்' பூர்த்தியாகும் என்று அரசாங்கம் கூறியுள்ளது. எனவே, களநிலவரம் எவ்வாறு இருந்தாலும், முன்னேற்ற முயற்சிகள் நடைபெறுவதாகவும், புதிய பகுதிகள் கைப்பற்றப்பட்டு வருவதாகவும் செய்திகள் வெளியிடத்தோதாக படை நடவடிக்கைகளும், நகர்வுகளும் இருக்கும் என்று தெரிகிறது.

## புலிகள் அறிக்கை

இதற்கிடையே, புலிகள் களநிலவரம் தொடர்பாக விடுத்துள்ள செய்தியில், "கடந்த ஒன்பது மாதச் சமரில் மூவாயிரம் படையினர் பலியாகியுள்ளனர். ஏழாயிரம் பேர் காயமடைந்துள்ளனர். 17 டாங்கிகள், நான்கு ஆட்டிலெறிகள், மூன்று ஹெலிக்கொப்டர்கள் உட்பட பெருந்தொகையான வெடிபொருட்கள் புலிகளால் அழிக்கப்பட்டுள்ளன.

கோடிக்கணக்கான ரூபாய்கள் பெறுமானம் உள்ள ஆயுத தளபாடங்களும், வாகனங்களும் மற்றும் இராணுவ சாதனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

படையினரின் ஒவ்வொரு நகர்வு முயற்சிக்கும் படைத்தலைமை பெரும் விலை கொடுக்க வேண்டியுள்ளது.

தாக்குதல் முனைகளில் படையினர் அக்கறை காட்டும்போது, அவர்களது தற்காப்பு அரண்களைத் தாக்கி படையினருக்கு புலிகள் பலத்த சேதத்தை உண்டுபண்ணுகின்றனர். இதனால் கைப்பற்றப்படும் பகுதிகளை பாதுகாத்தபடி முன்னேறுவது படையினருக்கு பாரிய பிரச்சனையாக உள்ளது.

மொத்தம் நான்கு டிவிஷன்களாக முப்பத்தாறாயிரம் படையினர் வன்னிச் சமரில் பங்கேற்கின்றனர். இதுவரை சண்டைகளில் ஒரு டிவிஷன் (பத்தாயிரம்) படையினர்வரை பலியாகியும், காயப்பட்டும் உள்ளனர்." மேற்கண்டவாறு புலிகள் தங்கள் செய்தியில் தெரிவித்துள்ளனர். ■

# வசிப்போர் நாலு இலட்சம்! வாக்காளர் ஐந்து இலட்சம்

# யாழ் தேர்தல் குறித்து புலிகள் தெரிவிப்பு

(அலுவலக நிருபர்)

யாழ் குடாநாட்டில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக புலிகளின் உத்தியோகபூர்வ பத்திரிகையான 'விடுதலைப் புலிகள்' கருத்து வெளியிட்டுள்ளது.

ஈரோஸ் இயக்க முன்னாள் தலைவரும், புலிகள் இயக்க முக்கியஸ்தருமான வே.பாலகுமார் குறிப்பிட்ட தேர்தல் தொடர்பாக பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

"தற்போது நான்கு இலட்சம் மக்களே வாழும் யாழ் குடாநாட்டில் ஐந்தரை இலட்சம் வாக்காளர்கள் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதிலும் புதிதாக 24 ஆயிரம் பேர் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் கூறப்பட்டுள்ளது. மோசடியில் கைதேர்ந்த ஐ.தே.கட்சிகூட வாக்காளர் இடாப்புக்களை நம்ப மறுத்துள்ளது.

இத் தேர்தலை எவ்விதமேனும் நடத்தி முடித்த பின்னர் சிறீலங்கா ஜனாதிபதி உலகிற்கு கூறப்போவது என்ன? அதனை இப்போதே எவராலும் கூற முடியும்.

யாழ் குடாநாட்டில் காணாமல் போன 700 பேரும் உண்மையிலேயே காணாமல் போகவில்லை, என்பதை யாழ்ப்பாண மக்களே ஏற்றுக் கொண்டுள்ளனர்.

தனது தீர்வுப் பொதியை மட்டுமன்றி, அதனை இழுத்தடிக்கும் முயற்சியையும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆக்கிரமிப்புப் போரை, தம்மை விடுவிப்பதற்கான போர், என்று தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்பதைக் காட்டவே அரசு விரும்புகிறது.

இன்னொரு அதிரடி அறிவிப்பையும் பிரகடனப்படுத்த அவர் தயாராக உள்ளார்.

அரசியல் அடைமொழியில் "மிதவாதிகள் எனப்படும் சமரசவாதிகளைக் கொண்ட மாற்றுத் தலைமையொன்று தமிழர் மத்தியில் உருவாகிவிட்டது" என்பதைக் காட்டவே இத்தேர்தலைப் பயன்படுத்த எண்ணியுள்ளார்.

இரண்டாம் உலகப் போரில் ஹிட்லர் காட்டிய பாதை இது. தென் ஃபிரான்சை ஆக்கிரமித்த ஹிட்லர், அதனை நிருவகிப்பதற்காக பொம்மை அரசொன்றை விசி (VICHY) நகரில் அமைத்தான். ஃபிரான்சு ஃபிரான்சியராலேயே நிர்வகிக்கப்படுகிறது என்ற பொய்யான தோற்றத்தை உருவாக்கவே அத்திட்டம்.

தமிழ் மக்களை ஏமாற்ற தென்னிலங்கை ஆட்சியாளர்கள் இதுவரை எடுத்த சகல முயற்சிகளும் முற்றுப் பெறும் காலகட்டத்தில், மிதவாதம் என்கிற பெயரில் சமரசவாத, துரோகத்தனமான அரசியலின் முழுவட்டம் இப்போது பூரணமாக்கப்படுகிறது.

இந்த விபரீத அரசியலின் முடிவு எவ்வாறு முடிவுக்கு வரும் என்பது எமக்குத் தெரிந்த விடயம்தான்!" என்று குறிப்பிட்டுள்ளார் பாலகுமார்.

'விபரீத அவலம் நிரம்பிய விசித்திரக் கதை' என்ற தலைப்பில் அவரது கருத்து வெளியாகியுள்ளது. ■

# கைப்பற்றப்பட்டனவா?

# உஷார் நடவடிக்கையா?

கொழும்பில் புறக்கோட்டையிலிருந்து பாணந்துறை சென்ற பஸ் வண்டி ஒன்றில் தற்கொலைத் தாக்குதலுக்கான உடைகள் உட்பட பிஸ்ரல்-02, கைக்குண்டுகள் என்பவை கைப்பற்றப்பட்டன. ஆயினும் எவரும் கைது செய்யப்படவில்லை.

சுதந்திரதினத்தை முன்னிட்டு கொழும்பிலும், கொழும்பு புறநகர்ப் பகுதிகளிலும் உஷார் நிலையையும் விழிப்பையும் ஏற்படுத்த படையினர் மேற்கொண்ட திட்டமா? அல்லது உண்மையாகவே புலிகளால் விட்டுச் செல்லப்பட்டவைதானா, என்பது சந்தேகமாக உள்ளது.

பாதுகாப்பு நடவடிக்கைகளை உஷார் படுத்தவும், மக்களை விழிப்பாக இருக்கத் தூண்டவும், யாருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் சில அதிரடி வித்தைகள் காண்பிப்பது பாதுகாப்புத் துறையினர் கடைப்பிடிக்கும் தந்திரம். எனினும் மேற்கண்ட சம்பவம் அவ்வாறானதுதானா என்பதை முரசால் ஊர்ஜிதம் செய்ய இயலவில்லை.

# படையினருக்குத் தலையிடி

தமிழ்க் கட்சிகளுக்குள் சமரசம் செய்து வைப்பது படை அதிகாரிகளுக்கு பெரும் தலையிடியாக உள்ளதாம்.

தமிழ்க் கட்சிகள்மீது இருந்த கொஞ்ச நஞ்ச மரியாதையும் தமக்கு இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது என்று படை அதிகாரி ஒருவர் கூறிக் கவலைப்பட்டாராம்.

"முன்னாள் போராளிகள் என்பதை நம்பவே முடியாமல் இருக்கிறது. இப்படி பதவிக்காக அடிபட்டுத் திரிகிறார்களே!" என்று ஆச்சரியப்பட்டாராம்.

தேர்தலை யாழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. வாக்களிப்பதே சந்தேகம்தான். இந்நிலையில் பகிரங்கமாக அடிபட்டால் கொஞ்ச நஞ்ச ஆதரவுகூட இல்லாமல் போய்விடும், என்பதால்தான் சில கட்சிகள் தமக்குள் பகிரங்கமாக மோதுவதைத் தவிர்த்து வருகின்றன என்று மக்களே பேசிக் கொள்கிறார்கள்.

# எல்லாவற்றையும் தடுக்க முடியாது!

# இயன்றவரை பாதுகாப்பு!

யாழ் உள்ளூராட்சித் தேர்தல் பாதுகாப்புக் கடமைகளுக்காக 'ஜயசிக்குறுய்' நடவடிக்கைக்காக, கொண்டு செல்லப்பட்ட படையினரில் ஒரு பகுதியினர் திருப்பி எடுக்கப்பட்டுள்ளனர்.

"ஆங்காங்கே இடம்பெறும் எல்லாச் சம்பவங்களையும் எம்மால் தடுத்துவிட முடியாது. எனினும் திட்டமிட்டு நடைபெறும் வன்செயல்களைத் தடுப்பதற்கு ஆவன செய்வோம்!" என்று யாழ்ப்பாணத்தில் உள்ள படை அதிகாரி கூறியுள்ளதாக 'சண்டே ரைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

'தேர்தலுக்கு ஒத்துழைப்பவர்களுக்கு எதிராக அதி உச்ச தண்டனை வழங்கப்படும்!' என்று புலிகளால் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன, என்றும் அறிவிக்கப்பட்டுள்ளதாக 'சண்டே ரைம்ஸ்' தெரிவித்துள்ளது.

# "புலிகளும் நாங்களும் ஒன்று!"

## தமிழ்க் கட்சிகள் பிரசாரம்

யாழ் குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தல் கட்சிகளுக்கிடையே சூடுபிடித்துள்ளது. ஒவ்வொரு கட்சியும் தங்களுக்கிடையே மாறி மாறி பொலிசில் புகார் செய்துள்ளன.

ஒரு காலத்தில் பொலிசாரையும், படையினரையும் எதிர்த்து நின்ற இக் கட்சிகள், இப்போது எடுத்ததுக்கெல்லாம் பொலிசாரிடம் ஓடிச்சென்று புகார் செய்யும் காட்சியே மக்களுக்கு வேடிக்கையாக இருக்கிறது.

இதற்கிடையே, புலிகளின் ஆதரவு தமக்கு இருப்பதாக தமிழ்க் கட்சிகள் சில மறைமுகமாகக் கூறிவருகின்றன. சமீபத்தில் குருநகர், நாவாந்துறைப் பகுதிகளுக்குச் சென்ற தமிழ்க் கட்சி ஒன்று, "நாங்களும் புலிகளும் ஒன்றுதான். எங்கள் இறுதி இலக்கு ஒன்றுதான். அதனால் எங்களுக்கே வாக்களியுங்கள்!" என்று கூறியதாம்.

இன்னொரு கட்சியினர், புலிகளால் தங்கள் இயக்கத்தினருக்கு கைக்குண்டு வீசப்பட்ட செய்தியை மறைக்க முற்பட்டனராம். பிறிதொரு கட்சியினர், அதனைப் பத்திரிகைகளுக்கு கூறிவிட்டனராம். புலிகளால் தாக்கப்படுவதாகத் தெரிந்தால் குறிப்பிட்ட கட்சிக்கு வாக்குகள் கிடைக்காது என்று கருதியே அவ்வாறு செய்தனராம்.

ஆனால் அரசாங்க பிரசார சாதனங்கள், யாழ் தேர்தலை புலிகளுக்கு எதிரான தேர்தல் என்று பிரசாரம் செய்து வருகின்றன. ■

# விடுதலை செய்யுமாறு வேண்டுகோள்!

# எட்டு சிங்களவர்-நான்கு முஸ்லிம்கள்

பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள சுங்காவில் பகுதியில் காட்டிற்கு மரம் அறுக்கச் சென்றிருந்த வேளையில் புலிகள் இயக்கத்தினரால் கடத்திச் செல்லப்பட்டதாக நம்பப்படும் பொலன்னறுவை வாசிகளான எட்டுச் சிங்களவர்களையும் மட்டக்களப்பு ஏறாவூரைச் சேர்ந்த நான்கு முஸ்லிம்களையும் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யுமாறு அவர்களின் உறவினர்கள் உருக்கமான வேண்டுகோளை விடுக்கின்றனர்.

1996ம் ஆண்டு ஜூன் 22ம் திகதி இவர்கள் கடத்தப்பட்டுக் காணாமல் போயுள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

திருமலையிலுள்ள இறக்கக்கண்டிப் பிரதேசத்தில் வைத்துப் புலிகள் இயக்கத்தினர், தாம் கடத்திச் சென்ற முஸ்லிம்களையும் சிங்களவர்களையும் விடுவித்ததன் மூலம் அவ்வியக்கம் தனது நல்லெண்ணத்தை வெளிக்காட்டியது. அது போன்று தங்களது உறவினர்களையும் விடுவித்துவிடுமாறு கேட்டுக்கொள்வதாக அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடத்தப்பட்டவர்களை புலிகள் இயக்கத்தினர் விசாரணை செய்தபின் விடுதலை செய்வார்கள் என்ற நம்பிக்கையில் அவர்களது உறவினர்கள் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாகக் காத்திருக்கிறார்கள்.

இச் சம்பவத்தில் ஏறாவூரைச் சேர்ந்த எஸ்.ஆப்தீன் (23), எம்.ஸுபைர் (34), ஏ.ஏ.ஹஸன் (33), எம்.பாறூக் (30) ஆகியோரும் மேலும் எட்டுச் சிங்களவர்களும் அடங்குவர்.

# பயணிகளோடு படையினர்!

கிழக்கில் வாழும் குடிமக்கள் யுத்தச் சூழலின் விளைவாக பலவகையான நெருக்குதல்களில் சிக்கித் தவிக்கிறார்கள் என்பது தொடர் கதையான விஷயம்.

சகல தரப்பினராலும் சகல விடயங்களிலும் பொதுமக்கள் மீது நெருக்கடி உண்டாக்கப்படுகிறது.

குடிமக்கள் பயணம் செய்யும் பொதுப் போக்குவரத்து வாகனங்களில் படையினரும் பொலிஸாரும் படையினருடன் சேர்ந்து செயற்பட்டு வரும் இயக்கத்தவர்களும் பயணிகளுடன் கூடவே பயணம் செய்வதாலும் வாகனங்களைத் தமது முகாம்களுக்குக் கொண்டு செல்வதாலும் நடந்த விபரீதங்களால் இது வரையில் பல உயிரிழப்புக்களும் பாதிப்புக்களும் இடம்பெற்றிருக்கின்றன. யுத்தத்தில் ஈடுபட்டுள்ள தரப்பினர் தமது நோக்கங்களுக்காகப் பொதுமக்களைப் பயன்படுத்துவது விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

பாதுகாப்புத் தரப்பினருக்கும் அவர்களது சகபாடிகளான- கூடவே சேர்ந்து செயற்படும் இயக்கத்தவர்களுக்கும் பிரத்தியேக வாகனங்களும் மற்றும் பல வசதிகளும் இருக்கும்போது, தொடர்ந்து பொது மக்களைப் பாதிக்கும் சம்பவங்கள் இடம் பெறுவதற்கு வழி வகுப்பது கண்டிக்கப்பட்டு வந்தாலும்கூட, சம்பந்தப்பட்டவர்கள் மீண்டும் மீண்டும் அதனையே செய்து வருகிறார்கள்.

தற்போதைய சூழ் நிலையில் ஆயுததாரிகள் குடிமக்களின் பொதுப்போக்குவரத்து வாகனங்களைத் தமது நோக்கங்களுக்குப் பாவிப்பது நியாயமாகாது என்று மட்டக்களப்பு நீதிபதியொருவர்கூட பொதுமக்களின் பயணிகள் பஸ் ஒன்றில் சமீபத்தில் நடந்த சம்பவத்தின் விசாரணையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

# "இறக்குமதித் தலைவர்கள்"

# புலிகளின் கிண்டல்

'விடுதலைப் புலிகள்' பத்திரிகையில் யாழ் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக 'வியாசன்' எழுதியுள்ள கவிதையில்:

*நல்லகாலம் பிறந்தாச்சாம்*
*குடு குடுப்பைக்காரர்கள்*
*குறி சொல்கின்றனர்.*
*இனியென்ன வேண்டும்*
*புகுந்து விளையாடு!*
*தமிழனே!*
*நீ தேடிய ஒளிவட்டமும்*
*அவாவிய நிமிர்ந்த வாழ்வும்*
*உனக்கினிக் கிட்டும்??*
*வாய்க்கால் வெட்டும்*
*மாநகர ஆட்சிக்கும்*
*நாய் பிடிக்கும்*
*நகரசபைக்கும்*
*சின்ன மதகு திருத்தும்*
*பிரதேச சபைக்கும் தானே*
*இத்தனை விலை கொடுத்து*
*போராடினாய்?*

*ஊரையடித்து*
*உலை மூட்டி வாழ்ந்தவர்கள்*
*சங்கக் கடையுடைத்து*
*சாப்பிட்ட சாதுரியர்*
*தர்மகர்த்தா சபைத் தலைவர்*
*செயலாளர்,*
*சைக்கிள் களவெடுத்த*
*சமாதான நீதிவான்கள்*
*எல்லோரும் உனக்கு*
*இங்கே தலைவரென்றால்,*
*உள்ளே உனக்கெரியும்*
*உரிமைத்தீ என்னாகும்?*
*நேற்றுவரை கொழும்பிலிருந்து*
*கப்பலில் பெற்றோல் வந்தது.*
*சக்குப்பிடித்த குத்தரிசியும்*
*சாராயமும் வந்தது.*
*இன்று விமானத்தில்*
*தலைவர்கள் இறக்குமதியாகிறார்கள்!*

இவ்வாறு கிண்டலடித்துள்ளதுடன், வருவோமெனச் சொல்லுக, வருவோம், என்று அந்த நீண்ட கவிதை முடிவுற்றுள்ளது.

# நகருக்குள் கெரில்லாக்கள்?

# படையினர் சந்தேகம்!

(மன்னார் நிருபர்)

இலங்கையின் சுதந்திரப் பொன்விழா தினத்திற்கு முன் மன்னார் மாவட்டத்தில் பாரிய தாக்குதல்களை புலிகள் ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிகிறது.

இதற்காக புலிகளின் விஷேட அணி ஒன்று மன்னார்த்தீவிற்குள் ஊடுருவி இருப்பதாக படைத்தரப்பினர் நம்புகின்றனர்.

இவர்களைத் தேடும் பணியில் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர். கடந்த 12.1.98 அன்று மன்னார் நகரம் சுற்றி வளைக்கப்பட்டு சிலர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

மன்னார்த்தீவிற்குள் புதுக்குடியிருப்பு, சனிவிலேஜ் ஆகிய இரு இடங்களில் மாத்திரமே இராணுவ முகாம்கள் உள்ளன. மேலும் ஏழு இடங்களில் பொலிஸ் காவல் நிலையங்கள் இருக்கின்றன.

ஜயசிக்குறுய் நடவடிக்கைக்காக மன்னாரிலிருந்தும் ஏராளமான துருப்பினர் களத்திற்கு அனுப்பப்பட்டு வருகின்றனர். அதே வேளை, புதிய இராணுவக் குழுக்களும் மன்னாருக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

இதேவேளை கடந்த ஆண்டு சுதந்திர தினத்தன்று ஆரம்பமான 'எடிபல' இராணுவ நடவடிக்கை எதிர்வரும் பெப்ரவரி 04ம் திகதியுடன் ஓராண்டு நிறைவடைகிறது. எடிபல இராணுவ நடவடிக்கையின் மூலமே மன்னாருக்கான தரை வழிப்பாதை திறக்கப்பட்டமை தெரிந்ததே.

இதனால் ஓராண்டு நிறைவு பெறுவதை முன்னிட்டும் இப்பகுதிகளில் தாக்குதல்கள் இடம் பெறக்கூடும் என எதிர்பார்த்து மன்னார்-வவுனியா நெடுஞ்சாலை வழியே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் மேலதிக இராணுவத்தினரும் குவிக்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த 13.1.98 அன்று காலையில் ஏராளமான இராணுவ வாகனங்களில் படையினர் மன்னாரிலிருந்து பேசாலைப் பகுதி நோக்கிச் சென்றனர். ■

# கல்வி அலுவலகத்தில் தமிழ்க் கொலை!

பதுளையிலுள்ள அனேக அரச அலுவலகங்களில் காணப்படும் முகப்பு அறிவித்தல் பலகைகளில் புது விதமான தமிழ் மொழி அறிமுகப்படுத்தப்பட்டுவருகிறது. இப்பகுதியிலுள்ள தமிழ் மொழி ஆர்வலர்கள், அரச கரும மொழி அமுலாக்கத்திற்கான அதிகாரிகள், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் இக் குறைபாட்டைக் கருத்தில் எடுத்ததாகத் தெரியவில்லை. இப்படித்தான் தமிழ் மொழியை அமுலாக்குவோம் என்றால் இருப்பதே மேல் என்று விட்டு விடலாம் போல் தெரிகிறது.

பதுளை மீகஹகிவுல்வில் உள்ள கல்வி அலுவலகத்தில் காணப்படும் முகப்பு அறிவித்தலைப் பாருங்கள்; 'கொட்டக் கல்விக் காரியாலயம், மீகாகிவுல' கோட்டம் என்பது கொட்டம் என்று மாறியிருக்கிறது. மீகஹகிவுல என்பது மீகாகிவுல என்று மாறியிருக்கிறது.

சில இடங்களில் சிங்கள உச்சரிப்பை அப்படியே தமிழிலும் எழுதியிருக்கிறார்கள். 'ஜனதா சண்தக்க பிரவாஹன சேவய, தெய்யத்த கண்டி கிலை' என்று எழுதப்பட்டுள்ளது.

தமிழுக்குக் கொடுக்கப்படும் சம அந்தஸ்தை அரச பொதுப் போக்குவரத்துச் சேவை பஸ்களில் பாருங்கள்! சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் மிகப் பெரிய கொட்டை எழுத்திலும்; கூர்ந்து வாசிக்கக்கூட முடியாத மிகச் சிறிய எழுத்துக்களால் தமிழ் முகப்பு அறிவித்தல்களும் எழுதப்பட்டுள்ளன. தமிழ்ப் பகுதி பஸ் டிப்போக்கள்கூட இந்த நடைமுறையை பின்பற்றுகின்றன.

கொழும்பு மத்திய பஸ் தரிப்பு பஸ் நிலையத்தில் பஸ் ஆசனப் பதிவுக்குரிய பற்றுச் சீட்டில் சிங்களமும், ஆங்கிலமும் மாத்திரமே காணப்படுகிறது. ■

# மலையகத்தில் வீதித்தடைகள்?

(நமது நிருபர்)

மலையகப் பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் மின்மாற்றிகளுக்கு இலக்கு வைக்கப்பட்டதின் பின்னர் மலையகப் பாதுகாப்புப் பற்றிய கவனம் பொலிஸாருக்கும் பாதுகாப்புத் தரப்பினருக்கும் நெருக்குதல்களை ஏற்படுத்தியிருக்கிறது.

தோட்டப்புறங்களின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் விடயத்தில் தோட்டத் தொழிலாளர்களும் தொழிற் சங்கங்களும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென்று பிரதிப் பொலிஸ் மா அதிபர் குமாரசிறி கமகே தெரிவித்துள்ளார்.

தோட்டப் புறப் பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி விளக்கிக் கூறுவதற்காக நடைபெற்ற தோட்ட நிருவாகங்களின் கூட்டமொன்றில் அவர் கலந்து கொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"தோட்டத்துறை நிருவாகங்களின் உதவியோடு தோட்டத்துறைப் பாதுகாப்பு சிறந்த முறையில் அமுல் செய்யப்பட்டு வருகிறது. சிவில் பாதுகாப்புக் குழுக்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கும்போது மிகவும் கவனமாக இருக்கவேண்டும். இதனைச் சிலர் துஷ்பிரயோகம் செய்யலாம்" என்றும் அவர் தெரிவித்தார்.

தோட்டப் புறப் பகுதிகளுக்குச் செல்லும் முக்கிய வீதிகளில் பொலிஸ் வீதித் தடைகள், சோதனை நிலையங்கள் என்பனவற்றை மீண்டும் அறிமுகப்படுத்துமாறு பிரதிப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்டுக் கொள்வதென அக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

# முஸ்லிம் காங்கிரஸ் கூட்டத்தில் அமளி

## மூதூரில் எதிர்ப்பு! கை கலப்பு

(நமது நிருபர்)

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்களால் மூதூரில் கூட்டம் நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டது. கடந்த 24.12.97 அன்று மூதூர் பிரதேச சபை மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கூட்டத்துக்கு முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் ரவூப் ஹக்கீம், துணைத் தலைவர் மருதூர்க்கனி, பாராளுமன்ற உறுப்பினர் நஜீப் ஏ. மஜீத் ஆகியோர் சமூகமளித்தபோதே, இந்த நிலைமை ஏற்பட்டது.

இளைஞர்கள் குரலெழுப்பி கூட்டத்தை வேறு இடத்துக்கு மாற்றுமாறு கேட்டுக் கொண்டதால், அவசர அவசரமாகக் கூட்டம் அல்-ஹிலால் முஸ்லிம் மகா வித்தியாலயத்துக்கு மாற்றப்பட்டது. அங்கு ஏராளமான இளைஞர்கள் கேள்விக் கணைகள் மூலம் தலைவர்களைத் திக்குமுக்காடச் செய்தார்கள்.

மூதூர் மக்கள் புறக்கணிக்கப்பட்டமை, பிரதேசம் கவனிக்கப்படாமை, திருக்கோணமலை-மூதூர் படகுச்சேவைச் சீரின்மை என்பவையே பிரதான எதிர்ப்புக் காரணங்களாக இருந்தன.

கேள்விகளின் உச்சக்கட்டத்தில், கடந்த தேர்தலில் 'கவுண்டிங் ஏஜண்டாக' கடமையாற்றிய ஒருவர் எழுந்து,"தலைவர், பிரதியமைச்சர் அப்துல் மஜீத், உதவி அரசாங்க அதிபர் கபீபு முகமது ஆகியோரின் படுகொலைகள் எமது கட்சிக்குச் சாதகமாகிவிட்டன என்று கூறியவர் தானே?" என்றபோது, செயலாளர், "எமது தலைவர் அப்படிக்கூறக்கூடியவரல்ல!" என மறுத்தார்.

இன்னொரு நபர் எழுந்து, "மூதூர் முஸ்லிம்களை வழிக்குக்கொண்டு வருவது கஷ்டமான காரியமல்ல; ஒரு றோட் போட்டுக் கொடுத்து, ஹெலியில் நான்கு தடவைகள் வட்டமிட்டபடியே வந்திறங்கினால் என் பின்னால் வருவார்கள், என்று கொழும்பில் நடந்த கூட்டமொன்றில் என் முன்னிலையில் கூறியவர் அஷ்ரப்!" என்றார். இதனைப் பிரதேச சபை உதவித் தலைவர் மறுக்கமுற்பட, அஷ்ரப்புக்கு தேர்தலின்போது, தங்கமரம் அணிவித்த இளைஞர் ஒருவர் எழுந்து, "தலைவர் கூறியது உண்மை; நானும் உடனிருந்தேன்!" என்றார்.

இதற்கிடையில் கருங்கல் வியாபாரியொருவர், "மூதூர் பிரதேசசபை முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் இருவர் பற்றி விமர்சிக்க முற்பட்டபோது ஒரு உறுப்பினருடன் கைகலக்க வேண்டியும் ஏற்பட்டது. பொலிஸ் அதிகாரி உபைத்துல்லாவின் திறமையால் பெரிய குழப்பம் தவிர்க்கப்பட்டது.

முஸ்லிம் காங்கிரசைக் கிண்டல் பண்ணும் சுவரொட்டிகளும் தெருக்களில் ஏராளமாகக் காணப்பட்டன.

முஸ்லிம் காங்கிரசின் வளர்ச்சியை பொறுக்கமாட்டாத தீயசக்திகளே இவ்வாறு திட்டமிட்ட பிரசாரங்களில் ஈடுபடுகின்றனர். தலைவர்மீது அவதூறு சுமத்துகின்றனர் என்று முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் கூறியுள்ளன.

# வீதியைத் திறக்க உத்தரவு!

வருடக் கணக்கில் மூடப்பட்டிருக்கும் ஏறாவூர் புதிய பொலிஸ் நிலையத்திற்கு முன்னாலுள்ள மட்டக்களப்பு- கொழும்பு பிரதான நெடுஞ்சாலையைப் பொதுப் போக்குவரத்திற்காக மிக விரைவில் திறந்துவிட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வீதியைப் பொதுப் போக்குவரத்திற்கு அனுமதிக்குமாறு பல தரப்பிலிருந்தும் நெருக்குதல்கள் கொடுக்கப்பட்டதன் காரணமாக ஏறாவூர் பொலிஸ் பொறுப்பதிகாரி இணக்கம் தெரிவித்ததை அடுத்தே வீதியைத் திறப்பதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு வருகின்றன.

பிரதான வீதி தடை செய்யப்பட்ட பின்னர் ஏறாவூர் பழைய பொலிஸ் நிலையத்திற்கூடாக உபபாதையொன்று திறக்கப்பட்டது. இவ்வீதி மழை காலங்களில் சேறும் சகதியும் நிறைந்துள்ளதால் பெரும் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டியுள்ளது.

1936ம் ஆண்டு கட்டப்பட்ட ஏறாவூரின் பழைய பொலிஸ் நிலையத்தை அங்கிருந்த ஆயுதங்களுடனும், பொலிஸாருடனும் புலிகள் இயக்கத்தினர் 1990 ஆண்டு கைப்பற்றிச் சென்றனர். அதன்பின்னரே அக்கட்டடம் விமானப் படையினரால் குண்டு வீசித் தகர்க்கப்பட்டது தெரிந்ததே.

# இலங்கை வங்கியில் ஆளணி பற்றாக்குறை!

## கொழும்பில் ஆள் திரட்டலும் நியமனமும்!

மட்டக்களப்புப் பிராந்திய தலைமை இலங்கை வங்கியில் அதிகரித்துவரும் வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப ஊழியர்கள் கடமையில் இல்லாதது பெருங் குறையாகக் காணப்படுகின்றது, என்று வங்கி வட்டாரங்கள் கூறுகின்றன.

பெருந்தொகையான ஊழியர் பற்றாக்குறை இருந்தபோதிலும் நெருக்கடிக்கு மத்தியில் தற்சமயம் கடமையில் உள்ள ஊழியர்களைக் கொண்டு வாடிக்கையாளர்களின் அதிக பட்ச சேவைகள் ஆற்றப்படுகின்றன, என்று இவ்வங்கியின் பிராந்தியப் பொது முகாமையாளர் திரு.எம்.ஸ்ரீபத்மநாதன் தெரிவித்தார்.

மட்டக்களப்புப் பிராந்திய தலைமை இலங்கை வங்கியில் 16 வெற்றிடங்கள் உள்ளன. மாவட்டத்திலுள்ள இலங்கை வங்கிக் கிளைகளில் மொத்தம் 36 வெற்றிடங்கள் உள்ளன.

கிழக்கிலுள்ள வெற்றிடங்களைக் கணக்கிட்டு அதற்குப் பதிலாக கொழும்பில் ஆட் திரட்டலும் நியமனமும் இடம்பெற்று, அங்கு மிதமிஞ்சிய ஊழியர்கள் கடமை புரிவதாகத் தெரியவருகிறது.

ஆனால் இங்கு காசாளர், லிகிதர் போன்ற பதவிகளுக்கு வங்கிப் பாதுகாப்பு ஊழியர்களையும், சிற்றூழியர்களையுமே பயன்படுத்தி அலுவல்களை முடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. இதனால் மேலதிக வேலைப்பளு உண்டாவதோடு வாடிக்கையாளர்களுக்கு சில வேளைகளில் அதிருப்தியும் ஏற்படுகிறது.

"மக்கள் இன்றி வங்கியில்லை" என்ற உண்மையைக் கருத்திற்கொண்டு தேவையான ஆளணியைத் திரட்டித் தந்து வாடிக்கையாளர்களுக்குத் திருப்தியான சேவையை வழங்க முன் வரவேண்டுமென்று வாடிக்கையாளர்கள் வேண்டுகோள் விடுக்கிறார்கள்.

# காணாமல் போகும் காசோலைகள்

## தபாலகத்தில் திருட்டு

(அக்குறணை நிருபர்)

அக்குறணை, நீரெல்லை இல. 672 ஐச் சேர்ந்த ஜனாப் என்.எல்.எஸ். ஆப்தீன் என்பவருக்கு மாலைதீவிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட இரண்டு காசோலைகள் களவாடப்பட்டுள்ளன.

எஸ்.எம்.ஏ. அஜ்வாத் என்பவரால் 27.3.97 அன்று அனுப்பி வைக்கப்பட்ட பதிவுத் தபால் உடைக்கப்பட்டு, அதனுள் இருந்த 50 அமெரிக்க டொலர் பணம் கையாடல் செய்யப்பட்டுள்ளது.

இதே நபர் 18.4.97 அன்று மீண்டும் என்.எல்.எஸ். ஆப்தீன் அவர்களுக்கு அனுப்பிவைத்த 60 அமெரிக்க டொலர் பணமும் திட்டமிட்டு திருடப்பட்டுள்ளது.

இது விடயமாக அக்குறணை தபாலதிபர் ஜனாப் ஏ.எம். இஸ்மாயில் அவர்களிடம் புகார் செய்யப்பட்டபொழுது அவர் கொழும்பிலுள்ள தபாற்தலைமை அலுவலகத்திற்கு அறிவிக்கும்படி ஆலோசனை கூறினார்.

அவ்வாறே பி.எம்.எச். இற்கு முறைப்பாடு கொடுக்கப்பட்டது. அவரிடமிருந்து சுமார் 3 மாதங்களின் பின், அதாவது 15.7.97 அன்று இவ்விடயம் சம்பந்தமாக கவனத்தில் எடுப்பதாக ஒரு பதில் வந்தது.

இது சம்பந்தமாக தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சருக்கும் முறைமீடு ஒன்று 23.5.97ல் அனுப்பிவைக்கப்பட்டு அதற்கு தகுந்த நடவடிக்கை எடுப்பதாக 27.6.97 அன்று-சுமார் ஒருமாதத்திற்குப் பிறகு பதில் வந்தது. ஆனால் இன்றுவரை இதற்கான எந்த ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தொடர்ந்தும் இவ்வாறான கையாடல்கள் அக்குறணைத் தபாலகத்தில் இடம்பெற்று வருவதாக அறியக் கிடக்கின்றது.

இவ்விடயத்தில் சம்பந்தப்பட்டவர்களை உரிய முறையில் அடையாளம் கண்டு சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியது அதிகாரிகளின் கடமையாகும்.

# பொதியை நிராகரிக்கிறோம்!

## ரெலோ தெரிவிப்பு

ஜனாதிபதி சந்திரிக்கா திம்பு கோட்பாட்டை நிராகரித்து ரூபவாஹினிக்கு பேட்டியளித்தார். வடக்கு-கிழக்கு இணைப்பு முக்கியமானது என்று கூறிவரும் தமிழ்க் கட்சிகள் ஜனாதிபதியின் பேட்டி பற்றி மௌனம் சாதிக்கின்றன என முரசு செய்தி வெளியிட்டிருந்தது.

ரெலோ அமைப்பு அந்தச் செய்திக்கு மறுப்பு அனுப்பியுள்ளது. ரெலோ இயக்கத் தலைவர் வினோதலிங்கம் விடுத்துள்ள அறிக்கையில்; திம்பு கோட்பாடுகள் நிராகரிப்பு, தமிழ்க் கட்சிகள் மௌனம் என்ற செய்தி எமது அமைப்பைப் பொறுத்தவரை தவறானதாகும்.

அரசின் தீர்வுப் பொதியை நாம் நிராகரித்துள்ளோம். திம்பு கோட்பாடுகளின் அடிப்படையிலேயே நாம் தீர்வுப் பொதியை நிராகரித்துள்ளோம்.

யாழ் மாவட்ட உள்ளூராட்சித் தேர்தலையும், அரசின் தீர்வுப் பொதியை நிராகரிக்கும் வாக்கெடுப்பாக கணித்தே ரெலோ போட்டியிடுகிறது என்று தெரிவித்திருக்கிறார்.

# குன்று குழி வீதிகள்

(திருமலை நிருபர்)

திருக்கோணமலை நகர வீதிகள் பல குன்றும் குழியுமாகக் காட்சியளிக்கின்றன. மழைக்காலத்தில் சில வீதிகளில் முழங்கால்வரை நீர் தேங்கி நிற்பதனால் பாதசாரிகள் சிரமப்படவேண்டியிருக்கின்றது.

இவற்றுள் அநேகமான வீதிகள் அண்மைக்காலங்களில் செப்பனிடப்பட்டவை என்பதும் குறிப்பிடத்தக்கது. சில வீதிகள் செப்பனிட்டு ஆறுமாதங்கள்கூட ஆகவில்லை. கடற்காட்சி வீதி அகலப்படுத்தப்பட்டுச் செப்பனிடப்பட்டது. செப்பனிட்டு ஒரு மாதத்துக்குள்ளேயே வீதியில் குழிகள் விழ ஆரம்பித்துவிட்டன.

ஹஸ்கிசன் வீதி, பிரதான வீதி, ஔவையார் வீதி, மடத்தடிச் சந்தி, பாரதி வீதி, போறணை வீதி என்பவை மழைக்காலங்களில் பாவனைக்குதவாத நிலையில் காட்சியளிக்கின்றன. தில்லைநகர் வீதி குளம் போல் காட்சியளிக்கிறது.

"வீதி செப்பனிடல் என்பது வீதிக்காகவோ, மக்களுக்காகவோ அன்றி சிலர் உழைத்துக் கொண்டு போவதற்காகச் செய்யப்படும் பணியா?" என்று பொதுமக்கள் கேட்கிறார்கள். "குழந்தைகள் எச்சில் துப்பி விளையாடுவது போல், சில வீதிகளில் தார் ஊற்றி மண்போட்டு விடுவதாலேயே இவை ஒரு மழைக்குக் கூடத் தாங்குவதில்லை," என ஒரு வயோதிபர் கூறினார்.

எல்லோரும் சுரண்டுவதற்கு திருக்கோணமலைதான் சிறந்த இடமாகிவிட்டதோ?


**தெய்வீக மருத்துவம்**

THEYVIGA SAKTHY CENTRE — DIVINE MEDICAL AND ASTROLOGICAL SERVICES

சர்வதேச சமூக தெய்வீக சேவை

GOVT REGED NO. HA\04\BT\219

வாழ்க்கையில் கிரக மற்றும் வேறு தீவினைகளால், தீராத மனத்தாக்கம், தொழில், வெளிநாட்டுப் பிரயாணத்தடைகள், காதல், விவாகத்தடைகள், கணவன்-மனைவி சந்தோஷமின்மை, என்பவற்றிற்கும், வேண்டியவர்களைச் சேர்க்கவும், வேண்டாதவர்களையகற்றவும், வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம். காண்டவடிவமைப்பில் எதிர்கால வாழ்க்கைப் பலனையும் அறிந்து கொள்ளலாம்.

'ஆயுர்வேத மருத்துவர் பாலுசோதிடர்' நேரில் வரமுடியாதவர்கள், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால் கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருந்துப் பொருட்களை தபால்மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்புபவர்களின் விடயங்கள் முன்னுரிமை அடிப்படையில் கவனிக்கப்படும்.

பாலுசோதிடர்–S.A.M.P.
தெய்வீக சக்தி நிலையம்
கல்லடி–அரசவிடுதி வீதி,
மட்டக்களப்பு. (P.O).

BALUSOTHIDAR-S.A.M.P.
THEYVIGASAKTHY CENTRE,
BATTICALOA (P.O.)
SRI LANKA.

"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்." - "DISPEL DARKNESS IN LIFE LET LIGHT SHINE"

**றெறாசோ ஷிப்ஸ்**
(TERRAZZO CHIPS)
★ கலர்பவுடர் (Pigments) (Holland, Germany)
★ வெள்ளை சீமெந்து (Asano)
ரூபா 9/- க்கு மேல்

**றம்சன்ஸ்**
443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு – 12.
தொலைபேசி – 431511, 434411

**அஸ்மா வைத்தியம்**
* அஸ்மா * தொய்வு * முட்டு * சளி * இருமல் * இழுப்பு * இளைப்பு
போன்ற குணங்களுக்கு சுகமடைய
Dr. சுறாஜ். சோமசுந்தரம்
அஸ்மா சிகிச்சை நிபுணர்
25, சென். சில்வெஸ்டர் றோட், கல்கிசை. (மவுண்ட்லேவினியா)
தினமும் மாலை 4 மணி முதல் 7 மணி வரை
ஒரு முறை வைத்தியம் செய்து பாருங்கள் பலன் தெரியும்
☎ 074 - 201582
Admiral Graphics Wellawatte


**ஜனாஸா நன்றி நவிலல்**

அல்ஹாஜ் எம்.எல்.எம் தாஹிர் (முஸலிம் ஹொடல் வெலிகாமம்) வெலிகாமம் தினமுரசு வாரமலர் பத்திரிகை ஏஜன்ட் உரிமையாளர் அல்ஹாஜ் எம.எல்.எம் தாஹிர் கடந்த ஏப்ரல் 11ம் திகதி இறையடி சேர்ந்தார். அன்னாரின் ஜனாஸா நல்லடக்கத்தில் கலந்து கொண்ட உற்றார் உறவினர்கள் நண்பர்கள் மற்றும் பிரமுகர்கள் நலன் விரும்பிகள் அனைவருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

(அன்னாருக்கு எல்லாம் வல்ல அல்லாஹ். ஜன்னத்துல் பிர் தௌஸ் என்னும் சுவர்க்கத்தை அருளப் பிரார்த்திக்கிறோம்.

இப்படிக்கு,
குடும்ப அங்கத்தவர்கள்


**மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHOTHERAPHY)**

வவுனியாவிலும் சந்திக்கலாம்

இளைஞர்களே! மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை. இளம் சமுதாயத்தினர் மெலிந்து, கனவில் சக்திமிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

**SEXUAL DISORDERS**

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 90 நிமிடத்தில், தான்வீரியம் உள்ள ஆண்மகனாக்கி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

**வெளிநாட்டில் வசிப்போருக்கு**

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான விளக்கத்துடன் கடிதத் தொடர்பு மூலம் அறிவித்தால் மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள்; மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம் பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும் குழந்தைப்பேறு இன்மைக்கும், தீர்க்க முடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்.

கவனத்திற்கு! புதிய செல்டெல் No. 072-609388

கொழும்பில் ஜனவரி 19 முதல் 28 வரை

**DR.P.ARUMUGAM**
**AHAMED TOURIST INN**
BANG BANG BUILDING No. 10, Reclamation Road, (entrance: Bankshall St, Opposits Renjanas) Colombo-11.
T.P. 436383, 436390.

கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No. 072-609388
கொழும்பில் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

ஓட்டமாவடியில் பெப்ரவரி 4. 5ம் தினங்களில்
Dr. முகைதீன் டிஸ்பென்செரி, ஓட்டமாவடி. T.P.065-57345

கல்முனையில் பெப்ரவரி 7.8.9.10ம் தினங்களில்
T.M.M. பாமசியிலும் T.P.065-29329

வவுனியாவில் பெப்ரவரி 14.15.16.17ம் தினங்களில்
வன்னியில் ஞான வைரவர் கோவில் வீதி, VANNI INN இல் சந்திக்கலாம்
T.P.024-22074ல் முன்கூட்டியே பதிவு செய்யவும்

மற்றைய நாட்களில் **Dr.P.Arumugam**
**No.33. Tissa Weerasingam Sq.,**
**Boundary Road, Batticaloa** விலும் சந்திக்கலாம்.

**O/L மாணவர்க்கான கொம்பியூட்டர் பாடநெறி**

பிரித்தானிய மற்றும் அமெரிக்க சான்றிதழ்கள்

- Diploma in Computer Studies
- Dip. in Computer Programming
- Dip. in Infomation Technology
- Dip. in MS Office Application
- Dip. in Software Engineering

மாணவர்கள் மற்றும் அரச தனியார் ஊழியர்கள் வகுப்புக்களில் கலந்து கொள்ளலாம்.
வார நாட்களில் 3.00 - 6.00 p.m. மற்றும்
வார இறுதி நாட்களில் 9.00 a.m. - 6.00 p.m.
ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமைகளில் வகுப்புக்கள் ஆரம்பம்

பாடக்கட்டணத்தில் 50% மட்டுமே அறவிடப்படும்

**HARROW INTERNATIONAL COLLEGE**
(மியாமி மண்டபத்தின் அருகில்)
28A, Alexandara Road, Colombo-06.
Tel : 580830

**மட்டக்களப்பு மாந்திரீகம்**

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு, மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

**DR. A.P.S. KUTTY**
50, THEATRE ROAD
NINTAVUR-21
SRI LANKA.

**சித்தர் மாந்திரீகம்**

அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 25ந் திகதி வரை
SHAKTHY SARAVANA,
30/16, MALLIKA LANE,
WELLAWATTA, COLOMBO-06.
TELE PHONE: 500067.

25ந் திகதி முதல் 30ந் திகதி வரை
SHAKTHY SARAVANA,
82, MANIKKAVASAGAR ROAD,
TRINCOMALEE.
TELE PHONE: 026-20347

வியாழன் விடுமுறை



**மலையாள மாந்திரிகம்**



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச் சேவையில் ,கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது பிறந்த திகதி மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோனாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
பி.கே. சாமி J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM
162, KOTAHENA STREET,-
MAY FIELD ROAD, COLOMBO-13.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464
Tel-00941431137
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்-
342463-344831

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
**கல்வி நெறிகள்**
★ 90 Days Spoken English
★ 90 Days Spoken Sinhala
★ Method of Book-Keeping
★ Method fo Computerised Book-Keeping & Accountancy (MCBA)

மேற்படி பாடநெறிகள் நேரிலும்/ தபால் மூலமும் நடைபெறுகின்றன. வகுப்பு நேர விபரங்களை நேரிலோ, தொலைபேசியிலோ, தபால் மூலமோ அறிந்து கொள்ளலாம.
மேலதிக விபரங்களுக்கு கீழ்க் காணும் விண்ணபப படிவத்துடன் தொடாபு கொள்க.

விரும்பும் பாடநெறி:........................
பெயர்:........................
முகவரி........................

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S-27, First Floor, P.O. Box-162,
Colombo Central Super Market Complex.
Colombo -11. Tel: 434770, 074-718592

**காண்டம்**

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை,

**ரிஷி. S.மணி**

மூலம் அறிய வாருங்கள் வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S. MANI**
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு – 6.
T.P. 586218

# தலைநகரில் கழுகுகள்

## வந்தனர்—கண்டனர்—சென்றனர்

அமெரிக்க காங்கிரஸ் தூதுக்குழு கொழும்புக்கு திக் விஜயம் செய்துவிட்டு திரும்பிப் போயிருக்கிறது.

இந்த திக் விஜயத்தின் பின்னணியில் பல இரகசிய திட்டங்கள் இருக்கின்றன.

**சமீபத்தில் அமெரிக்காவின் வெளியுறவு பிரிவில் இருந்து கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சி கலாநிதி ஒருவருக்கு இரகசிய அழைப்பு வந்தது.**

அவரும் உடனடியாக அமெரிக்காவுக்கு பறந்து சென்றார்.

**இலங்கை இனப்பிரச்சனையில் அமெரிக்கா மத்தியஸ்தம் வகிக்க இது ஏற்ற தருணம்தானா?**

**இலங்கை அரசின் தீர்வுப் பொதியை தமிழ் மக்கள் எவ்வாறு நோக்குகின்றனர்?**

**இந்தியாவின் ஆட்சி மாற்றம் இலங்கைப் பிரச்சனையில் எத்தகைய தாக்கம் செலுத்தும்?**

போன்ற பல்வேறு விபரங்கள் பற்றி குறிப்பிட்ட கலாநிதியின் கருத்தை கேட்டறிந்தனராம்.

குறிப்பிட்ட கலாநிதி தவிர, வேறு சில அமெரிக்க சார்பான தமிழ், சிங்கள புத்திஜீவிகளது கருத்தையும் அமெரிக்க வெளியுறவுத் துறை தீவிரமாகத் திரட்டியது.

**தீர்வுப் பொதியை தயாரிப்பதில் முக்கிய பங்கு வகித்தவர் என்று கருதப்படும் குறிப்பிட்ட கலாநிதி, தீர்வுப் பொதிக்கு புலிகள் தான் முட்டுக்கட்டை. புலிகளை ஓரம் கட்டிவிட்டால், ஏனைய தமிழ்க் கட்சிகளை சரிக்கட்டிவிடலாம் என்ற ரீதியில் கருத்துக் கூறியிருக்கிறாராம்.**

அமெரிக்காவில் தன்னைச் சந்தித்த தமிழ் பிரமுகர்கள் சிலர் மத்தியில்கூட அக்கருத்தை துணிந்து கூறியிருக்கிறாராம்.

குறிப்பிட்ட தமிழ்க் கட்சிக்குள் நீண்ட காலத்தின் முன்னரே அமெரிக்காவின் ஆசிர்வாதத்துடன் புகுந்தவரான கலாநிதியை அமெரிக்க வெளியுறவுத்துறை சிறந்த மதியூகி என்று நம்புகிறதாம்.

குறிப்பிட்ட கலாநிதி கொடுத்த நம்பிக்கையும், இன்றைய சூழ்நிலையும்தான் அமெரிக்கா காங்கிரஸ் தூதுக்குழு விஜயத்திற்கு தூண்டுகோலாக இருந்துள்ளது.

அது என்ன இன்றைய சூழல்?

அமெரிக்காவுக்கு இந்து மகா சமுத்திரப் பிராந்தியத்தில் காலூன்றுவதற்கும், தன் மேலாதிக்கக் கரங்களை அகல விரிப்பதற்கும் பலத்த சவாலாக இருப்பது இந்தியாதான்.

இந்தியாவைச் சூழ உள்ள நாடுகளில் தளம் தேடிவரும் அமெரிக்கா, இலங்கையிலும் வசதியாக குந்தியிருக்க நீண்டகாலமாக முயன்றுவருகிறது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஜனாதிபதியாக இருந்தபோதுதான் அமெரிக்காவின் வரவுக்கு சிவப்புக் கம்பளம் விரிக்கப்பட்டது.

**ஆனால், அப்போது இந்தியாவில் நிலையான ஆட்சி இருந்தது. தன்னைச் சுற்றியுள்ள நாடுகளில் என்ன நடக்கிறது? என்று கண்டறிந்து பதில் நடவடிக்கை எடுக்கவும், இராஜதந்திர நகர்வுகளை மேற்கொள்ளவும் நேரம் இருந்தது.**

இலங்கை, இந்திய ஒப்பந்தம்கூட இலங்கையில் அமெரிக்க தலையீட்டுக்கு முற்றுப்புள்ளியிடுவதைத்தான் முதல் நோக்கமாக கொண்டிருந்தது. ஒப்பந்த ஷரத்திலும் அதனை வெளிப்படையாகவே குறிப்பிடவும் தவறவில்லை.

எனினும் சமீபகாலமாக இந்தியாவின் மத்திய ஆட்சி மாலுமி இல்லாத கப்பல் போன்று தள்ளாடிக் கொண்டிருக்கிறது. நிலையான ஆட்சியும் இல்லை. உறுதியான பிரதமரும் இல்லை.

தங்களுக்குள் நாற்காலிச் சண்டை போடவே ஆட்சியில் இருப்பவர்களுக்கு நேரம் போதவில்லை. அயல் நாடுகளில் என்ன நடக்கிறது என்று பார்க்க எங்கே நேரம் இருந்தது.

இதுதான் சந்தர்ப்பம் என்று அமெரிக்கா இலங்கைக்குள் மூக்கை நீட்டியது. பயிற்சி என்று தன் பச்சைக் கொமாண்டோக்களை இறக்கியது.

இலங்கையில் தளம் தேடும் அமெரிக்காவின் முயற்சியை இந்தியப் பிரதமராக இருந்தவர்கள் கவனிக்காமல் இருந்திருக்கலாம். ஆனால் இந்திய வெளியுறவுத் துறை கவனித்துக் கொண்டே இருந்தது. இங்குள்ள இந்தியத் தூதரகமும் தகவல்களை திரட்டிக் கொண்டே இருக்கிறது.

இந்தியாவில் நிலையான ஆட்சி ஏற்படுமானால், இந்து மகா சமுத்திரத்தில் அமெரிக்காவின் காலூன்றலை தடுக்க இந்திய வெளியுறவுத்துறை முற்படும். இலங்கையில் அமெரிக்காவின் தளம் காணும் முயற்சியை தடுப்பதும் அதில் ஒன்றாக இருக்கும்.

இதனால் அமெரிக்கா தன் சதித்திட்டங்களை தீவிரப்படுத்த நினைப்பது ஒரு புறமிருக்க, இலங்கை அரசுகூட சற்றுக் கலக்கத்தில்தான் இருக்கிறது.

கவுடா, குஜ்ரால் போன்றோரால் எந்தத் தொல்லையும் இருக்கவில்லை. அதிலும் குஜ்ரால் இலங்கை வெளிநாட்டமைச்சருக்கு நல்ல தோஸ்த்.

சோனியா காந்தியையும், இந்திரா காங்கிரசையும் பகைத்துக் கொள்ள விரும்பாத இந்திய பிரதமர்கள், இலங்கை விவகாரத்தில் கவனம் செலுத்தாமல் இருந்ததுக்கு இன்னொரு காரணமும் இருந்தது.

இலங்கைப் பிரச்சனையில் தமிழர்களுக்கு சார்பாக பேசினால், புலிகளுக்கு ஆதரவான நிலையாக சோனியாவும், காங்கிரசும் நினைத்தால் வம்பாகிவிடும். அதுதான் தவிர்த்தார்கள்.

உள்நாட்டு அரசியல் நலன் சார்ந்த இந்த அம்சம் இலங்கை அரசுக்கும் சாதகமாக இருந்தது.

**ஆனால், பாரதிய ஜனதா ஆட்சிக்கு வரப் போகிறது என்றதும் அமெரிக்காவுடன் சேர்ந்து இலங்கை அரசுக்கும் உள்ளூர சந்தேகங்கள், கலக்கங்கள் எழுந்துள்ளன.**

ஆட்சிக்கு வந்தால் அணுக்குண்டுகள் செய்வோம். வலிமையான பாரதத்தை உருவாக்குவோம் என்று முன்னரே கூறிவிட்டது பாரதிய ஜனதா கட்சி.

**இந்தியா அணுக்குண்டுகள் செய்யவே கூடாது என்று முடக்கப் பார்த்த நாடு அமெரிக்கா. வல்லரசாகும் வாய்ப்பு இந்தியாவுக்கு இருக்கக்கூடாது என்பதுதான் அமெரிக்காவின் இந்தியா தொடர்பான இரகசியக் கொள்கை.**

**நிலையான பிரதமர், நிலையான ஆட்சி. வலிமையான பாரதம், இந்த மூன்று அம்சங்களும் பாரதிய ஜனதா ஆட்சியைப் பிடித்தால் சாத்தியப்படத் தொடங்கிவிடுமே என்பதுதான் அமெரிக்காவின் கவலை.**

பாரதிய ஜனதா என்பது இந்துமதம் சார்பான கட்சி. இலங்கைத் தமிழர்களில் கணிசமானோர் இந்துக்கள். அதுதவிர, பாரதிய ஜனதாவுடன் கூட்டாக உள்ள மும்பாய் கட்சியான சிவசேனை, தமிழகக் கட்சிகளான ம.தி.மு.க., பாட்டாளி மக்கள் கட்சி போன்றவை தீவிர புலி ஆதரவுக் கட்சிகள். தமிழீழமே முடிந்த முடிவு என்று இப்போதும் கூறிவரும் கட்சிகள்.

சிவசேனை கட்சியின் தமிழகத் தலைவர் நகைமுகன். இவர் புலிகளுக்கும் இந்திய தீவிரவாதிகளுக்கும் பாலமாக இருப்பதாக கருதி முன்னர் ஒரு தடவை கைது செய்யப்பட்டவர். ராஜீவ் காந்தி கொலையில்கூட சந்தேகிக்கப்பட்டவர்.

**வடக்கு-கிழக்கு யுத்தத்தில் இந்துக் கோயில்கள் தாறுமாறாக பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனினும் அது பற்றி அரசு கவலைப்படுவதில்லை. கிறிஸ்தவ தேவாலயங்கள் பாதிக்கப்பட்டால் மட்டும் விசாரணைக் கமிஷன் போடுவதாக ஒரு பேச்சுக்காக என்றாலும் ஜனாதிபதி அறிவித்தது உண்டு.**

அதற்கு காரணம் கிறிஸ்தவ தேவாலயங்கள் மீதான மதிப்பு என்பதைவிட, கிறிஸ்தவ தேவாலயங்கள் பாதிக்கப்பட்டால், கிறிஸ்தவ மக்களை பெரும்பான்மையாக கொண்ட பல நாடுகள் முகம் சுளிக்கும் என்ற பயம்தான் காரணம்.

பாரதிய ஜனதா ஆட்சிக்கு வந்தால் இந்து ஆலயங்கள் தாக்கப்பட்டால்கூட விசாரணைக் கமிஷன் போடுவதாக அறிவிக்க வேண்டிய நிலை ஏற்படக்கூடும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, சோனியா காந்தியை பரம எதிரியாக கருதும் பாரதிய ஜனதா, புலிகள் தொடர்பாக முன்னைய அரசுகள் கைக்கொண்ட கொள்கையைத் தொடரும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

அதுதான் இலங்கை அரசின் கலக்கம். அதனால்தான் வெளிநாட்டமைச்சர் கதிர்காமர் வாஜ்பேயியை சந்திக்க கடுகதி வேகத்தில் சென்று வந்தார்.

எனினும், உள்நாட்டுப் பிரச்சனையில், தலையிடமாட்டோம் என்று நாடுகளும், அதன் தலைவர்களும் கூறுவதெல்லாம் சம்பிரதாயமான கருத்துக்கள்தான் என்பது தெரியாத சமாச்சாரமல்ல.

**இந்திய ஆட்சி மாற்றம் குறித்து இலங்கை அரசு மட்டுமல்ல, தென்னிலங்கை சிங்களப் பேரினவாத விமர்சகர்கள்கூட கிலிகொண்டிருக்கிறார்கள். அல்லது சந்தேகம் கொண்டிருக்கிறார்கள்.**

**இலங்கைத் தமிழர்கள் இன்று தனிமைப் பட்டு நிற்பதை எண்ணி உள்ளூர புளகாங்கிதம் அடையும் அவர்களுக்கு, எங்கே, இந்தியாவின் அனுதாபம் மறுபடி கிடைத்துவிடுமோ என்ற நினைப்பு வயிற்றில் புளியைக் கரைக்கிறது.**

மடியிலே கனம் இல்லாவிட்டால் இந்தப் பயம் கிடையாது. ஆனால், சமாதான நாடகங்கள், கனமற்ற தீர்வுப் பொதியை வைத்துக் கொண்டு, அதனை அமுல் நடத்தப்போவதாக செய்யப்படும் ஆரவாரங்கள் அனைத்துமே அப்பட்டமான ஏமாற்று என்பதை கூர்ந்து நோக்கும் எவரும் கண்டு கொள்ளக்கூடும் என்ற பயம் இருக்கிறது.

குறிப்பாக வடக்கு-கிழக்கு இணைப்பை இந்தியா வலியுறுத்தக்கூடும் என்ற அச்சமும் அரசுக்கு இருக்கிறது.

**அதனால்தான் வெற்றிபெறப்போகும் கட்சியை கைக்குள் போட்டுக் கொள்ள வெளிநாட்டமைச்சர் வில்லிலிருந்து புறப்பட்ட அம்பாக பாய்ந்து திரிகிறார். முன்கூட்டியே எதிர்காலப் பிரதமரை வாழ்த்துகிறார்.**

**வெற்றிபெற்ற பின்னர் வாழ்த்து அனுப்புவதுதான் நாடுகளுக்கிடையே மரபு. இங்கே அந்த மரபை உடைப்பதற்கு காரணமாக இருந்தது. குறு குறுக்கும் மனது.**

இலங்கை அரசின் கலக்கத்தை புரிந்து கொண்டுதான் அமெரிக்காவும் தனது இராஜதந்திர நகர்வுகளை மேற்கொண்டுள்ளது.

**இந்தியாவில் பெப்ரவரியில் பொதுத் தேர்தல் நடக்க இருக்கிறது. அதற்கு முன்பாக இலங்கையில் வலுவாக காலூன்றக் கூடியதும், தென்னாசியப் பிராந்தியத்திலும் அமெரிக்காதான் சமாதானத் தூதுவன் என்று காட்டக் கூடியதுமான திட்டம் ஒன்று அமெரிக்க வெளியுறவுத் துறையால் வகுக்கப்பட்டது.**

இலங்கையில் தனக்கு விசுவாசமான தமிழ்க் கட்சி கலாநிதியின் தகவல்கள், மற்றும் நிலையான கொள்கை இல்லாத தமிழ்க் கட்சிகள் தமக்கு ஒத்துழைக்கும் என்ற நம்பிக்கை, பிரதானமாக இலங்கை அரசின் கலக்கமான மனநிலை என்பவற்றை அச்சாணியாகக் கொண்டு வகுக்கப்பட்டதுதான் அந்தத் திட்டம்.

இலங்கை இனப்பிரச்சனையில் அமெரிக்க மத்தியஸ்தத்தை பிரச்சனையில் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் ஏற்க வைப்பது.

இலங்கை அரசின் தீர்வுப் பொதியை சில திருத்தங்களுடன் நிறைவேற்றி முடிப்பது.

மேற்கண்ட இரண்டு திட்டங்களையும் நிறைவேற்றி முடிப்பதற்கான வழி வகைகளை அமெரிக்காவில் கூடி ஆராய்ந்த பின்னரே, அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதிகள் இலங்கைக்கு திக் விஜயம் செய்தனர்.

இலங்கை அரசும் வெகு விரைவாக சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தி முடிக்கலாமா? என்று ஆராய்ந்திருக்கிறது. இந்தியாவில் புதிய அரசு பதவி ஏற்று ஸ்திரமாகி, வெளிவிவகாரங்களில் பார்வையை திருப்ப முன்னர் வாக்கெடுப்பை நடத்தி முடிப்பது பற்றியே ஆராயப்பட்டதாம்.

**வடக்கு-கிழக்கு இணைப்புக்கு சாதகமான வெளித்தலையீடு ஏற்பட முன்பாக, வடக்கு-கிழக்கு பிரிப்புடன் கூடிய தீர்வுத் திட்டத்தை ஒப்பேற்றி முடிப்பதுதான் புத்திசாலித்தனம் என்று அரசாங்க மட்டத்தில் ஒரு அபிப்பிராயம் இருக்கிறதாம்.**

இலங்கை அரசினதும், அமெரிக்காவினதும் நலன்கள் ஒத்துப்போவதால், திரைமறைவு காய் நகர்த்தல்கள் கொழும்பில் ஆரம்பமாகின.

அமெரிக்க தடையை எதிர்த்து புலிகள் அங்கு வழக்குத் தொடுத்துள்ளனர். சில இராஜதந்திர காரணங்களுக்காக புலிகள் தொடுத்துள்ள அந்த வழக்கை, அமெரிக்காவின் தடையால் புலிகள் பாதிக்கப்பட்டதன் விளைவு



வாஜ்பேயியுடன் கதிர்காமர்—*அட்வான்ஸ் ஐஸ்*

தான் என்று தப்பாக கணக்குப் போட்டிருக்கிறது அமெரிக்கா.

**'ஒப்பரேஷன் ஜயசிக்குறுய்' மூலம் இராணுவ முனையிலும், யாழ் மாவட்ட உள்ளூராட்சித் தேர்தல் ஊடாக அரசியல் முனையிலும் புலிகளை பலவீனப்படுத்தும் இருமுனைத் தந்திரோபாயம் பெப்ரவரி மாதத்தின் முன்பாக வெற்றியளித்து விடும் என்பதும் இலங்கை அரசை நம்பி அமெரிக்கா போட்டுள்ள கணக்கு.**

பலவீனமான புலிகளை பேச்சு மேசைக்கு கொண்டுவருவது அத்தனை கஷ்டமாக இருக்காது. தடையை நீக்க வேண்டுமானால், இலங்கை அரசுடன் பேச்சுக்கு சம்மதிக்க வேண்டும் என்று புலிகளுடன் பேரம் பேசிப் பார்க்கலாம் என்றும் அமெரிக்கா காங்கிரஸ் பிரதிநிதிகள் தங்களைச் சந்தித்த பிரமுகர் ஒருவரிடம் கூறியதாக தெரிகிறது.

'ஜயசிக்குறுய்' எந்தக் கட்டத்தில் உள்ளது? யாழ் உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களிப்பு சுறு சுறுப்பாக இருக்குமா? புலிகளின் பலம் என்ன? என்பன பற்றித்தான் தங்களைச் சந்தித்த பிரமுகர்களிடமும், பத்திரிகையாளர்களிடமும் அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதிகள் துருவித் துருவிக் கேட்டனராம்.

எனினும் அமெரிக்கக் காங்கிரஸ் பிரதிநிதிகள் எதிர்பாராத தகவல்கள்தான் கிடைத்தனவாம். 'ஜயசிக்குறுய்' பெப்ரவரி 4ம் திகதி முன்பாக இலக்கை எட்டாது. அதன் பின்னர் இலக்கை அடைந்தாலும் பாதையை தக்கவைக்க முடியாது. இலக்கை அடைவது என்றால் புலிகளைவிட, படையினர்தான் பாரிய ஆட்பல இழப்பையும், ஆயுத இழப்பையும் சந்தித்தாக வேண்டும் என்ற விபரங்கள் ஆதாரபூர்வமாக எடுத்துக் காட்டப்பட்டபோது திகைத்துப் போனார்களாம்.

வடக்கு-கிழக்கு யுத்தம் தீவிர மான பின்னர் உள்ளூராட்சித் தேர்தல் நடப்பது இது முதற் தடவையல்ல. 1994ல் கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சிச் சபைகள் பெரும்பாலானவற்றை ரெலோ கைப்பற்றியது. அதனால் ஒன்றும் தமிழ் மக்களின் அரசியல் தலைமையாக அந்த இயக்கம் கருதப்படவும் இல்லை, தமிழ் மக்களிடம் அந்த இயக்கம் முன்னணி சக்தியாகவும் இல்லை, என்ற விபரங்கள் கூட அமெரிக்கக் காங்கிரஸ் தூதுக் குழுவுக்கு புதிதாக இருந்ததுதான் ஆச்சரியம் என்கிறார் அவர்களை சந்தித்த புத்திஜீவி ஒருவர்.

**மறுபுறம் எதிர்க்கட்சியை வழிக்கு கொண்டு வந்து, தங்கள் திட்டப்படி அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கச் செய்ய முடியுமா என்றும் அமெரிக்க காங்கிரஸ் தூதுக்குழு நாடிபிடித்துப் பார்த்தது.**

மேற்படி திட்டத்தால் ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு மட்டும்தான் இலாபம் என்பதை நன்கு தெரிந்து கொண்ட ஐ.தே.கட்சி பிடிகொடாமல் நழுவிவிட்டது.

### எக்ஸ்ரே ரிப்போர்ட்

தாங்கள் போட்ட திட்டத்திற்கு தோதாக கள நிலவரம் இல்லையென்று தெரிந்ததும், சலிப்பாகிவிட்டனர் அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதிகள்.

கடைசியாக தமிழ்க் கட்சிகளை சந்தித்த போது சில தமிழ்க் கட்சி பிரமுகர்கள் புலிகளை ஒருவாங்கு வாங்கி, அமெரிக்க பிரதிநிதிகளை குளிர்விக்க முற்பட்டனராம்.

இதற்கிடையே அமெரிக்கா பிரதிநிதிகளை சந்தித்து நாளாந்த பிரச்சனை பற்றி கூறப் போவதாக புளொட் சித்தார்த்தன் தெரிவித்திருந்தார்.

ஆனால், புளொட் உப தலைவர் மாணிக்கதாசன் அமெரிக்கா தூதுக் குழுவை சந்திக்க வேண்டாம் என்று கூறிவிட்டதால், சித்தார்த்தன் சந்திப்பைத் தவிர்க்க யாழ்ப்பாணம் போய் விட்டார்.

**என்ன காரணமாக இருந்தாலும் சரி, புளொட் அமெரிக்க காங்கிரஸ் தூதுக் குழுவை சந்திக்காமல் விட்டமை நல்ல முடிவுதான்.**

தம்மைச் சந்தித்த தமிழ்க் கட்சி பிரமுகர்களிடம் அரசின் தீர்வு திட்டத்தை 95 வீதமான தமிழ் மக்கள் ஆதரிப்பதாக கூறியதுடன், அதனை ஆதரிக்குமாறும் கேட்டனராம் காங்கிரஸ் பிரதிநிதிகள்.

அதன்மூலம், தீர்வை ஆதரிக்காத மீதி 5 வீதமான மக்களைத்தான் தமிழ்க் கட்சிகளும் பிரதிபலிப்பதாக கூறாமல் கூறியும்கூட, சந்தித்த கட்சிகளுக்கு கோபம் வராதது ஆச்சரியம்.

அமெரிக்க மத்தியஸ்தம் வகிப்பது தொடர்பான கேள்விகளும் கேட்கப்பட்டதாம். தமிழ்க் கட்சி பிரமுகர்கள் தலையாட்டியதாக கேள்வி.

வீடு கொளுத்தும் ராசாவுக்கு நெருப்பு எடுத்துக் கொடுத்துவிட்டு வந்தனர் தமிழ்க் கட்சி பிரமுகர்கள் சிலர்.

**ஆனாலும் இந்த தமிழ் கட்சிகளை நம்பி காலைவிட அமெரிக்கா தயாரில்லை. வன்னிக் களம் பற்றி அறிந்த செய்திகள், புலிகளின் பலம் பற்றி கிடைத்த தகவல்கள், எதிர்க்கட்சியின் முரண்டு பிடித்தல் போன்றவற்றால் அவசரத் தலையீட்டுக்கான அமெரிக்காவின் திட்டம் சற்று முனை மழுங்கியிருப்பதாகவே கூறப்படுகிறது.**

தொங்கிய முகத்தோடுதான் அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதிகள் திரும்பிப் போயிருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது.

யாழ்ப்பாணம் செல்ல விரும்பியது போல அமெரிக்க காங்கிரஸ் தூதுக்குழு அனுமதி கேட்டதும், பாதுகாப்பு இல்லை என்று அரசு மறுத்ததும்கூட ஒரு நாடகம் தான். இரு தரப்பும் சேர்ந்து ஆடும் நாடகத்தை மறைக்கும் முயற்சிதானாம்.

**அப்படியில்லை என்றால், "அங்கே இயல்பு நிலை இருப்பதாகத்தானே தேர்தல் நடத்துகிறீர்கள், பின்னர் பாதுகாப்பு இல்லை என்கிறீர்களே?" என்று காங்கிரஸ் தூதுக்குழு கண்டித்திருக்கும் அல்லவா. கேட்டார்களாம். மறுத்தார்களாம். போய்விட்டார்களாம்.**

எப்படியோ, இராணுவ முஸ்தீபுகள், மினித் தேர்தல், மற்றும் சர்வசன வாக்கெடுப்பு யோசனை என்று பல கோணங்களில் தமிழ் பேசும் தரப்பின் பலத்தை குறைத்து, எடை குறைந்த பொதியை தலையில் கட்டுவதுதான் அரசின் இலக்கு. பேரினவாதத்தை திருப்தி செய்யக்கூடிய இலக்கும் அதுதான்.

அமெரிக்க கழுகுகளோடு மட்டுமல்ல, எந்தப் பேயுடன் கூட்டுச் சேர்ந்தாவது தங்கள் அரசியல், இராணுவ இலக்கை அடைய அரசு பின்நிற்கப்போவதில்லை.

ஆனால் புலிகளின் பலம் காரணமான கள நிலவரம் உலக வல்லரசினதும், இலங்கை அரசினதும் திட்டங்கள் நிறைவேறாமல் தடுத்து வருகிறது.

**நாரதர்**

### பளிச் பளிச்

அமெரிக்க காங்கிரஸ் தூதுக்குழு தலைநகரில் தங்கியிருந்தபோது, அயலகத் தூதரகமும் சுறுசுறுப்பாக இயங்கியதாம்.

அவர்களை யார் யார் சந்தித்தனர்? தூதுக்குழுவினர் என்ன பேசினர்? குறிப்பாக என்ன கேட்டனர்? என்பதையெல்லாம் அறிய ஆர்வம் காட்டப்பட்டதாம்.

அமெரிக்க தூதுக்குழுவையும் சந்தித்துவிட்டு, அயலக தூதரகத்திற்கும் விலாவாரியான விளக்கம் கொடுத்து இரண்டு பக்கமும் நல்ல பெயர் எடுத்துக் கொண்டனராம் சில பிரமுகர்கள்.

---

## அதிரடி அய்யாத்துரை



**வேட்பு மனுப்போட்டார்கள்.** பிழைச்சுப்போச்சு. ஹி...ஹி...ஹி. "அதுவும் நல்லதுதான்," என்றனர்! பின்னர் வழக்குப் போட்டனர். அதற்கு தவணை போடப்பட்டது. "எல்லாம் நன்மைக்கே," என்றனர். விருப்பம் இல்லை என்றால், கூட்டான கட்சியை கேட்கவைத்தது யார்? வழக்குப்போடத் தள்ளியது யார்? 'ஹூ இஸ் த ப்ளாக் ஷீப்? அல்லது புளு ஷீப்?'

**யாழ்ப்பாணத்து முதலாளிமார்** சிலர் தமிழ்க் கட்சிகள் சிலவற்றுக்கு நோட்டுக்கட்டு நீட்டியிருக்கினமாம். இந்த விபரங்கள் எப்படியோ ரெண்டு எழுத்தாருக்கும் எட்டியிருப்பதாகக் கேள்வி. சோழியன் குடுமி சும்மா ஆடாது, முதலாளிமாரின் கையும் பணத்தை சும்மா நீட்டாது. தம்பிமார் பதவிக்கு வந்தா பொசிப்புக் காணத்தான் இப்பவே இறால் போடுகினம். அவைக்கு சுறா கிடைக்கும். சனத்துக்கு? பெப்பேதான்!

**காணாமல் போனோருக்காக** கமிஷன் போடுவதாகக் கூறி வெற்றிகரமான ஒருமாதம் பூர்த்தியாகப்போகுது. கமிஷன் போட்டாலும் மாண்டவை மீளப்போவதும் இல்லை. மாளவைத்தவைக்கு தண்டனை கிடைக்கப்போவதும் இல்லை. ஆனாலும் கமிஷன் போடுவதாகச் சொன்ன வாக்குறுதியை தேடிக் கண்டுபிடிக்கவும் ஒரு கமிஷன் போடாவிட்டால் சரி.

**கடைசிவாரத்தில்தான்** எதிர்பாராத சம்பவங்கள் குடாநாட்டில் நடக்கக்கூடும் எண்டு பலரும் எதிர்பார்க்கினம். வீடுகளுக்குள்ளேயே இருக்கவேணும் எண்டு சனம் முடிவு செய்து போட்டுதாம். இடையிலே மாட்டுப்படாமல் இருக்கிறதுதானே புத்திசாலித்தனம்? "வேடிக்கை பார்க்கப்போய் விபரீதம் ஏன்?" என்கிறாராம் திருவாளர் பொதுஜனம்.

**நடக்கப்போவது ரெண்டு எழுத்தாருக்கு** எதிரான தேர்தல் என்று அதிகாரத்தரப்பார் கூறிக்கொண்டிருக்கினம். ரெண்டு எழுத்தார் ஏதாவது செய்யாட்டிக்கூட, அவைக்கு கெட்ட பெயர் தேடிக்கொடுக்க விஷமங்கள், விபரீதங்கள் திட்டமிடப்படலாம் எண்டமாதிரி விஷயம் தெரிந்த ஆட்கள் கதைக்கினமாம். அதனால் சனம் தப்பிக்கொள்ளுறதுதான் மெத்தச் சரி. ஏற்கனவே மட்டக்களப்பு சந்தை குண்டுவெடிப்பு மர்மம் துலங்கவில்லையல்லோ!

**எங்கும் அப்பாவிகளுக்குத்தான்** ஆபத்து. கனடாவில் இரண்டு தமிழ்க் கோஷ்டிகளுக்குள் மோதலின் எதிரொலியால் பலியான இளைஞரும் அப்பாவிதானாம். அடையாளம் தெரியாமல் சுட்டுப் போட்டினமாம். சுட்டதும் இலங்கைத் தமிழர்; சுடப்பட்ட அப்பாவியும் இலங்கைத் தமிழர். விஞ்ஞானத்துறையில் மிகவும் கெட்டிக்கார மாணவனாம். தப்பான கோஷ்டிச் சண்டை தரமான தமிழ் விஞ்ஞானியை சாப்பிட்டுப்போட்டுது.

**'கேள்விகளால் ஒரு வேள்வி'** என்று ரூபவாஹினியில் நிகழ்ச்சி ஒன்று ஒளிபரப்பாவதுண்டு. அது எந்த மூலைக்கு? யாழ்ப்பாணத்தில் சில பகுதிகளில் சனம் கேட்கிற கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் கட்சிகள் படும்பாடு இருக்குதே- சொல்லி வேலையில்லை. "பட்ட கஷ்டம் போதும் எண்டு வாயை மூடிக்கொண்டு இருப்பினம் எண்டால் கெம்பிக் கொண்டல்லோ நிக்குதுகள்!" எண்டு பொருமினாராம் ஒரு தமிழ்க் கட்சிப் பிரமுகர்.

**அமெரிக்க பல்கலைக்கழகம்** ஒன்றின் கருத்தரங்கில் நீலமானவர் உரையாற்றினவராம். "பொதி சூப்பரோ சூப்பர்!" என்று புகழ்ந்து தள்ளிப்போட்டு வந்திருக்கிறார். அமெரிக்கா அன்னாரை நன்கு பயன்படுத்தி வருகிறதாம். ரெண்டு எழுத்தாரும் அன்னாரில் படுகோபத்தில் உள்ளனர். 'விஷத்தின் நாமம் இவர் பெயர்' எண்டு ரெண்டு எழுத்தாரின் பத்திரிகையில் பட்டம் சூட்டப்பட்டுள்ளார்.

**இம்முறை** குட்டித் தேர்தல் பிழை என்று தெரிந்தும், வாக்களிப்போருக்கு பொருத்தமான பொன்மொழி!

"மனிதனின்
இயற்கையான குணம்
சிறப்பாகச் சிந்திப்பது;
ஆனால்—
முட்டாள்தனமாக செயற்படுவது!"

# அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது




# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# கொடுக்கப்பட்ட கொண்டுவரப்பட்ட ஆயுதங்களும்

இந்தியப் படையினருக்கு எதிராக புலிகள் மட்டும் தான் எதிர்ப்புக் குரல் கொடுத்தனர் இந்தியாவை பகைத்தனர் என்று இப்போது சிலர் கூறிவரக் கேட்கிறோம்.

ஆனால் இலங்கையில் மட்டுமன்றி, இந்தியாவிலும் இந்தியப் படை இலங்கையில் இருந்து திரும்பவேண்டும் என்ற கருத்து உரத்து ஒலித்தது.

இந்தியாவின் வெளிவிவகார செயலாளராக இருந்தவர் ஏ.பி.வெங்கடேஸ்வரன். இலங்கை இனப்பிரச்சனை விவகாரத்தில் ராஜீவ் காந்தியின் கொள்கையை அவர் ஏற்கவில்லை.

அதனால் வெளியுறவுத் துறைச் செயலாளர் பதவியில் இருந்து தூக்கி எறியப்பட்டார் ஏ.பி.வெங்கடேஸ்வரன்.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் மிகத் தவறான ஒன்றாகும். இலங்கைத் தமிழர்களின் அபிலாசைகளை கணக்கில் எடுத்துக் கொள்ள ராஜீவ் தவறிவிட்டார் என்

புலிகளும் பேச்சு நடத்தியபோது,இந்தியப் படை வெளி யேறினால் இலங்கைப் படைகள் தமிழர் களைத் தாக்கும் என்ற பிரசாரத்தையும் மேற்கொண்டது.

இலங்கை அரசு தனது வாக்குறுதிகளை நிறைவேற்றும்வரை ஆயுதங்களை ஒப்படைக்க முடியாது என்று பிரபாகரன் கூறியபோது, அதனை ஏற்க முடியாமல் பலவந்தமாக ஆயுதங்களைக் களைய முயன்றனர் இந்தியப் படையினர்.

பின்னர் தம்மை வெளியேறுமாறு இலங்கை அரசு கூறியபோது, பிரபாகரன்

அதனால், ஆட்சியில் உள்ள கட்சிகள் எல்லாம் வழக்கமாகச் செய்வதுபோல, எதிர்க்கட்சிதான் இணைப்பை எதிர்க்கிறது. அதுதான் நாம் கொஞ்சம் நிதானமாக அடியெடுத்து வைக்க வேண்டியிருக்கிறது என்று புலிகளிடம் கூறிவிட்டார் பிரேமதாசா.

புலிகளுக்கு பிரேமதாசவின் சமாளிப்புத் தந்திரம் புரியாமல் இல்லை. இந்தியப் படை வெளியேறும்வரை பொறுத்துக் கொள்ளலாம், அதுவரை கிடைக்கக்கூடிய பயன்களை பெற்றுக் கொள்ளலாம் என்று கருதிக் கொண்டிருந்தனர்.

## இரகசிய ஏற்பாடுகள்

பேச்சுவார்த்தைக் காலத்தில்தான் கொழும்பில் புலிகளின் நடமாட்டம் அதிகமானது.

கொழும்பின் சந்து பொந்துகள், சூட்சுமங்கள் அனைத்தையும் புலிகளின் உளவுப் பிரிவினர் கண்டறிந்து கொண்டனர்.

பிரபாகரனின் நேரடியான கட்டுப்பாட்டில்தான் புலிகளின் உளவுப்பிரிவு செயற்படுகிறது.

அப்படியிருந்தும், இலங்கை அரசின் ஆயுதங்களை புலிகள் பெற்றுக் கொண்டு, தங்கள் மறைவிடங்களுக்குக் கொண்டு சென்றனர்.

அப்போதுகூட புலிகள் விழிப்பாகவே இருந்தனர்.

ட்ரக் வண்டிகளை இராணுவச் சிப்பாய்கள்தான் ஓட்டிச் சென்றனர். நேராக அவற்றை தங்கள் மறைவிடங்களுக்கு

ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தனர்.

தமிழ்நாட்டில் இருந்து ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் கையொப்பமுடன் அனுப்பப்பட்ட அக் கடிதத்தை ஈ.பி.டி.பி. முக்கியஸ்தர்களில் ஒருவரான மு.சந்திரகுமார் கொழும்பில் கையளித்தார்.

"அந்நிய தலையீடு இல்லாமல், எமது பிரச்சனையை எமக்குள் தீர்க்கும் உங்கள் முயற்சியை நாம் வரவேற்கிறோம். ஆதரிக்கிறோம்" என்று அக்கடிதத்தில் தெரிவித்தது ஈ.பி.டி.பி.

ஈ.பி.டி.பி இயக்கத் தினருக்கும், பிரேமதாசா அரசுக்கும் இடையில் உறவு மலர அடியெடுத் துக் கொடுத்தது அக் கடிதம்.

பதுதான் வெங்கடேஸ்வரனின் அபிப்பிராயம்.

இலங்கை அரசுக்கும், புலிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் ஆரம்பமானவுடன் இந்தியா அதிருப்திகளை வெளியிடத் தொடங்கியது.

இந்தியப் படையினர் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை துரிதப்படுத்தினர்.

இலங்கை அரசுக்கும், போராளிகளுக்

இலங்கை அரசுமீது கொண்டிருந்த சந்தேகத்தையே இந்தியப் படையும் வெளியிட்டது.

ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு இலங்கை அரசுடன் சமரசமாகச் செல்லுமாறு புலிகளிடம் வலியுறுத்தியது இந்தியா.

அதே இந்தியாவின் கண்முன்பாகவே ஆயுதங்களுடனும், சீருடைகளுடனும் சென்று இலங்கை அரசுடன் பேச்சு நடத்தினார்கள் புலிகள்.

ஆயுதங்களை ஒப்படைத்தால்தான் இலங்கை அரசாங்கம் மேலும் இறங்கிவரும்

அமிர் கொலையில் விச்சு இறந்த பின்னர்,புலிகளின் உளவுப்பிரிவுக்கு பொட்டம்மான் பொறுப்பாக நியமிக்கப்பட்டார்.

பிரபாகரனின் நம்பகமான தளபதிகளில் ஒருவரான பொட்டம்மானின் உத்தரவுப்படி கொழும்பில் புலிகளின் எதிர்கால செயற்பாடுகளுக்கான வாய்ப்புக்கள் கண்டறியப்பட்டன. தொடர்புகளும், மறைவிடங்களும் உருவாக்கப்பட்டன.

**"தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை தாமாக முன்வந்து சிறீலங்கா தலைமைகள் தரப்போவதில்லை. ஆனால் இம்முறை பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தால் ஏமாற்றமடையப்போவது நாமாக இருக்கக்கூடாது." என்பதுதான் பிரபாகரனால் உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்ட விளக்கம்.**

மாத்தையா உட்பட புலிகள் இயக்க பிரதிநிதிகள் சிலருக்கு பிரேமதாசாவில் ஓரளவு நம்பிக்கை ஏற்பட்டிருந்தது.

ஆனால், பிரபாகரன் மட்டும் 'நம்ப நட நம்பி நடவாதே' என்பதைத்தான் இலங்கை அரசாங்கங்கள் தொடர்பான கொள்கையாக கொண்டிருந்தார்.

**இந்தியப் படையினர் முற்றாக வெளியேறியதும், வடக்கு-கிழக்கில் இலங்கைப் படையினரையும் முகாம்களுக்குள் முடக்க வேண்டும்.**

**இலங்கை அரசுடன் மீண்டும் போர் தொடங்கினால், இனிமேல் கொழும்பிலும் பாரியளவான நடவடிக்கைகள் இடம் பெற வேண்டும் என்று புலிகள் முடிவு செய்திருந்தனர்.**

கொழும்பில் இரண்டுவிதமாக புலிகளின் நடவடிக்கைகள் இருந்தன.

பகிரங்கமாக இருந்த தங்குமிடங்கள். தம்மை புலிகள் என்று இனம் காட்டியபடி அவற்றில் தங்கியிருந்தனர்.

புலிகள் என்று தம்மை இனம் காட்டாமல் வாடகைக்கு பிடிக்கப்பட்ட வீடுகள். மறைவிடங்கள்.

அரசுடன் உறவு முறியுமானால் பகிரங்கமான தங்குமிடங்களை காலி செய்துவிட்டு போய்விடலாம். பகிரங்கமாக புலிகள் என்று அறியப்பட்டவர்களும் சென்றுவிடுவர்.

இரகசிய மறைவிடங்களும், புலிகள் என அறியப்படாத புலிகள் இயக்க உறுப்பினர்களும் தொடர்ந்தும் இருக்க முடியும்.

பிரேமதாசா அரசுடன் பேச்சு நடத்த முன்னரே கொழும்பில் புலிகள் குண்டுத் தாக்குதல்களை நடத்தியிருந்தனர். சில மறைவிடங்களையும் கொண்டிருந்தனர்.

ஆயினும், அரசுடன் பேச்சுக்கள் ஆரம்பமானபின்னர் கொழும்பும் அதன் சுற்றுப்புறங்களும் புலிகளின் உளவுப் பிரிவினருக்கு நன்கு பரிச்சயமாகியது.

குறிப்பிட்டளவான ஆயுதங்களும், வெடிமருந்துகளும், கைக்குண்டுகளும் மிகப் பத்திரமான மறைவிடங்களில் அப்போதே சேகரித்து வைக்கப்பட்டன.

## ஆயுத உதவி

**இதில் வேடிக்கை என்னவென்றால், புலிகள் கொழும்புக்குள் உள்ள மறைவிடங்களுக்கு ஆயுதங்களை கொண்டுவந்து சேர்த்த நேரத்தில், முல்லைத்தீவு காட்டுக்குள் புலிகளின் மறைவிடத்தில் இலங்கை இராணுவத்தினர் ஆயுதங்களை இறக்கிக் கொண்டிருந்தனர்.**

1989 ஜூலை மாதத்தில் இலங்கை இராணுவத்தினரின் நான்கு ட்ரக் வண்டிகளில் ஆயுதங்கள் கொண்டு செல்லப்பட்டன.

ஆயிரத்துக்கு மேற்பட்ட ரி.56 துப்பாக்கிகள், ஐயாயிரத்துக்கு மேற்பட்ட கைக்குண்டுகள் என்பவை அந்த ட்ரக் வண்டிகளில் எடுத்துச் செல்லப்பட்டன. வெடிமருந்துகளும் வழங்கப்பட்டன.

இந்தியப் படையினர் முல்லைத்தீவு பகுதியில் தேடுதல் வேட்டைகளை ஆரம்பித்திருந்தனர். காட்டுப்பகுதிகளுக்குள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை அரசு புலிகளுக்கு ஆயுதம் வழங்குகிறது என்ற இரகசியத் தகவலையும் இந்தியா அறிந்திருந்தது.

இந்திய உளவு நிறுவனங்கள் அத்தகவலைப் பெற்று, ராஜீவ் காந்திக்கும் இந்தியப் படைத் தலைமைக்கும் தெரியப்படுத்தி இருந்தன.

அதனால் முல்லைக் காட்டுப் பகுதிகளை நோட்டமிட இந்தியப் படையினர் முற்பட்டனர்.


யாழ்ப்பாணத்தில் இந்திய அமைதிப் படை

கொண்டு சென்றால், படையினருக்கும் அந்த இடங்கள் தெரியவந்துவிடும்.

அதனால் காட்டுக்குள் ஒரு இடத்தில் வைத்து தங்கள் வாகனங்களில் ஆயுதங்களை மாற்றிக்கொண்டு புலிகள் சென்றுவிடுவர்.

அதேசமயம் புலிகள் இயக்க உறுப்பினர்கள் மற்றும் பிரமுகர்கள் வன்னியில் உள்ள சில படை முகாம்களுக்கு சென்று வந்தனர். அவ்வாறு சென்று வரும்போது, முகாம்களின் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் நோட்டமிடத் தவறவில்லை.

## ரெலோ பிளவு

ரெலோ இயக்கத்தில் இக்கால கட்டத்தில் விரிசல்கள் தோன்றியிருந்தன.

செல்வம் தலைமையில் இயங்கிய ரெலோவினர்தான் இந்திய படையுடன் இணைந்து வடக்கு-கிழக்கில் செயற்பட்டனர்.

ரெலோ தலைவர் சிறீசபாரத்தினத் தின் சகோதரரான 'கந்தா' என்பவரும் தன்னை ரெலோ தலைவர் என்று அழைத்துக் கொள்ளத் தொடங்கினார்.

போதை மருந்து பாவனைக்கு அடிமையாகி, இயக்கத்தை விட்டு ஒதுங்கி இருந்த இளைஞர்களை சேர்த்து வைத்துக்கொண்டு 'கந்தா' இயக்கம் நடத்தினார்.

தமிழக ஜனதா கட்சித் தலைவரான சுப்பிரமணியம்சாமி கந்தாவுக்கு கை கொடுத்தார். ரெலோ என்ற பெயரில் சென்னையில் மாநாடு ஒன்றும் நடத்தினார் கந்தா.

இப்போதும் 'கந்தா' தமிழ் நாட்டில் 'ரெலோ' என்ற பெயரில் இயங்கி வருகிறார்.

"இந்தியப் படையினர் வெளியேறக் கூடாது. தமிழீழத்தை உருவாக்கிக் கொடுத்துவிட்டே திரும்பி வரவேண்டும்" என்று சென்னை மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றியது 'கந்தா'வின் ரெலோ.

## தாக்குதல்கள்

இலங்கை ஜனாதிபதி பிரேமதாசாவிடம் இருந்து விடுக்கப்பட்ட மற்றொரு அறிவிப்பும் இந்தியாவை எரிச்சல் படுத்தியது.

"புலிகளுடன் இந்தியப் படை போர் நிறுத்தம் செய்ய வேண்டும். புலிகளுக்கு எதிரான சகல தாக்குதல்களையும் நிறுத்த வேண்டும்" என்று அறிவித்தார் பிரேமதாசா.

அதே சமயம் இந்தியப் படைக்கு எதிரான புலிகளின் தாக்குதலும் தீவிரமானது. (தொடர்ந்து வரும்)

கும் இடையே சமரசத்தை ஏற்படுத்தவும், இலங்கையில் அமைதியை நிலைநாட்டவுமே இந்தியப் படையை அனுப்பியதாக கூறியது இந்திய அரசு.

இலங்கை அரசும், புலிகளும் தாங்களே நேரடியாக பேசும்போது இந்தியா மகிழ்ச்சிப்பட வேண்டுமல்லவா?

தனது வேலையில் பாதி குறைந்து விட்டது என்று நிம்மதிப் பெருமூச்சுவிட வேண்டுமல்லவா?

ஆனால், இந்தியாவோ அதனை எதிர்த்தது. அப்பேச்சுவார்த்தைக்கு மாறான அபிப்பிராயங்களை கூறியது.

இந்தியாவின் முரண்பட்ட மேற்படி நிலைப்பாட்டை ஏ.பி.வெங்கடேஸ்வரன் சுட்டிக்காட்டியிருந்தார்.

இன்னொரு முரண்பாட்டை நாமும் கவனிக்கக் கூடியதாக இருக்கிறது.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை புலிகள் உட்பட ஏனைய இயக்கங்கள் ஏற்க மறுத்தன.

இலங்கை அரசுகளை ஒருபோதும் நம்பமுடியாது. அரை குறைத் தீர்வுகளை தந்து ஏமாற்றுவதும், வாக்குறுதிகள் வழங்கிவிட்டு காற்றில் பறக்கவிடுவதுமே அவர்களது கொள்கை என்று கூறியே ஏற்க மறுத்தன.

எனினும், பின்னர் புலிகள் தவிர்ந்த ஏனைய இயக்கங்கள் இந்தியாவின் கட்டளைகளுக்கு மறுபேச்சின்றி பணியத் தொடங்கின.

புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்கத் தயங்கினர். சிறீலங்கா அரசை நம்பி ஆயுதங் களை கீழே போட பிரபாகரன் விரும்பவில்லை.

அப்போதெல்லாம் இலங்கை அரசை நம்பலாம் என்று நம்பிக்கை ஏற்படுத்த முனைந்தது இந்திய அரசு.

அதே இந்தியாதான், அரசும்,

என்று கூறியது இந்திய அரசு.

ஆயுதங்களை ஒப்படைக்காதது மட்டுமல்லாமல், இலங்கை அரசிடம் ஆயுதங்களும் பெற்றுக்கொண்டு பேச்சு நடத்தினார்கள் புலிகள்.

## இணைப்புக்கு எதிர்ப்பு

இன்றைய ஆளும் கட்சியான பொதுஜன முன்னணியில் பிரதான கட்சி சிறீலங்கா சுதந்திரக் கட்சி. இன்று அக் கட்சியின் தலைவி சந்திரிக்கா பண்டாரநாயக்கா. 1989ல் தலைவியாக இருந்தவர் சிறிமாவோ பண்டாரநாயக்கா.

அரசு, புலிகள் பேச்சை நேரடியாக எதிர்க்காமல், அதனை மறைமுகமாக சீர் குலைக்கும் வேலைகளைச் செய்தது சிறீலங்கா சுதந்திரக் கட்சி.

பாராளுமன்றத்தில் மாகாணசபைகள் (பின்விளைவுகள்) சட்டமூலம் மீதான விவாதம் நடைபெற்றது. அந்த விவாதத்தில் உரையாற்றிய சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் திட்டவட்டமாக ஒரு கருத்தை தெரிவித்தார்.

"எமது கட்சிக்காரர்கள் எத்தனைபேர் கொல்லப்பட்டாலும் அஞ்சோம். வடக்கு-கிழக்கு நிரந்தரமாக இணைக்கப்படுவதை எதிர்ப்போம்."

இன்றுவரை சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கை அதுதான். அன்று சிறிமாவோ அம்மையார் நேரடியாக பட்டவர்த்தனமாக கூறியிருந்தார்.

இன்று ஜனாதிபதி சந்திரிக்கா நேரடியாகக் கூறாமல் நாசூக்காக அதனை செய்ய முனைகிறார். அதுதான் வித்தியாசம்.

வடக்கு-கிழக்கு இணைப்பு விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் உடன்பாடு இருக்கவில்லை.

எனினும், புலிகளிடம் அதனை எப்படி கூறமுடியும்? இணைப்புக்கு எதிர்ப்பு என்று கூறினால், புலிகளுடனான உறவுக்கு முறிவு வந்துவிடும்.

கொழும்பில் புலிகள் பகிரங்கமாக நடமாடிய நேரத்தில் ஏனைய இயக்க உறுப்பினர்கள் என்று சந்தேகப்பட்ட பலரை பிடித்துக் கொண்டு போனார்கள்.

இவ்விடயம் அரசாங்கத்திற்கு ஏனைய இயக்கங்களால் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அரசாங்கத்தால் புலிகளை கட்டுப்படுத்த முடியவில்லை.

ஏனைய இயக்கங்கள் இந்தியப் படையினருடன் நின்றமையால், அவற்றின் உறுப்பினர்கள் விடயத்தில் இலங்கை அரசும் அக்கறை காட்டவில்லை.

அதனால் கொழும்பிலும் ஏனைய இயக்க உறுப்பினர்கள் பலர் தலைமறைவாகவே நடமாடினர்.

இலங்கை அரசுக்கும், புலிகளுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையை வரவேற்று ஈ.பி.டி.பி. இயக்கத்தினர்

---

வடக்கு, கிழக்கு இணைப்பு:

## எம்மவர் கொல்லப்பட்டாலும் பிரசாரத்தை தொடர்வோம்

### சபையில் சிறிமாவோ அறிவிப்பு

கொழும்பு, மே 29

எம்மவர் கொல்லப்பட்டாலும் அஞ்சாது வடக்கு-கிழக்கு நிரந்தரமாக இணைக்கப்படுவதை எதிர்த்து தீவிரமாகப் பிரசாரம் செய்வோம்:

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இதனை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்:

மாகாண சபைகள் (பின்விளைவுகள்) சட்ட மூலம் மீதான விவாதத்தின்போது திருமதி பண்டாரநாயக்கா மேலும் பேசுகையில், சுதந்திரக் கட்சியினர் போன்று தற்போதைய ஜனாதிபதியும் முன்னாள் ஜனாதிபதியும் இணைப்பை எதிர்த்துத் தீவிரப் பிரசாரம் செய்ய முன்வருவார்கள் என்று நம்புவதா தெரிவித்தார். (ஒ-எ)



---

## துரையப்பாவைப் பற்றி 'இந்தியன் எக்ஸ்பிரஸ்'

**"Srimavo loses main link with Jaffna Tamils — யாழ்ப்பாணத்தமிழர்களுடன் உள்ள பிரதான இணைப்பை சிறிமாவோ இழந்தார்!" — எனும் தலைப்புடன் இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏடு துரையப்பாவின் அகால மரணம் குறித்து செய்திவெளியிட்டுள்ளது.**

**அச்செய்தியில் திரு. துரையப்பாவைப் பற்றி அது பின்வருமாறு எழுதியுள்ளது:-**

**"திருமதி பண்டாரநாயகாவின் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் துடிப்பான உறுப்பினர் திரு. துரையப்பா யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் பிரதமர் சென்றிருந்த போது, பிரதமரை ஆதரித்து கூட்டங்களையும், ஊர்வலங்களையும் நடத்தியவர் அவர்.**

**''திருமதி. பண்டாரநாயகாவின் கட்சியில் சேர்ந்ததன் மூலம் —யாழ்ப்பாணத்தின் பொதுசன அபிப்பிராயத்துக்கு விரோதமாக அவர் செயற்பட்டார். தமிழ் மக்களின் மொழி மற்றும் உரிமைப் போராட்டங்களுக்கு திரு. துரையப்பாவை ஒரு தடைக்கல் என்று கூட சில அரசியற்கட்சிகள் கருதிவந்தன**

**"அரசாங்கத்துக்கும் தமிழ் மக்களுக்குமிடையே உறவை ஏற்படுத்துவதற்கு ஆளும் ஐக்கிய முன்னணி துரையப்பாவை பயன்படுத்திவந்தது''**

**—இவ்வாறு 29-7-75 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஏடு கூறுகிறது.**

அன்றைய யாழ் மாநகர முதல்வர் அல்பிரட் துரையப்பா சுட்டுக் கொல்லப்பட்ட சமயத்தில், இந்தியன் எக்ஸ்பிரஸ் வெளியிட்ட செய்தி இது. இதனை மறுபிரசுரம் செய்தது யார் தெரியுமா? கூட்டணியினரின் சுதந்திரன் பத்திரிகை.

துரையப்பாவுக்கான தண்டனையை மறைமுகமாக நியாயப்படுத்தும் முயற்சியே இதுவாகும். இன்று அதே கூட்டணியினரும், அரசின் நலன் கருதி நடத்தப்படும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட ஒற்றைக்காலில் நிற்கின்றனர்.

துரையப்பாக்கள் ஒழிக்கப்பட்டதை நியாயம் என உரைத்தவர்கள், இன்று துரையப்பாக்களை உருவாக்கத் துடிக்கிறார்கள்.

# இப்படி வேண்டாம்



↙ அ…அ…அ….அச்…..சும்….நூறு…. ஆம்! தும்மல்தான்! இது சாதனைத் தும்மலல்ல. சாதாரணத் தும்மல்தான். நம்மில் யார் தும்மினாலும் இப்படித்தான் சுற்றாடல் காணப்படும். நம் கண்ணுக்கு இந்தக் கொடுமை தெரியாததால்தான், கைக்குட்டையால் மூக்கை பொத்திக் கொள்ளாமல் தும்மித் தொலைப்பதுண்டு.

தும்மல் மிகச் சாதாரணமானதொன்றுதான். தும்மும்போது, நம்மைச்சுற்றியுள்ளவர்களுக்கு- நாம் தும்மும்போது வெளியேற்றப்படும் எச்சில்பட்டு விடாதபடி பாதுகாத்துக் கொள்ள கைக்குட்டையை வாயில் வைத்துக்கொள்ளவேண்டும்.

தும்மும்போது வாயிலிருந்து வெளியேற்றப்படும் எச்சில் துகள்கள் என்ன வேகத்தில் வெளியேறுகின்றன என்பதை அறிந்தால் ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது. இதன் வேகம் மணிக்கு 167 கிலோ மீட்டர். (103.6மைல்)

மிக வேகமாகப் பயணம் செய்யும் மிகச் சிறிய பொருட்களைப் படச்சுருளில் பதிவு செய்யும் 'ஸ்ட்ரோபோஸ்கோப்' என்ற புதியதொரு சாதனத்தின் மூலம் தும்முகின்ற இந்த மனிதரின் வாயிலிருந்து வெளியேறும் சளித்துகள்களை படம்பிடித்துள்ளனர்.

இன்னொரு சுவையான தகவலும் உண்டு. இங்கிலாந்தில் வோர் செஸ்ரை என்ற இடத்தைச் சேர்ந்தவர் டொன்னா கிறிஃபித். இந்தப் பெண்மணி செய்த சாதனையை சொன்னால் நம்பமாட்டீர்கள். 1981 ஜனவரி 13ம் திகதி தும்மத் தொடங்கி 365 நாட்கள் தொடர்ச்சியாக தும்மியிருக்கிறார். 10 இலட்சம் தடவைகள் அவர் தும்மியதாக உலக சாதனைப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# டுமீல் டுமீல் வாழ்க்கை



↑ பட்டயம் எடுத்தவன் பட்டயத்தால் சாவான். இந்தப் பழமொழி மக்களை அடக்க முதன் முதலில் யார் துப்பாக்கியை தூக்குகிறார்களோ அவர்களுக்குத்தான் பொருந்தும்.


படத்தில் இருப்பது பாலஸ்தீனத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம். தங்கள் சொந்த மண்ணில் இருந்து பாலஸ்தீனர்களை வெளியேற்றியவர்கள் இஸ்ரேலியர்கள்.

தங்கள் மண்ணுக்காக போராடும் பாலஸ்தீனர்களை அடக்க இஸ்ரேலியர்கள் ஆயுதத்தை பயன்படுத்தினர். குண்டு வீச்சுக்கள், பீரங்கி முழக்கங்கள், பொருளாதார நெருக்கடிகள், உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு, இத்தனைக்கும் மத்தியில் போராடி வாழ்கின்றனர் பாலஸ்தீன மக்கள்.

படத்தில் இஸ்ரேலிய இராணுவத்தின் வெறியாட்டம் மத்தியில் தப்பி ஓடுகிறாள் ஒரு சிறுமி. இந்தக் கொடுமைகளுக்கு மத்தியில் வாழும் குழந்தைகள் ஆயுதத்தை நாடுவதற்கும், நம்பிக்கை வைப்பதற்கும் யார் காரணம்? எந்தத் தாக்கத்துக்கும் மறுதாக்கம் உண்டு.

# தகவல் பெட்டி

## மரக்குதிரை



↑ பிரபல கிரேக்க நூலாசிரியரான ஹோமர், 'இல்லியட்' என்ற நூலை எழுதினார். கிரேக்கர்கள் ட்ரோய் நகரைக் கைப்பற்றுவதற்காக எடுத்துக் கொண்ட பிரயத்தனங்களை இக் கதை விபரிக்கிறது.

ட்ரோய் நகரை பல நாட்கள் கிரேக்க வீரர்கள் சூழ்ந்து முற்றுகையிட்டிருந்தனர். ஆனால் அந்நகரில் வாழ்ந்த மக்கள் எத்தனை நாட்களானாலும் தாக்குப் பிடிக்கக் கூடிய அளவு தானியங்களையும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களையும் சேகரித்து வைத்திருந்தமையினால் கிரேக்கப் படையினரால் எதுவும் செய்ய முடியாமற் போய்விட்டது.

எனவே கிரேக்கத் தளபதி ஒரு தந்திரத்தைக் கையாண்டான். மிகப் பிரம்மாண்டமான அளவில் மரத்தாலான ஒரு குதிரையைச் செய்து, அதனை ட்ரோய் நகரக் கோட்டையின் வெளிப்புறத்தே விட்டுவிட்டுத் தன் படைகளைத் திருப்பி அழைத்துக் கொண்டு வெகு தூரத்துக்கப்பால் சென்று காத்திருந்தான்.

அடுத்த நாள் பொழுது விடிந்ததும் கிரேக்கப் படைகள் பின் வாங்கிச் சென்றதை ட்ரோய் நகர மக்கள் கண்டு களிப்புற்றனர். கிரேக்கர்கள் அழகான மரக்குதிரையை விட்டுச் சென்றமையினால் அவர்களுடைய மகிழ்ச்சி பன்மடங்காகியது. அக் குதிரையை தமது கோட்டைக்குள் இழுத்துச் சென்றுவிட்டனர். அன்றிரவு நகர மக்களும் போர் வீரர்களும் நிம்மதியாகத் தூங்கினர்.


அதே நேரத்தில் மரக் குதிரையின் வயிற்றுப் பக்கம் பிளந்தது. அதற்குள் ஒளிந்திருந்த கிரேக்க வீரர்கள் ஆயுதங்களுடன் வெளியேறி, நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்த ட்ரோய் நகர போர் வீரர்களைக் கொன்று குவித்தனர். பின்வாங்கிச் சென்ற கிரேக்கவீரர்களும் மீண்டும் வந்து ட்ரோய் நகரத்தைக் கைப்பற்றினார்கள்.

அந்த சரித்திரக் கதையை 1954ல் ஹொலிவூட்டில் படமாக்கினார்கள். 'வூடின் ஹோர்ஸ் ஒஃப் ட்ரோய்' என்ற பெயரில் படம் வெளியானது. படத்திற்காக செய்யப்பட்ட மரக்குதிரைதான் இது.

இதுவரை செய்யப்பட்ட மரக்குதிரைகளில் மிகப் பிரமாண்டமானது இதுதான். உயரம்: 40 அடி. நிளம்: 60 அடி.

இதற்காக 80 தொன் எடை கொண்ட மூன்று மரங்களும், ஆயிரம் இறாத்தல் இரும்பு ஆணியும் பயன்படுத்தப்பட்டது. இதன் வயிற்றுக்குள் 25 போர் வீரர்கள் (நடிகர்கள்) இருக்கக் கூடியதாக செய்யப்பட்டது.

## சாதனை படைத்த இருக்கை



← எந்த வீட்டிலும் இல்லாத 'சோபா' இது. எல்லா வீட்டிலும் இதனை வைக்க இடமும் இருக்காது.


உலகில் இதுவரை தயாரிக்கப்பட்ட இருக்கைகளில் (சோபாக்களில்) மிக மிக மிக நீ.. நீ.. நீளமானது இதுதான். இதன் நீளம் 24 அடி. நல்ல வாட்டசாட்டமான 17 பேர் சௌரியமாக அமரலாம். சிவப்பு வர்ணத் தோலால் செய்யப்பட்டது.

பிரிட்டனைச் சேர்ந்த 'ஆர்ட் ஃபோர்மா' தளபாடத் தயாரிப்பாளர்களால் உருவாக்கப்பட்டது.

ஜெர்மனியில் கொலோன் நகரில் 1995 மே 20ம் திகதி நடைபெற்ற வீட்டுத் தளபாட கண்காட்சியில் பலரையும் கவர்ந்து இழுத்தது. உலக சாதனைச் சோபா.

'ஒண்ணாய் இருக்க கத்துக்கணும்' என்று பாடல் இருக்கிறது இப்படியான சோபா இருந்தால் ஒன்றாய் இருக்க வசதிதான். (தனியான நாற்காலிக்காக அடிபடுபவர்களை மட்டும் இருக்கவைப்பது சிரமம்)

## நேரான பாதை தேவை



← இரண்டே இரண்டு சக்கரங்களை மட்டும் கொண்ட அதி நீளமான சைக்கிளை நியூஸிலாந்தின் பஹிட்டுவாவைச் சேர்ந்த ரெறிதெஸ்மான் என்பவர் உற்பத்தி செய்தார்.

நான்கு பேர் அமர்ந்து செலுத்திய இந்த சைக்கிளின் நீளம் 22.24 மீட்டர். (72 அடி 1 1/2 அங்குலம்) இதன் எடை 340 கிலோ கிராம் (750 இறாத்தல்).

1988 பெப்ரவரி 27ம் திகதி இவ்வண்டி 246 மீட்டர் (807 அடி) வரை ஓட்டப்பட்டது. நேர்பாதையில் இவ்வண்டி ஓட்டப்படலாமேயன்றி இதனை எந்தப் பக்கமும் திருப்ப முடியாது.

குறுக்கு வழி தேடுவோருக்கு உபயோகப்படாத சைக்கிள். நிச்சயமாக அரசியல்வாதிகள் விரும்பமாட்டார்கள்.

திரையுலக மறுபக்கம் 38

# படப்பிடிப்புக்கு வர மறுத்த நடிகர்

# மனமிரங்கிய நடிகை உதவினார்

உயரமான நடிகர்களில் பிரபலமானவர் அவர். படைப்புக் கடவுளின் பெயர் கொண்ட படத்தின் படப்பிடிப்புக்காக வெளியூர் செல்ல வேண்டி இருந்தது.

நடிகருக்கு அப்போது பிரபல கதாநாயகியாக இருந்த 'பா' நடிகை மீது ஒரு கண். அந்த நடிகையின் கண்களில் போதை இருக்கிறது என்று பகிரங்கமாகவே ஜோக் அடித்தும் இருக்கிறார்.

வெளிப்புறப் படப்பிடிப்பின்போது நடிகையை எப்படியாவது அடைந்துவிடுவது என்று கங்கணம் கட்டிக் கொண்டார் நடிகர்.

நடிகர் இப்படித் திட்டம்போடுவதை அறியாமல், குறிப்பிட்ட படத்தின் இயக்குநரும் நடிகையை அடையத் திட்டம் போட்டிருந்தார்.

இவர்கள் இரண்டு பேரும் தன்னை நினைத்து திட்டம் போடுவது தெரியாத நடிகை, குறிப்பிட்ட ஊரில் இருந்த பிரமுகர் ஒருவரது பங்களாவில் தங்க சம்மதித்துவிட்டார்.

அந்த நடிகையை தனது பங்களாவில் தங்கவைக்க பிரமுகரும் தடபுடலான ஏற்பாடுகளை செய்து வைத்திருந்தார்.

படப்பிடிப்பில் கலந்து கொண்டுவிட்டு, நேராக பங்களாவுக்கு சென்று தங்கிக் கொள்வதுதான் நடிகையின் திட்டம். குறிப்பிட்ட பிரமுகர் பெரும் செல்வந்தர். நடிகைகளை உபசரிக்க என்றே தனியான பங்களா வைத்திருக்கிறார்.

அவரது உபசரிப்புக்கு பதிலாக உபசரணை செய்துவிட்டுத்தான் நடிகைகள் திரும்புவர்.

## நடிகரின் கட்டளை

படப்பிடிப்பு ஆரம்பமானது. அன்றிரவு ஹோட்டலில் தனது அறைக்கு அருகில் நடிகைக்கும் அறை ஒதுக்குமாறு தயாரிப்பு நிர்வாகியிடம் கூறினார் நடிகர்.

அவ்வாறு கூறினால் அதற்கு தனியான அர்த்தம் இருக்கிறது. தயாரிப்பு நிர்வாகிக்கோ தர்ம சங்கடம். ஏற்கனவே இயக்குநரும் அதேவிதமான கோரிக்கையை விடுத்திருந்தார்.

நடிகரின் மனம் கோணினால் படப்பிடிப்பு பாதிக்கப்படும். ஒத்துழைப்பு சரியாக இருக்காது. மெல்ல விஷயத்தை இயக்குநரின் காதில் போட்டார் தயாரிப்பு நிர்வாகி.

இயக்குநர் விட்டுக் கொடுக்க சம்மதித்தார். அவரது மனம் கவர்ந்த பூ நடிகையும் படப்பிடிப்புக்கு வந்திருந்தார். அதனால்தான் 'பா' நடிகையை இழப்பது பற்றி 'சுவாச' இயக்குநர் கவலைப்படவில்லை.

இளைய திலக நடிகருடன் நெருக்கமாக இருந்த 'பூ' நடிகை, அந்த 'சுவாச' இயக்குநருக்கும் வேண்டப்பட்டவராகவே இருந்து வந்தார் என்பது தனிக்கதை.

## நடிகை மறுப்பு

இயக்குநர் விட்டுக் கொடுத்துவிட்டதால் தயாரிப்பு நிர்வாகிக்கு நிம்மதி. படப்பிடிப்பு முடிந்ததும் குண்டைத் தூக்கிப் போட்டார் நடிகை. தன்னால் ஹோட்டலில் தங்க முடியாது என்று அடம்பிடித்தார். சென்றுவிட்டார்.

நடிகர் 'மூட் அவுட்'டானார். மறுநாள் படப்பிடிப்புக்கு நடிகர் வரவில்லை. உடம்பு சரியில்லை என்று ஹோட்டல் அறையில் படுத்திருந்தார்.

தயாரிப்பு நிர்வாகிக்கு சமாச்சாரம் புரிந்துவிட்டது. படப்பிடிப்புக்கு வந்து சேர்ந்த 'பா' நடிகையின் காலைப் பிடிக்காத குறையாக கெஞ்சினார். நடிகை மனமிரங்கி நடிகரின் அறைக்கு நேரில் சென்றார்.

அன்று பகல் முழுவதும் நடிகரின் அறையிலேயே நடிகை இருந்தார். படப்பிடிப்பு அன்று இரத்தானது. ஆனால் மறுநாள் முதல் உற்சாகமாக ஒத்துழைத்தார் நடிகர். நடிகையும் நடிகருடன் ராசியானார். பின்னர் தனது சொந்தப் படத்தில் குறைந்த ஊதியத்துடன் நடிகரை நடிக்கவும் வைத்தார் நடிகை.

## ரம்பா புகார்

தென்னாபிரிக்காவில் வைத்து தன்னை துப்பாக்கி காட்டி மிரட்டினார் என்று ரம்பா புகார் கொடுத்திருக்கிறார். இயக்குநர் சி.சுந்தர்தான் குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கத்தில் ரம்பா புகார் செய்தும், கவனிக்கப்படவில்லையாம்.

சுந்தருடன் சுந்தரமாக இருந்தவர் ரம்பா என்பதால், ஊடலும் கூடலும் சகஜம் என்று நினைத்துவிட்டனர்.

ஆனால், ரம்பா சுந்தரை லேசில்விட தயாரில்லை.

அப்படி என்னதான் கோபம் இருந்தாலும் பழகிய நாட்களை மறக்கலாமா?

# காதோடு சொல்லுகிறோம்

பட்டாபிஷேகமான பெயர் கொண்ட சுவமான நடிகை அவர். 'ஆசை'யான பட நாயகி. 'கா' நடிகருடன் ஜோடி சேர்ந்து நடித்தபோது, நடிகர் தன் கைவரிசையை காட்டிவிட்டார். பொள்ளாச்சியில் படப்பிடிப்பு நடந்தபோது, புதிய கார் ஒன்றை





"மலர் எது?—என் கண்கள் தானென்று சொல்லேனடி!
கனி எது?—என் கன்னம் தானென்று சொல்லேனடி!
காலத்தில் வசந்தமடி—நான்
கோலத்தில் குமரியடி!"
(கவியரசு கண்ணதாசன்)

## 'செஸ்' விளையாட்டு

தொப்புளில் பம்பரம் விட்டதில் ஆரம்பித்த தொப்புள் விளையாட்டு தொடர்கிறது.

இந்திப் படம் ஒன்றில் தபுவின் தொப்புளில் கதாநாயகன் செஸ் விளையாடுவதுபோல காட்சி வைத்திருக்கிறார்கள்.

இந்தப் படத்தின் தயாரிப்பாளர் தபுவின் காதலராம். தொப்புள் காட்சியில் நடிக்க தபு தயங்கியபோது, காதலன் பச்சைக் கொடி காட்டினாராம்.

'காதலைத் திருடாதே' என்ற மொழிமாற்றுப் படத்தில் நடிகை ரீதுசிங்கின் தொப்புளில் மதுவை ஊற்றுகிறார் கதாநாயகன் சுரேன்.

தொப்புளுக்கு எப்போது தான் ஓய்வு கொடுக்கப் போகிறார்கள் சினிமாக்காரர்கள்?

## மினி சினி

* விக்ரமன் இயக்கும் 'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்' படத்தில் நாயகனாக நடிக்கும் கார்த்திக்கிற்கு ஜோடியாக நடிக்க ரோஜாவை அணுகி உள்ளாராம் படத்தின் இயக்குநர் விக்ரமன்.

* பாரதிராஜா, பாலுமகேந்திரா ஆகியோரிடம் பயிற்சி பெற்றுள்ள கவிஞர் அறிவுமதி, 'உன்னோன் ஐயா' என்ற படத்தை முதன் முறையாக இயக்கவுள்ளார். ஏற்கனவே இவர் 'சிறைச்சாலை', 'ஹிட்லர்' ஆகிய படங்களுக்கு வசனம் எழுதியவர்.

* தமிழில் படவாய்ப்புக்கள் எதுவுமின்றி இருக்கும் விவிதா, 'மாயாஜாலம்' என்ற மலையாளப் படத்தில் கதாநாயகியாக நடித்துவருகிறார். பாலுகிரியத் என்னும் மலையாள இயக்குநர் இயக்கும் இப்படத்தில் முகேஷ் ஹீரோவாக நடிக்கிறார்.

* பாரதிராஜாவின் 'புதுமைப் பெண்' படத்தின் மூலம் அறிமுகமாகி, தெலுங்கில் பிரபலமாக இருக்கும் டாக்டர் ராஜசேகர், விரைவில் நேரடித் தமிழ்ப்படமொன்றில் நடிக்கவுள்ளார். இப்படத்தை சூப்பர் குட் ஃபிலிம்ஸ் நிறுவனம் தயாரிக்கவுள்ளது.

* ராஜ்கபூர் இயக்கத்தில் 'கல்யாண கலாட்டா' என்ற படத்தில் நடித்து வரும் சத்யராஜ், அடுத்து 'பெண் ஒன்று கண்டேன்' என்ற படத்தில் நடிக்கவுள்ளார். 'பகைவன்' படத்திற்கு வசனம் எழுதிய பூபதி பாண்டியன் இப்படத்தை இயக்குகிறார்.

* 'கல்கி' படத்தில் அறிமுகமான சுருதி தற்போது 'ஓராள் மாத்ரம்' என்ற மலையாளப் படத்தில் கதாநாயகியாக நடிக்கிறார். மம்முட்டி கதாநாயகனாக நடிக்கும் இப்படத்தை சத்யன் அந்திக்காடு இயக்குகிறார்.

* தமிழ்-தெலுங்குப் படங்களில் பிஸியாக நடித்து வரும் ரோஜா ஆந்திராவில் 'சூப்பர் ஹீரோ' என்னும் ஒரு சினிமா பத்திரிகையை நடத்தி வருகிறார்.

* அருண்பாண்டியன் கதாநாயகனாக நடிக்கும் புதிய தமிழ்ப்படமொன்றிற்கு 'ஜெயம்' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

* தொடர் தோல்விகளால் துவண்டு போயிருந்த ஜூஹி சாவ்லா தற்போது மகிழ்ச்சியுடன் காணப்படுகிறார். காரணம் இவரது சமீபத்திய படங்களான 'யெஸ்பாஸ்', 'இஷ்க்', 'தீவானா மஸ்தானா', 'மிஸ்டர் அண்ட் மிஸஸ் கிலாடி' ஆகிய படங்களின் பெருவெற்றிதான்.

* சீமான் இயக்கத்தில் பிரபு கதாநாயகனாக நடிக்கும் 'இனியவளே' படத்தில் மயில்வாகனன், தாமரை என இரண்டு கவிஞர்கள் அறிமுகமாகிறார்கள். இவர்களில் தாமரை என்பவர் பெண் கவிஞர்.

## சிம்ரான் சூடவா

'பூச்சூடவா' தமிழ்நாட்டில் திரைக்கு வந்துவிட்டது. அப்பாஸ்-சிம்ரான் ஜோடியின் உண்மையான நெருக்கம் காதல் காட்சிகளுக்கு உதவி இருக்கிறது.

'புதிய மொந்தையில் பழைய கள்' என்பதுதான் பொருத்தம். காதலுக்கு வில்லன் கதாநாயகியின் தந்தை. அவரை எதிர்த்து நின்று கடைசியில் காதலர்கள் ஜெயிப்பதுதான் கதை.

இயக்கம் உதயசங்கர். பழைய பாணிக் கதையை, வித்தியாச இரசனையுடன் இயக்கி, இளம் உள்ளங்களை ஓரளவு கொள்ளை அடித்திருக்கிறார் இயக்குநர். இசை, சிற்பி. சிம்ரான் எவ்வித தயக்கமும் இல்லாமல் கவர்ச்சி விருந்து படைத்திருக்கிறார். அடிக்கடி சிம்ரானை சூடுகிறார் அப்பாஸ்.

| முகப்பில் | |
|---|---|
| மந்த்ரா | பார்த்திபன் |



## பத்து நாட்களில்

இளைஞர்களுடன் போட்டி போட வேண்டிய கட்டாயம் இளையராஜாவுக்கு. போட்டிக்கு சளைத்தவரல்ல ராஜா.

'கிழக்கும் மேற்கும்' படத்தை இயக்குபவர் மு.களஞ்சியம். அவர் சொன்ன கதையைக் கேட்டு நெகிழ்ந்துபோனார் இளையராஜா. படத்தில் எட்டுப் பாடல்கள். சுறுசுறுப்பாக இசையமைத்து பத்து நாட்களில் பாடல்களை முடித்துக் கொடுத்துவிட்டாராம்.

'கண்களின் வார்த்தைகள்' என்ற படமும் இளையராஜாவை கவர்ந்து விட்டதாம். இப்படத்தின் பின்னணி இசைக்கு பணம் எதுவும் வாங்காமல் இசையமைத்துக் கொடுத்திருக்கிறார்.

## காற்று—மரம்

"நீ-காற்று நான் மரம்- நீ
என்ன சொன்னாலும்
நான் தலையாட்டுவேன்"

என்று தொடங்கும் பாடலை, 'நிலாவே வா' படத்துக்காக எழுதியிருக்கிறார் வைரமுத்து.

விஜய் நாயகனாக நடிக்க சுவலட்சுமி, ரச்சனா ஆகியோர் ஜோடிகளாக நடிக்கும் படம் இது. இரண்டுபேரில் நிலா யார்?

## ரஜினி நாட்டாமை

இந்தி நாட்டாமை (புல்வந்தி) படத்தில் சிரத்தையுடன் நடித்து முடித்திருக்கிறார் ரஜினி. தனது இயற்கையான தாடியுடன் காதில் கடுக்கன் அணிந்து கம்பீரமாக நடித்திருக்கிறார்.

அதே கெட்டப்பில் ரஜினியை தங்கள் படங்களில் நடிக்க வைக்க இந்தி பட இயக்குநர்கள் சிலர் நாடினார்களாம். ரஜினி நாட்டம் காட்டவில்லை.

## சங்கீதா அப்பாவி

...ஓட்டம் விட்டுப்பார்க்கச் சென்றார் நடிகர். 'புதுக்கார் நீங்களும் வாங்கலேன்' என்று நாயகியை ...த்தாராம். நாயகியும் காரில் ஏறிப்போனார். சிறிது நேரமாக காரைக் காணோம். காருக்கு உரியவர் ... காரில் தேடிப்போனார். ஒரு வழியாக காரைக் கண்டுபிடித்தார். காரின் கண்ணாடிக் கதவுகள் ...டிருந்தன. கண்ணாடிமீது கண்வைத்துப் பார்த்தார் உரிமையாளர். காணக்கூடாததை கண்டுவிட்டார். ...ங்கி பின்னர் சுதாகரித்து காரின் கதவைத் தட்டினாராம். நடிகரும் ...வும் சிரமப்பட்டு வெளியே வந்தனராம். புதுக்காரில் இப்படி ...விட்டீர்களே என்று சங்கடப்பட்டாராம் கார் உரிமையாளர்.

...பர் ஸ்டாரை வைத்து முத்தான படம் எடுத்த இயக்குநர் அவர். ...களை படப்பிடிப்பில் கெட்ட வார்த்தைகளால் திட்டுவதில் அலாதிப் ...ம். ஆனாலும் உதவும் விஷயத்திலும் அவர் தாராளம் என்பதால் ...கள் முகம் சுளிப்பதில்லையாம்.

...லையாளத்தில் பூ நடிகை படு தாராளமாக நடித்த படம் தமிழில் ...ற்றப்பட உள்ளதாம். இதனை அறிந்த நடிகை அப்பட ...நரிடம் சென்றாராம். "உங்களைப்போன்ற இயக்குநரை திருமணம் ...போகிறேன். அதனால் தமிழில் மொழி மாற்றவேண்டாம்" ... அன்பு வேண்டுகோளும் சில இலட்சங்களும் கொடுத்தாராம்.

...செல்வமான நடிகைக்கு கறுப்பான களையான ...ழுந்து நடிகர்மீது பிரியமாம். 'மு'வில் பெயர் ஆரம்பிக்கும் ... நடிகருடன் அடிக்கடி காணப்படுகிறாராம். தற்போதுதான் ... அந்த நடிகருக்கு மார்க்கெட் சூடுபிடித்திருக்கிறது. ...த்துக் கொள்ளாமல் இருந்தால் சரிதான்.

...பர் ஸ்டாரின் அடுத்த படத்திலும் நடிக்க சந்தர்ப்பம் ...க்கும் என்று நம்பியிருந்தார் 'ரம்ப' நடிகை. அந்த ...யை பூ நடிகையும், அவரது காதலரும் கெடுத்து ...னராம். நடிகை புலம்பிக்கொண்டிருக்கிறார்.

## ...ல்யாண கலாட்டா

### ...த்யராஜ்-குஷ்பு-மந்த்ரா

...சிவாஜி நடித்த படம் 'கலாட்டா கல்யாணம்'. அந்தப் ...ரை அப்படியே முன்னே பின்னே மாற்றி 'கல்யாண ...ட்டா' என்று பெயரிட்டுள்ளனர்.

...த்யராஜ் கதாநாயகன். அவருக்கு இரண்டு பெருத்த ...கள். ஒருத்தர் குஷ்பு. இன்னொருத்தர் மந்த்ரா. ...குமார் நடித்த 'ஜானகிராமன்' படத்தை தயாரித்த ...னம் தயாரிக்கும் படம் இது.

...க்கும், ராஜ்கபூர். இசை: யுவன் சங்கர் ராஜா. ...கள்: பழனிபாரதி.

...த்தம் போடாமல் படப்பிடிப்பை ஆரம்பித்து 45 ... படப்பிடிப்பும் நடத்திவிட்டனர்.

...ணிவண்ணன், ஆனந்தராஜ், எஸ்.வி.சேகர், ...ந்தர்ராஜன், குமரிமுத்து உட்பட பலர் நடிக்கின்...

...றுபட்ட கதாநாயகனாக தோன்றுகிறார் சத்யராஜ். ... சத்யராஜுடன் ஜோடி சேரும் முதல் படம் இதுதான்.

## விக்ரமன் இயக்கத்தில் கார்த்திக்

'புது வசந்தம்', 'பூவே உனக்காக', 'சூர்ய வம்சம்' ஆகிய வெற்றிப் படங்களை நெத்தியடியாக தந்த இயக்குநர் விக்ரமன்.

அடுத்து நீண்ட பெயருள்ள படம் ஒன்றை இயக்கப்போகிறார். படத்திற்கு சூட்டப்பட்டுள்ள பெயர்: 'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்'. பிரபலமான பழைய பாடலின் தொடக்க வரியை படப் பெயராக்கிவிட்டனர்.

கதாநாயகனாக கார்த்திக் நடிக்கிறார். கதாநாயகி தேர்வு நடைபெற்று வருகிறது.

நாகேஷ், சார்லி, ஜெய்கணேஷ் உட்பட பலர் நடிக்கவுள்ளனர். இசை: எஸ்.ஏ. ராஜ்குமார்.

## நீலக்கண் சீதை

தமிழ்ப் படங்களில் சிவரஞ்சனி யாகவும் பின்னர் தெலுங்கில் ஊஹா என்ற பெயரிலும் நடித்தவர் சிவரஞ்சனி. தெலுங்கு நடிகர் ஸ்ரீகாந்த்தை மணந்துகொண்டு, சினிமாவுக்கு முழுக்கு போட்டவர்.

சிவரஞ்சனி சொந்தமாகத் தயாரிக்கப்போகும் படத்திற்கு 'அவள் ஒரு சீதை' எனப் பெயர் சூட்டியுள்ளனர்.

இப்படத்தில் மீண்டும் தோன்றுகிறார் நீலக்கண் அழகி சிவரஞ்சனி. பிரகாஷ்ராஜ், அனுஜா உட்பட பலர் நடிக்கின்றனர். தெலுங்கில் தயாரித்து தமிழில் மொழிமாற்றப்படும்.

## சுவாதி விசாரணை

அஜித்குமாருடன் முதன் முதலில் ஜோடிக் கொண்டவர் சுவாதி. பின்னர் ஹீராவின் வருகை, அஜித்குமாரின் மனதை மாற்றியது. சுவாதிக்கு டாட்டா காட்டினார் அஜித்.

மனம் உடைந்த சுவாதி சினிமாவை விட்டு விலக நினைத்ததும், தற்கொலைக்கு முயன்றதும் பழைய கதை.

அதன்பின்னர் விக்னேஷ்-சுவாதி ஜோடி நெருக்கமானது. இப்போது அதிலும் சிறு விரிசல்.

அஜித்குமாரை சுத்தமாக மறந்திருந்த சுவாதி சமீபகாலமாக அஜித்குமார் பற்றி அக்கறையாக விசாரிக்கத் தொடங்கியிருக்கிறாராம்.

'சுந்தர பாண்டியன்' படத்தில் கார்த்திக் ஜோடியாக சுவாதி நடிக்கிறார். அப்படத்தில் ஹீராவும் நடிக்கிறார். ஹீராவிடம் முகம் கொடுத்தே பேசவில்லை சுவாதி. கோபம் இருக்காதா பின்னே?!

## ரஜினி வரமாட்டார்

### சரத்தும் மௌனம்

தமிழ்நாட்டில் சென்ற முறை தேர்தலில் ரஜினிக்கு அடுத்தபடியாக தீவிரம் காட்டியது சரத்குமார். பிரசாரத்தில் தூள் கிளப்பினார்.


இந்தத் தடவை சரத்குமார் தரப்பும் மௌனம் சாதிக்கிறது. ரஜினி பிரசாரம் செய்ய முன்வரவில்லை. அதனால் தானும் ஒதுங்கி இருக்கலாமா என்று யோசித்து வருகிறார் சரத்.

ரஜினியை சீண்டும் விதமாக ஜெயலலிதா பேசியும் கூட ரஜினி பெரிதாக எடுக்கவில்லை.

இந்த தடவை ரஜினியே வந்தாலும் தி.மு.க ஜெயிக்காது என்று ஜெயலலிதா கூறியிருந்தார். அதற்கு பதிலடியாக ரஜினியை தூண்டிவிட ஒடுப்பட்டுத் திரிகிறது தி.மு.க வட்டாரம்.

ரஜினி தேர்தல் பிரசாரத்தில் இறங்கினால், பல நட்சத்திரங்கள் பிரசாரம் செய்ய வருவார்கள் என்பது கலைஞர் கருணாநிதியின் எதிர்பார்ப்பு.

சென்ற முறை தேர்தலில் பிரசாரம் செய்தும் தனக்கு உரிய கௌரவம் தி.மு.க.ஆட்சியில் கிடைக்கவில்லை என்பதும் சரத்குமாரின் வருத்தமாம்.



ரஜினி
படம்: ...



## பிரபுதேவா-மனிஷா

'சொர்ணமுகி' படம் பொங்கலுக்கு வந்திருக்கிறது. பிரகாஷ்ராஜ், தேவயானி நடித்துள்ளனர். இப்படத்தை அடுத்து கே.எஸ்.அதியமான் இயக்கும் படத்திற்கு 'பிருந்தாவனமும் நந்தகுமாரனும்' என்று பெயர் சூட்டி உள்ளனர்.

பிரபுதேவாவும் மனிஷா கொய்ராலாவும் ஜோடி சேருகின்றனர். தாடியுடனும், தாடியில்லாமலும் இரண்டு விதமான கெட் அப்பில் நடிக்கிறார் பிரபு தேவா.

இசை, யுவன் சங்கர் ராஜா. மணிவண்ணன், கிரீஷ்கர்னாட், நெடுமுடி வேணு உட்பட பலர் நடிக்கின்றனர்.

## முழிக்கிறார் நடிகர்

பாண்டியராஜன் ரசிகாவுக்காக ...க்கு தெரிய வந்துவிட்டது. படப்பிடிப்பு சிபாரிசு செய்வது, அவரது சம்சாரத் ... தடைபெறும் இடங்களில் கண ...வரை கண்காணிக்க, கணவரின் உதவியாளரையே நியமித்திருக்கிறார் ...சம்சாரம். இந்த சமாச்சாரம் தெரியாமல் மாட்டிக் கொண்டு முழிக்கிறார் பாண்டியராஜன். ...கவன் போகும் வழியை எப்படியோ அறிந்துகொண்டு, உதவியாளரை வேலையைவிட்டு நீக்கி விட்டாராம் பாண்டிய ராஜன்.



வெங்கடேஷ்-ரம்யா கிருஷ்ணன்
படம்: நக்கீரன்

## புத்தாண்டுக் கொண்டாட்டம்

புத்தாண்டு பிறப்பதற்கு முன்னரே ஒன்று கூடுவோம். புத்தாண்டை வரவேற்போம் என்று அழைப்பு விடுத்தாராம் பிரபல நடிகர்.

தமிழ்ப்பட உலக முன்னணி நடிகர், நடிகைகள் சென்னையில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலில் கூடினார்கள்.

பன்னிரண்டு மணி அடித்ததும் விளக்குகள் அணைக்கப்பட்டன. 12.01க்கு மறுபடி ஒளி வந்ததும் அனைவரும் 'ஹேப்பி நியு இயர்' கூறி உற்சாக பானத்தை உடைத்தனராம்.

எங்கும் ஒரே குதூகலம். ஆண், பெண் பேதமின்றி உற்சாகமான மயக்கத்தில் ஒரே கொண்டாட்டமாம். விருந்துகள் அனைத்துக்கும் பிரபல நடிகரே செலவு செய்து மகிழ்ந்தாராம்.



பானுப்பிரியா
படம்: ஆஹா

## உஷார் அஜித்

'வாலி' படத்தில் முதன் முதலாக இரட்டை வேடத்தில் நடிக்கிறார் அஜித்குமார்.

இதுவரை இரட்டை வேடப்படங்கள் ஏராளமாக தமிழில் வந்துவிட்டன. 'வாலி' படத்தில்தான் முதல் தடவையாக கம்ப்யூட்டர் பாவித்து இரட்டைவேட காட்சிகள் எடுத்துள்ளனராம்.

முன்புபோல அதிகம் பேசாத, தன் தனிமைகள் பற்றி அலட்டிக் கொள்ளாத, கர்வம் இல்லாத புது அஜித்குமார். "நான் இந்த உலகத்தை புரிந்து கொண்டுவிட்டேன். இனிமேல் ஜாக்கிரதையாகத்தான் வாழ்திருப்பேன்" என்கிறார்.

"சங்கீதா ஒரு அப்பாவிப் பெண். கள்ளம் கபடம் இல்லாமல் என்னுடன் பழகியதுதான் வம்பாகிப் போச்சு. எனக்கும் அவருக்கும் முடிச்சுப்போட்டுவிட்டார்கள்" என்று வருத்தப்பட்டிருக்கிறார் பார்த்திபன்.

...கீதாவுடன் ஒட்டும் இல்லை; உறவும் இல்லை என்று பார்த்திபன் முன்னரும் அறிக்கை விட்டிருந்தார். ...வின் பின்னரும் ஒட்டுறவு தொடர்வதாக கிசுகிசுக்கள் உலாவுகின்றன. ...கீதாவை தற்காலிகமாக ஒதுக்கிவைத்துவிட்டு, ரவளியுடன் ராசியாகி இருந்தார் பார்த்திபன். ...ந்தும் சங்கீதாவை மறக்க முடியாமல் தவித்தார் என்று தமிழக சஞ்சிகை ஒன்று செய்தி ...ட்டது. அதுதான் மறுபடி மறுபடி மறுப்பு விடுகிறார்.

## காய்-காய்- பாகற்காய்

**கா**ய்கறி வகைகளில் பாகற்காய் மருத்துவ குணம் மிகுதியாக உள்ள காயாகும். இது உடம்புச் சூட்டை அதிகமாக்கும். உணவுப் பையிலுள்ள பூச்சியைக் கொல்லும். பசியைத் தூண்டும். பித்தத்தைத் தணிக்கும். மலத்தை இளக்கும் தன்மை கொண்டது. குழந்தை பெற்ற பெண்கள் பாகற்காய் சாப்பிட்டால் தாய்ப்பால் நன்கு சுரக்கும்.

பாகற்காய் கசப்புத் தன்மையாக இருந்தாலும், பருப்பு, தேங்காய் முதலியவைகளைச் சேர்த்துச் சமைத்தால் உண்பதற்குச் சுவையாக இருக்கும்.

பாகற்காயை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொண்டால் இருமல், இளைப்பு, மூலம், வயிற்றுப்புழு போன்ற பிச்சனைகளுக்கு நிவாரணம் கிடைக்கும்.

குறிப்பாக நீரிழிவு வியாதி உள்ளவர்கள் பாகற்காயை எந்த வகையாகவும் உணவில் சேர்த்துக் கொண்டால் நிவாரணம் கிடைக்கும்.

பாகற்காயின் கசப்பு விஷம் அல்ல. அது அமுதத்திற்கு ஒப்பானது. இதிலுள்ள சத்தை நம் உடல், தனக்குத் தேவையான அளவுக்கு உறிஞ்சிக் கொண்டு மிகுதியைக் கழிவுப் பொருளாக வெளியேற்றி விடும்.

இது எளிதில் ஜீரணமாகாது என்றாலும், நிதானமாகச் செயற்பட்டு நோய்களை விரட்டும் குணம் இதற்கு உண்டு.

கபம், பித்தம், மந்தம், காமாலை, மற்றும் ஆரம்பநிலை குஷ்டத்தினால் பாதிக்கப்பட்ட



வர்கள், பாகற்காயை உணவில் சேர்த்துக் கொண்டால் எளிதில் நோய்கள் குணமாகும்.

பாகற்காய் மட்டுமல்ல இதனுடைய இலை, வேர்கூட மருத்துவக்குணம் கொண்டது.

மொத்தத்தில் பாகற்காய் உடல் ஆரோக்கியத்திற்கு சிறந்த சஞ்சீவி தன்மையுடைய உணவுப் பொருளாகும். சங்கு சுட்டாலும் வெண்மை பெறும். அதுபோல் பாகற்காய் கசந்தாலும் நன்மை தரும்.

பாகற்காயைத் துண்டு துண்டாக நறுக்கி மசாலா பொருட்கள் சேர்த்து எண்ணெயில் பொரித்துச் சாப்பிட்டால் நல்ல சுவையாக இருக்கும்.

## மனதிலே பதற்றமா?

**பெ**ண்களே உங்களுக்கு டென்ஷன் இருக்கிறதா?

டென்ஷன் இருந்தால் அதை வளர விடாதீர்கள். வளர்ந்தால் உங்க்ள் மன நிலையை அது பாதிக்க வைக்கும்.

முதலில் உங்களை டென்ஷன் பாடாய் படுத்துகிறதா? என்பதை கண்டுபிடியுங்கள்.



இதோ, டென்ஷனுக்கான அறிகுறிகள்;

- உங்கள் தன்னம்பிக்கை குறைந்து போனதாக தோன்றுகிறதா?
- குற்ற உணர்வுடன் தடுமாறுகிறீர்களா?
- எதிர்காலத்தைப் பற்றி அதிகமாக பயப் படுகிறீர்களா?
- எதிலும் கவனம் இன்மையும், நினைவு இல்லாமையும் தோன்றுகிறதா?
- பார்த்து கொண்டிருக்கும் வேலையை முடிக்கும் முன்பே ஒதுக்கி வைத்து விடுகிறீர்களா?
- திடீரென்று கோபம் கொண்டு, தாம் தூம் என குதிக்கிறீர்களா?
- நீங்கள் தனிமைப்படுத்தப்பட்டதாக உணர்கிறீர்களா?
- எப்போதும் தலைக்கு மேல் வேலை என்று அலட்டிக் கொண்டிருக்கிறீர்களா?
- எதிலும் தீர்மானம் எடுக்க முடியாமல் தடுமாறிக்கொண்டே இருக்கிறீர்களா?
- நேரம் கிடைக்கும்போதெல்லாம் அழும் சுபாவம் இருக்கிறதா? அல்லது வெளிப் படையாக அழுதால் மற்றவர்கள் குறை சொல்வார்கள் என பயந்து போய், தனிமையிலும் மனதுக்குள்ளேயும் அழுது கொண்டே இருக்கிறீர்களா?
- இனம் புரியாத பயம் உங்களை வாட்டு கிறதா?
- பசி எடுக்காது.
- ருசி இருக்காது.
- சாப்பாட்டை பார்த்தாலே எரிச்சல் வரும்.

## முரசு-அருள் ஜுவலர்ஸ் தங்கமாலை பரிசுப் போட்டி அதிஷ்டசாலிகள் இவர்கள்

முரசு, அருள் ஜுவலர்ஸ் இணைந்து வழங்கிய தங்கமாலை பரிசுப்போட்டியில் முதல் பரிசான தங்கமாலை யாருக்கு என்று அறிய ஆவலாக இருப்பீர்கள். அந்த சூப்பர் அதிஷ்டசாலி இவர்தான்:

**எஸ். சசிகலா**
கரீம் கார்டன், நுவரெலியா வீதி,
ஹாலி-எல.

**ஆறுதல் பரிசுபெறும் மேலும் ஐந்து அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்:**

11. ஏ.ஜி. உம்முசுலைகா,
122/16, சமகி மாவத்தை,
அநுராதபுர வீதி, புத்தளம்.
12. ஏ. யோகேஸ்வரி,
122/2, ஜிந்துப்பிட்டி வீதி,
கொழும்பு-13.
13. செல்வி. எஸ். இந்துமதி,
3661 Eglington, Av. East,
1209 Scarborough,
M-13 2 G7,
Ontario, canada.
14. ஜஸ்ர சித்தீக்,
72, மிவாதுர, பெனிதெனி,
பேராதெனிய.
15. செல்வி வே. நிஷாந்தி,
பிரதான வீதி,
பெரிய கல்லாறு,
கல்லாறு-1

ஆறுதல் பரிசு பெறும் ஏனையோரது பெயர் விபரங்களும் அடுத்த வாரம் வெளியாகும்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** DA

பெயர்:.........................
முகவரி:.........................
.........................
தொழில்:.........................
கையொப்பம்:.........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிர சுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 24-01-1998**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

# கண்ணீரில் கரைந்த இரவுகள் 18

**ட**யானா பிரசவ வலியால் துடிதுடித்தார். மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்.

உடனடியாக சாள்ஸ்சுக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

போலோ விளையாட்டில் ஈடுபட்டிருந்த சாள்ஸ் நிதானமாக வந்து சேர்ந்தபோது, குழந்தை பிறந்திருந்தது.

சிசேரியன் அறுவை சிகிச்சை மூலம்தான் குழந்தை பிறந்தது.

குழந்தையைப் பார்க்க வந்தார் இளவரசர் சாள்ஸ். பார்த்ததும் சற்று ஏமாற்றம்தான்.

குழந்தை டயானாவின் சாயலில் இருந்தது. தலைமுடிகூட டயானா போன்றே பழுப்பு நிறத்தில் இருந்தது.

எனினும் முதற் குழந்தை என்பதால் படிப்படியாக குழந்தை வில்லிம்ஸ்மீது பாசத்தை வளர்த்துக் கொண்டார் சாள்ஸ்.

குழந்தை பிறந்தபின்னர் டயானா தன் பிடிவாதக் குணத்தை குறைத்துக் கொள்ள தீர்மானித்தார்.

வில்லிம்ஸின் நலனுக்காக சாள்ஸ்சை முடியுமானவரை அனுசரித்து நடக்க முடிவு செய்தார்.

டன், விசைகொடுத்து இயங்கும் பொம்மைகளாகவே அரண்மனையில் இருந்தவர்கள் டயானாவுக்கு காட்சியளித்தனர்.

"குழப்பமான சூழ்நிலையே என்னை ஆட்டிப் படைத்தது. எதற்கும் நான் முகத்தைக் கோணி சிணுங்கியவள் அல்ல. இருப்பினும் என்னுள் ஒருவித அச்சம் குடிகொண்டது.

சில சந்தர்ப்பங்களில் நான் எதுவித அந்தஸ்தும் இல்லாதவளாகக் காணப்பட்டேன். திடீரென்று நான் இளவரசி என்ற கணிப்பும் இருந்தது.

எனது கணவரின் அலுவலகச் சூழலும் எனக்கு குழப்பத்தையே தந்தது.

சில சந்தர்ப்பங்களின் இன்முகத்துடன் பழகுவார்கள். இன்னொரு சந்தர்ப்பத்தில் அவர்களே அந்நியர்கள் போல நடந்து கொண்டனர்.

பெரும்பாலும் எனது நேரத்தை திருமண வாழ்த்துக்களும், பரிசுப் பொருட்களும் அனுப்பியவர்களுக்கு நன்றிக் கடிதம் எழுதுவதில் செலவிட்டேன்."

அப்படித்தான் அந்த சலிப்பான நாட்களை நினைவுபடுத்தி கூறியிருந்தார் டயானா.



## கானல்நீரான கனவுகள்

கமீலாவுக்கும் சாள்ஸ்சுக்கும் இடையிலான உறவு தொடர்வதை சகித்துக் கொள்வது என்பதும் அந்த முடிவுகளில் ஒன்று.

"எனது மன உளைச்சலை வில்லியம்ஸின் அணைப்பில் மறந்தேன்" என்று கூறியிருந்தார் டயானா.

வில்லியம்ஸ் பிறந்தபின்னர் டயானா சற்று மெலிந்து, எடை குறைந்து காணப்



பட்டார். முடியுமானவரை மகிழ்ச்சியாக இருக்கவே விரும்பினார்.

டயானாவின் மகிழ்ச்சியை கெடுப்பது என்றே கங்கணம் கட்டியிருப்பது போன்று நடந்துகொண்டது அரச குடும்பம்.

1982 ஆகஸ்ட் 4ம் திகதி வில்லியத்திற்கு ஞானஸ்நானம் நடைபெற்றது.

ஞானஸ்நான நிகழ்ச்சியில் டயானாவை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. மகாராணி குடும்பத்தினர்.

அதுபற்றி டயானா பின்வருமாறு கூறியிருந்தார்: "நான் பரிபூரணமாக ஒதுக்கப்பட்டுவிட்டதை உணர்ந்தேன். மகாராணி, அவரது தாயார், சாள்ஸ் ஆகியோர் வில்லியத்துடன் பல கோணங்களில் படம் பிடித்துக் கொண்டனர். என்னை எல்லோரும் புறக்கணித்துவிட்டனர்.

வில்லியம் அழுது கொண்டிருந்தான். என்னை ஒதுக்கிவிட்டதை அவன் உணர்ந்து கொண்டான் போலும்".

அன்று டயானா மிகவும் களைத்துப் போனார். தன் மகிழ்ச்சிக்கான முயற்சிகள் அனைத்தும் தோல்வி கண்டுவருவதை நினைக்க பொங்கி வந்த அழுகையை கட்டுப் படுத்தமுடியாமல் தனிமையில் இருந்து அழுதுவிட்டார்.

அழுதமையால் மனப் பாரம் கரைந்தது போல் இருந்தது.

முடியுமானவரை அனுசரித்து நடந்து கொள்வது என்ற தன் முன்னைய முடிவை மீண்டும் உறுதிசெய்து கொண்டார்.

### தொடர் குழப்பம்

டயானாவின் மனநிலையை உணர்ந்து அரவணைக்க சாள்ஸ்சோ, மகாராணியோ அப்போது முன்வந்திருந்தால்கூட டயானாவின் வாழ்க்கை பின்னர் திசைமாறியிருக்காது. டயானாவை இன்றும் நாம் உயிருடன் பார்த்துக் கொண்டே இருந்திருக்கலாம்.

ஆனால், வறட்டுத்தனமான மரபுகளு

எத்தனை நாளைக்குத்தான் கடிதம் எழுதிக் கொண்டிருப்பது? தன் நாட்கள் விரயமாக அழிந்து கொண்டிருக்கின்றன என்று வருந்தினார் டயானா.

அதன்பின்னர்தான் சமூக சேவைகளில் கூடுதலான நாட்டம் கொள்ளத் தொடங்கினார்.

இயல்பாகவே அநாதைகள்மீதும் ஏழைகள்மீதும் டயானாவுக்கு பரிவு இருந்தது. தன் மேல் பாசம் வைத்து, தான் செல்லும் இடமெங்கும் திரளாகக் குவியும் மக்கள்மீதும் பாசம் ஏற்பட்டது.

மகாராணி குடும்பதினருக்கும் இல்லாதளவு செல்வாக்கு தனக்கு ஏற்பட்டுவிட்டதை டயானா புரிந்து கொண்டபோதும், தற்பெருமை கொள்ளவில்லை.

மகாராணி குடும்பத்தினருடன் சம்பந்தம் கொண்டதால்தான் தன்னால் இளவரசி என்ற பட்டத்துடன் பிரபலமாக முடிந்தது. என்பதை டயானா மறக்கவில்லை.

அதேசமயம் மகாராணி குடும்பத்தினர் தன்னை ஒரு பொருட்டாக மதிக்காததுபோல நடந்துகொள்ளும்போது, தன் செல்வாக்கை அவர்களுக்கு காட்டவேண்டும் என்ற வைராக்கியமும் எழாமல் இல்லை.

இன்னொரு விடயமும் டயானாவுக்கு கவலையளித்தது. சில சமயத்தில் கோபம் ஏற்படுத்தியது.

தனது தாயாரைப் பற்றியோ, தந்தையாரைப் பற்றியோ டயானா எப்போதாவது பேச்சின் இடையே குறிப்பிட்டால், அரச குடும்பத்தினர் முகம் சுளிப்பதை டயானா அவதானித்தார்.

என்றாலும் மிகப் பொறுமையாக தன் மன உணர்வுகளை அடக்கிக் கொண்டார்.

கமீலாவிடம் சுகம் கண்டுவந்த சாள்ஸ்சுக்கு எப்போதாவது டயானாவின் இளமையும் தேவைப்பட்டது.

அத்தகைய சமயங்களில் டயானாவுடன் மிக நெருக்கமாக, அன்பாக பழகுவார். இருவரும் வில்லியம்ஸ்சுடன் வெளியே சுற்றிவிட்டு வருவார்கள்.

டயானாக்கும் அந்தத் தருணங்களில் மகிழ்ச்சியாகவே இருக்கும்.

சாள்ஸ்சுடன் ஒன்றாக அமர்ந்து சங்கீதம் கேட்க வேண்டும்.

சாள்ஸ்சுடன் ஒன்றாக நீச்சல் குளத்தில் குளிக்க வேண்டும்.

சாள்ஸ்சுடன் ஒன்றாக அமர்ந்து 'செஸ்' விளையாட வேண்டும். சாள்ஸ் தோற்பதாகத் தெரிந்தால், சாள்ஸ்சுக்காக விட்டுக் கொடுக்க வேண்டும்.

செஸ், செக்ஸ் இரண்டிலும் பெண்கள் தங்களிடம் தோற்க வேண்டும் என்று ஆண்கள் விரும்புகிறார்கள். அதனால் தோற்கிறோமோ இல்லையோ தோற்பதுபோல நடிக்க வேண்டும் என்று தோழிகளிடம் கூறுவாராம் டயானா.

டயானாவின் கனவுகள் கானல் நீராகின. சாள்ஸ் என்ற இயந்திரத்தனமான, தாழ்வு மனப்பான்மை கொண்ட மனிதன் முன்னால், ஈரமான ரோஜா ஒன்று மெல்ல மெல்ல வாடிக் கொண்டிருந்தது.

### ஹரி பிறந்தான்

டயானா மீண்டும் கர்ப்பமானார். இளவரசர் சாள்ஸ்சுக்கு பெண் குழந்தை வேண்டும் என்றுதான் ஆசை.

ஆனால் மீண்டும் ஆண் குழந்தைதான் பிறந்தது. சாள்ஸ்சுக்கு ஏமாற்றத்தை தாங்க முடியவில்லை.

இரண்டாவது குழந்தையும் டயானாவைப் போலவே பழுப்பு நிற முடியுடன் காணப்பட்டமை மேலும் வெறுப்பூட்டியது.

வெளிப்படையாகவே தன் வெறுப்பைக் கூறினார்.

குழந்தை ஹரியின் ஞானஸ்நானத்திற்கு டயானாவின் சிறிய தாயாரும் வந்திருந்தார். அவரிடம் பேசும்போது, "இரண்டாவது குழந்தையும் ஆணாகப் பிறந்தது எனக்கு ஏமாற்றம்தான்" என்று சாள்ஸ் கூறினார்.

ஆனால் டயானாவின் தாயார் தன் பேரனை விட்டுக் கொடுக்கவில்லை. "இக்குழந்தை இயல்பாகப் பிறந்ததுக்காக நீங்கள் கடவுளுக்கு நன்றி சொல்லவேண்டும்" என்று கூறிவிட்டார்.

சாள்ஸ்சுக்கு முகம் சுருங்கிப் போய்விட்டது.

ஹரி பிறந்த பின்னர் சாள்ஸ் முன்பைவிட அதிகமாக கமீலாவுடன் பொழுதைக் கழிக்க ஆரம்பித்தார்.

டயானா பொறுத்துப் பொறுத்து பார்த்தார்.

சில சமயம் டயானா முன்பாகவே கமீலாவுடன் கொஞ்சிக் கொஞ்சி ஃபோனில் பேசுவார் சாள்ஸ்.

டயானாவுக்கு பைத்தியம் பிடித்துவிடும் போல இருந்தது. எதையாவது தூக்கிப் போட்டு உடைக்க வேண்டும் போலவும் இருக்கும்.

ஒருநாள் தன்னை நன்றாக அலங்கரித்துக்கொண்டு சாள்ஸ் புறப்பட்டுக் கொண்டிருந்தார்.

டயானாவுக்கு அவரைப் பார்க்க சுள்ளென்று கோபம் வந்தது.

"எங்கே கமீலாவிடமா போகிறீர்கள்?"

சாள்ஸ் பதில் சொல்லவில்லை. டயானாவுக்கு கண்மண் தெரியாத கோபம்.

**புவனா**



"அவள்தான் உங்கள் கண்ணுக்கு பெண்மாதிரித் தெரிகிறாளா?" கிட்டத்தட்ட கத்தியே விட்டாள்.

சாள்ஸ் "ஏன் இப்படி ஓநாய் மாதிரிக் கத்துகிறாய்?" என்று கேட்டார்.

அப்படிக்கேட்டதுதான் தாமதம், அலங்காரம் செய்யும் மேசைமீது இருந்த கத்தியை எடுத்து தனது மார்பில் 'V' அடையாளமாக கீறினார் டயானா.

இரத்தம் பீறிட்டது.

சாள்ஸ் மரம்போல நின்று கொண்டிருந்தார். டயானாவை தடுக்க முற்படவில்லை.

கோபத்தில் டயானாவுக்கு வலி தெரியவில்லை.

(அடுத்த வாரமும் வரும்)

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? புத்தளம் வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**பஞ்சலிங்கம் கோமதி,**
**இல.3, புதிய வீட்டுத் திட்டம்,**
**கொச்சிமடு, புத்தளம்.**

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

புதிய தொடர் 6

எழுத்துச் சித்தர் பாலகுமாரன் தனது வழக்கமான பாணியில் இருந்து விலகி சஸ்பென்ஸ் கலந்து எழுதிய விறு விறு நாவல்.

# இனி என் முறை

எழுத்துச் சித்தர் பாலகுமாரன்

பிள்ளை அன்று பள்ளிக்கு மட்டம் போட்டான். அப்பாவும் பிள்ளையும் வேக வைத்த உருளைக்கிழங்கு உரித்தார்கள். மேல் தொட்டி கழுவினார்கள். கழுவின நீரை ட்யூப் வழியே தோட்டத்துக்கு பாய்ச்சினார்கள். ஒரே பாத்ரூமில் பாடிக் கொண்டே குளித்தார்கள். பரஸ்பரம் முதுகு தேய்த்துக் குளித்தார்கள். சுடச்சுட பகல் உணவு சாப்பிட்டார்கள். வீடியோவில் காட்டூன் பார்த்தார்கள். கதவு அடைத்து திரைச் சீலைகளை சுத்தமாய் மூடிவிட்டு முழு வேகத்தில் ஃபேன் சுழல தூங்கினார்கள்.

“ஏங்க... மணி மூணு முப்பது. பையனை ஸ்விம்மிங் கூட்டிக்கிட்டுப் போகணும்.”

“இன்னிக்கு வேணாம் அமுதா.” அவன் புரண்டு படுத்தான்.

“க்ளாஸ் போவமே. நீங்களும் வாங்களேன்!”

“போகட்டும் படு. எனக்குத் தூங்கணும்.” இழுத்து படுக்கையில் போட்டான். அவள் நெஞ்சில் கை போட்டபடி தூங்கினான். அமுதா தலை தூக்கி பிள்ளையைப் பார்த்தாள். அதுவும் அயர்ந்து தூங்கியபடி இருந்தது. அவளுக்கும் கண் சொருகியது.

சட்டென்று விழிக்க, கடிகாரம் நாலு பத்து காட்டியது. ‘க்ளாஸ் துவங்கியிருக்கும். வாசு நீரில் குழந்தைகளை விரட்டியபடி இருப்பான். தேடுவானா...? திலீப் ஏன் வரவில்லை என்று யாரையேனும் கேட்பானா?’

மெல்ல அவன் கைகளை விலக்கி சமையலறைக்குப் போனாள். காபி போட்டுக் குடித்தாள். எச்சில் பாத்திரங்களை கழுவினாள். ஃபோன் மணி அடித்தது.

அவன் புரண்டான். “அமுதா யாருன்னு பாரு!” திரும்பச் சுருண்டு கொண்டான்.

அமுதா ஃபோன் எடுத்து “ஹலோ” என்றாள்.

“நான் வாசு பேசறேன். திலீப் வரலீங்களா?”

“இல்லீங்க. அவங்க அப்பா வந்திருக்காங்க. அதான் வரலை.”

“ஓ.. உடம்பு மறுபடி சரியில்லையோன்னு நினைச்சேன்.”

“அதெல்லாம் ஒன்னுமில்லிங்க.”

“சரிங்க வச்சுடறேன்” ஃபோன் துண்டிக்கப்பட்டது.

‘கஷ்டகாலம் எதுக்கு இப்ப ஃபோன்? செல்வா கேட்டால் என்ன சொல்வது?’

“யாருப்பா ஃபோன்ல?”

“திலீப் பள்ளிக்கூடத்து சிநேகிதன் அவங்க அப்பா பேசினாங்க. அவங்க பையனுக்கு பொறந்த நாள். திலீபை காணமே இன்னிக்குன்னு கேட்டாங்க.”

‘ச்சே! ஏன் பொய் சொல்கிறோம். அதுவும் புருஷனிடம்-இந்த கோச் பைத்தியம் எதுக்கு அனாவசியமாய் ஃபோன் பண்ணுகிறது? பேச இடம் பிசகோ? இஷ்டமிருந்தா வரோம். இல்லேன்னா இல்லை. எதுக்கு ஃபோன். நாளைக்கும் போக வேண்டாம். போனால் பல் இளிக்கும்.’

மாலையில் கார் வரவழைத்து ஊர் சுற்றினார்கள். “ஏர் போர்ட் போலாம்பா. ப்ளேன் பார்க்க ஆசையா இருக்கு.”

“ப்ளேன் தானே? எத்தினி ப்ளேன் பார்க்கணும் உனக்கு?”

கார் ஏர்போர்ட் விரைந்தது. வாசலில் மடக்கி டிக்கெட் கேட்க, செல்வா தன் கார்ட் எடுத்துக் காட்டினான். கதவு விரியத் திறந்தது. பெரிய செக்யூரிடி அதிகாரியிடம் பேசினான்.

“ப்ளேன் பார்க்கணுமா தோழரே?”

போகையில் திலீப முதுகு தடவி உள்ளே அனுப்பினார்கள். அமுதா ப்ளேன் பார்க்க வரவில்லை என்றாள்.

லவுஞ்சில் உட்கார்ந்து கொண்டாள். அப்பனும் பிள்ளையும் ப்ளேன் நோக்கிப் போனார்கள். பம்பாயிலிருந்து சென்னைக்கு அப்போதுதான் வந்த விமானத்தில் ஏறினார்கள். காக்பிட் கதவு திறந்து செல்வா பிள்ளைக்குக் காட்டினான்.

உள்ளே சோதனை செய்து கொண்டிருந்த என்ஜினியரை அறிமுகப்படுத்திக் கொண்டான். அவர் விமானம் பற்றி விவரிக்க இவன் வாய் பிளக்க, செல்வா பையனை காதலோடு பார்த்தான். அமுதா லவுஞ்சில் நகம் கடித்துத் துப்பினாள். போர் என்று கண்களை மூடிக்கொண்டாள்.

“ரொம்ப தேங்ஸ்ப்பா” பிள்ளை



காரோட்டும் தகப்பனைக் கட்டிக் கொண்டு முத்தம் கொடுத்தது. வழியெல்லாம் சளசளத்துக் கொண்டு வந்தது. வீட்டுக்கு வந்ததும் பொம்மை ப்ளேன் கையில் எடுத்து நெட்டுக்குத்தாய் லேண்டிங் செய்தது.

“தப்பு, திலீப் பாஸஞ்சர் ப்ளேன் நெட்டுக் குத்தலா இறங்காது. இப்படி இறங்கும்.” தகப்பன் ப்ளேனை பறிக்க முயல, பிள்ளை தடுத்தான். “இப்ப இறக்கறேன்பார்” மெல்ல சரியாது கீழே இறக்கினான். தரைக்கு சமமாய் ப்ளேனைப் பறக்க விட்டு தரை தொட்டான்.

“வெரிகுட். ஃப்ரொண்ட் வீல் முதல்ல தொடாது; நடுவுல இருக்கிற வீல் தொடும். அப்புறம்தான் நோஸ் லேண்ட் ஆவும்” பிற்பகல் இட்ட சப்பாத்தியும் ஓட்டலில் வாங்கின கோழி வறுவலும் சுருட்டி சாப்பிட்டார்கள். ‘சக் நாரிஸ்’ படம் பார்த்தார்கள். படம் ஆண்கள் உலகமாய் இருந்தது. அமுதா வாக்மேனை காதில் பொருத்திக் கொண்டாள்.

“நேற்று நீர் விட்டது
இன்று வேர் விட்டது
நெஞ்சில் அம்மாடியோ
நூறு பூ பூத்தது.

சின்னஞ் சிறு பருவம்
இன்னும் கொதிப்பதோ
சொல்லி சொல்லி பொழுதை
இன்னும் கழிப்பதோ?”

கண்கள் மூடி முகம் தெரியாத யாரையோ காதலிக்கிற கன்னிப்பெண்ணாய் தன்னை நினைத்துக்கொண்டாள். திருமணமாகாத கன்னிப் பெண்ணாய் இருப்பதில் ஒரு சுகம் இருக்கிறது. யாரை வேண்டுமானாலும் நெஞ்சுக்குப் பிடித்த காதலனாய் நிறுத்திக் கொள்ளலாம். கனவு காணலாம். திருமணமாகி சினிமா பாட்டு கேட்டு கனவில் மூழ்குவதில் கொஞ்சம் நெருடல் இருக்கிறது. புருஷனைக்-காதலனாய் நினைத்துக் கொள்ளலாம். ஆனால் எல்லா நேரமும் புருஷன் காதலன் இல்லை. சில சமயம்-எப்பவாவது சில சமயம் புருஷன் மீது ஒரு கிக் வரும். அப்போது புருஷனுக்கும் கிக் வர வேண்டும்.

‘ஏண்டி பிராணனை வாங்கற?’ என்று கேட்டு விட்டால் மறுபடி கிக் தலை தூக்க ஆறு மாசமாகும். குடும்பம் போர். வேதனை, சுமை, கனவுகளே அற்ற நிலை. கனவுகள் நிஜமில்லையெனினும் பரம சுகம். அமுதா படுக்கைக்குப் போனாள்.

“நீயும் அச்சம் விடு
நூறு முத்தம் கொடு
மீதி மிச்சம் எடு
மேலும் சொல்லிக் கொடு”

சம்பந்தமில்லாமல் வாசுதேவன் முகம் சிரித்துக்கொண்டு முன்னே வந்தது. “ச்சு போ அந்தாண்ட”- அமுதா விரட்டினாள்.

“படுக்க செல்ல இதெல்லாம் எதுக்கு கழுத்துல மாட்டிண்டு.”

“ம்ம்....” அமுதா திடுக்கிட்டாள்.

“பையன் தூங்கிட்டான். பெட்லபோட்டு போர்த்திட்டேன்.” ‘இது வேணுமா..!’ நைட்டியை மெல்ல பிரித்தான். அவன் கையை விலக்கி விட்டு அவளே தளர்த்தினாள். இடம் கொடுத்தாள். நேற்று இருந்த கிக்கூட இன்று இல்லை. இவன் விடப் போவதுமில்லை. சரி தின்னு என்பதாய் இருந்தாள். “வாக்மென் போட்டுக்கட்டுமா?” என்று கேட்டாள்.”

“ஏன்?”

“கேட்டுக்கிட்டே...”

“சரி” அவன் நெஞ்சு முழுக்க பரவி இறுக்கிக்கொண்டான். இடது கையால் இருட்டில் வாக்மென் தேடி காதில் போட்டுக் கொண்டாள். பட்டன் தட்டி விட்டாள்.

“ஆலிலை சிவப்பாக
அங்கமும் நெருப்பாக
நூலிடை கொதித்தேறும்
நிலை யென்னவோ?”

யப்பா...! கண்கள் மூடிக் கொண்டாள். என்ன பாட்டு இது. எப்படி இது சினிமாவில வருகிறது? அர்த்தம் புரியாதா... யாரும் கேட்கமாட்டார்களா?

“மேலும் மேலும் மோகம் சூடும்
தேகம் யாவும் கீதம் பாடும்”

“அதை எடுத்துரும்மா” செல்வா பிடுங்கிப் போட்டான். இன்னும் இறுக்கிக் கொண்டான். சட்டென்று இசை துண்டிக்கப்பட்டதும் அமுதா அதிர்ச்சி அடைந்தாள். அந்த கணத்தை மிகவும் வெறுத்தாள். வெறுப்பை சொல்ல முடியவில்லை. உள்ளே புதைக்க வேண்டியிருந்தது. வெறுப்பு விதையாய் புதைக்க அலட்சியம் முளைவிடும். பழிவாங்கும் குணம் தண்டாய் வளரும். பொறாமை இலையாகும். கோபப் பூக்கள் மலரும். மலர்ந்தது.

காலை ஏழு மணிக்கு உடுத்துக் கொண்டு புறப்பட்டு விட்டான். பிள்ளையை பள்ளி வாசலில் விட்டபோது கேட்டாள், “இன்னிக்கு ஸ்விம்மிங் போறமாடா?”

“வேண்டாம்மா.”

“ஏன்?”

“அப்பா எங்கயாவது வெளிய கூட்டிட்டு போறேன்னாங்க.”

“அப்ப போக வேண்டாம். அப்பா வரலைன்னா போலாமா?”

“சரி.” உள்ளே துள்ளி ஓடி மறைந்தான்.

வீட்டிற்குள் நுழைந்து பரபரவென்று பகல் சமையலில் ஈடுபட்டாள். சமையலறை ஒழித்தாள். செல்வாவின் ஆபீஸுக்கு ஃபோன் செய்து “பகல் சாப்பாட்டுக்கு வருவீங்களா?” என கேட்டாள். “இல்லப்பா- இன்னிக்கு வீடு திரும்ப எட்டாயிடும். வயிறு வேற சரியில்லை. மிளகு ரசம் வச்சுடு.”

“ஏன்... என்னாச்சு?”

“வந்து சொல்றேன். இப்ப வுட்டுடேன். வேலை நிறைய இருக்கு.” தட்டென்று துண்டித்தான். பிற்பகல் அயர்ந்து தூங்கினாள். விழித்து முகம் கழுவினாள். உடுத்திக் கொண்டாள். கூலிங் கிளாஸ் மாட்டினாள். தலையை வெறுமே ரப்பர் பேண்ட் கட்டி ஹெல்மெட் அணிந்து வெளியே வந்தாள். கதவு பூட்டினாள்.

மொபெட் உதைத்து இயக்கினாள். காதோரம் உள்ள முடி சுற்றி மூக்கில் விழுந்தது. தடவி ஒதுக்கி மீண்டும் நகர்ந்து கூலிங் கிளாஸ் எதிரே அலை மோதிற்று.

‘ச்சே... புழுக்கம். ஸ்விம்மிங் போலாமா வேண்டாமா? செல்வா இரவு எட்டு மணிக்கு முன்பு வரப்போவதில்லை. வீட்டுக்குப் போய் என்ன வேலை? திலீப் விருப்பப்பட்டால் போகலாம்.’ திலீப் போகலாம் என்றான். வழியில் ஒரு ஹோட்டலில் போர்ன்விடா குடிக்க வைத்து மொபெட்டை ஸ்விம்மிற்காக ஹொட்டலுக்கு திருப்பியபோது திலீப் ஹைய்யா என்று குதித்தான். மொபெட் ஆடிற்று. ‘மக்கு... ஆடாத வா.’ சின்ன கோபத்துடன் பிள்ளையை எச்சரித்தாள்.

படியேறும்போது பிள்ளைகள் கூச்சல் கேட்டது. திலீப் சட்டை, நிக்கர் அவிழ்த்து ஸ்விம் ஸூட்டுக்கு மாறி நீரில் குதித்தான். எங்கே வாசு என்று அமுதா நீரில் தேடினாள். வெங்கடேஷ் மட்டும் நீரில் மிதந்தபடி குழந்தைகளை விரட்டிக் கொண்டிருந்தான். இவளைக் கண்டதும் நீந்தி இவள் கரையருகே வந்தான்.

“மாஸ்டர் இன்னிக்கு லீவுங்க.”

“ஏன்?”

“உடம்பு சரியில்லை- படுத்திருக்காரு.”

“அப்படியா எங்கே... என்ன உடம்பு?”

“இங்க ஓட்டல் ரூம்லதான். வயித்துப் போக்கு.”

“டாக்டர்கிட்ட போனாரா?”

“போயிட்டு வந்தாரு. இங்க வந்து கொஞ்ச நேரம் உட்கார்ந்தாரு. முடியலை. போய் படுத்துட்டாரு.”

“எந்த ரூம்?”

“கடைசி ரூம்.” முதல் தளம். வலது பக்க அறையை கை காட்டி விட்டான்.

அவன் கை காட்டுவதை மூன்றாவது தளத்திலிருந்து இருவர் கவனித்தார்கள்.

அமுதா திலீபிடம் போய் கிட்டவரச் சொல்லி கை காட்டினாள்.

“அம்மா போய் பத்து நிமிஷத்துல வந்துடறேன். நீ ஸ்விம் பண்ணிட்டிரு.”

பிள்ளை தலையாட்டிவிட்டு எதிர் கரைக்குப் போயிற்று. அமுதா படியிறங்கி ரிஸப்ஷனுக்குப் போனாள். ரிஸப்ஷனில் உள்ளே தாவாரத்தில் டைனிங் ஹால் தாண்டி வலப் பக்க தாவாரத்தில் நடந்தாள். கடைசி அறையை அடைந்து மணி அழுத்தினாள். லவுஞ்சில் உட்கார்ந்து பேப்பர் படித்த ஆள் பேப்பர் மடக்கி அவளைப் பார்த்தான்.

உள்ளே அவன் லுங்கியுடன் படுத்துக் கிடந்தான். அமுதாவைக் கண்டதும் டவலை தோளில் போர்த்திக் கொண்டான். “வாங்க” என்றான்.

“என்ன ஆச்சு?” உள்ளே போன கதவு தானாய் சாத்திக் கொண்டது திரும்பினாள்.

“அது அப்படி தாங்க ஃப்ளஷ் டோர் சாத்திக்கும். இருங்க வராண்டாவுக்கு வந்துடறேன்.”

“பரவாயில்லை. என்ன ஆச்சு?”

“உட்காருங்களேன்.” நாற்காலிக்கு கை காட்டினான்.

உட்கார்ந்தாள்.

“நேத்திக்கு நல்லாதாங்க இருந்தேன். காலைலேர்ந்துதான் புரட்டி புரட்டி நோவு. டாக்டர் ஏதோ தப்பு சாப்பாட்டுலங்கறார். என்ன அப்படி சாப்பிட்டேன்னு தெரியலை. ஏழு,எட்டு தடவை போயிருக்கு.”

“டயர்டா தெரியறது. எட்டு தடவைன்னா கஷ்டம். ஹாஸ்பிடல்ல சேர்ந்துடுங்களேன். தண்ணி நிறைய குடிங்க.”

“இன்னிக்கு ஒருநாள் பார்த்துட்டு அப்புறம் அட்மிட் ஆகலாம்னு இருக்கேன். ரொம்ப நன்றிங்க.”

“எதுக்கு?”

“வந்ததுக்கு. திலீப் அப்பா வந்துட்டாரா?”

(தொடர்ந்து வரும்)

# வயதான போராளிகளின் வசீகரக் காதல்

தென்னாபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா! உறுதி குலையாத கிழச் சிங்கம்.

மலைபோல வந்த சோதனைகளை எதிர்கொண்டு போராடிய மாபெரும் தலைவர்.

இப்போது தென்னாபிரிக்காவின் அதிபர். ஓயாத பணிகள்!

இந்தப் பணிகள் மத்தியில் நெல்சன் மண்டேலாவின் இதயத்தில் காதல் பூ மலரவும் நேரம் கிடைத்திருக்கிறது.

இந்த வயதில் காதலா? என்று கேட்கலாம்.

காதலுக்கு வயது கிடையாது. காதலர்களுக்கும் வயது கிடையாது.

நெல்சன் மண்டேலாவின் இதயத்தை வெற்றிகரமாக கைப்பற்றியிருப்பவர் கிரேகா மிக்கேல்.

52 வயதிலும் சுறுசுறுப்பில் இளமையாக இருக்கும் கிரேகா, மொசாம் பிக் நாட்டின் முன்னாள் அதிபரின் மனைவி.

விமான விபத்து ஒன்றில் மொசாம்பிக் அதிபர் சமோரா மிக்கேல் பலியானார்.

சமோரா மிக்கேலை பறிகொடுத்த சோகத்தில் கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகளாக சோகத்தில் புதைந்து கிடந்தார் கிரேகா.

இழந்த சந்தோசங்களும், தொலைந்த புன்னகையுமாக இருந்த கிரேகாவுக்கு மண்டேலாவின் இனிய நட்புத்தான் தென்றலைப்போல் இதமளித்தது.

கிரேகாவும் ஒரு முன்னாள் போராளி தான்!

மொசாம்பிக் நாட்டை போர்த்துக்கீசர்கள் ஆக்கிரமித்திருந்தனர். ஆயுத பலம் மூலம் அடக்கி வைத்திருந்தனர்.

மொசாம்பிக் மக்களின் விடுதலைக்காக பல இயக்கங்கள் ஆயுதம் தாங்கிப் போராடின.

சமோரா மிக்கேல் அங்கம் வகித்த இயக்கத்தில்தான் கிரேகாவும் இணைந்து கொண்டார். ஆயுதம் தாங்கிப் போராடினார்.

அது பற்றி நினைவு கூருகிறார் கிரேகா;

“போர்த்துக்கீசரின் ஆதிக்கத்தில் இருந்து மொசாம்பிக் விடுதலை பெற வேண்டும் என்று நினைத்தேன். அடிமைத்தனமாக வாழ்வதைவிட, போராடி மடிவதே மேல் என்று உணர்ந்தேன். எங்கள் மக்களை சுரண்டியும், ஏமாற்றியும், பயமுறுத்தியும் தம் பிடியில் வைத்திருக்கும் போர்த்துக்கீசரை விரட்டும் போராட்டத்தில் நானும் இணைந்து கொண்டேன்” என்கிறார் கிரேகா.

மொசாம்பிக்கில் போர்த்துக்கீச படை பலம் அதிகமாக இருந்ததால், தங்கள் படைபலத்தை பாதுகாக்கவும், தொடர்ந்து போராடவும் தான்சானியா நாட்டில் தங்கியிருந்தனர் மொசாம்பிக் போராளிகள்.

அங்குதான் கிரேகாவும் தங்கியிருந்து கெரில்லா போரில் பயிற்சி பெற்றார். அங்குதான் சமோரா மிக்கேலைச் சந்தித்தார்.

போர்க் களத்தில் மலர்ந்த காதல் பின்னர் விடுதலை பெற்ற மொசாம்பிக்கில் பூத்துக் குலுங்கியது.

சமோரா, கிரேகா தம்பதிக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்தனர்.

சமோரா மரணமானபோது நெல்சன் மண்டேலா சிறையில் இருந்தார்.

சமோராவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து மண்டேலா கிரேகாவுக்கு கடிதம் எழுதினார்.

அதுதான் முதல் தொடர்பு.



மண்டேலா-கிரேகா

பதிலுக்கு கிரேகா மண்டேலாவுக்கும் கடிதம் எழுதினார்.

நெல்சன் மண்டேலா விடுதலையானார்.

மண்டேலாவின் மனைவி வின்னியின் தீவிரப்போக்கு மண்டேலாவுக்கு பிடிக்கவில்லை.

வின்னியை விவாகரத்துச் செய்தார் மண்டேலா.

தனிமையில் இருந்த மண்டேலாவுக்கு கிரேகாவின் நட்பு ஆறுதல் கொடுத்தது.

இருவரும் அடிக்கடி சந்தித்தனர். நட்பு காதலானது. காதல் உறுதியானது.

பொது மக்கள் முன்பாகவும் இருவரும் கை கோர்த்துச் செல்கிறார்கள்.

முத்தங்களும் பரிமாறிக் கொள்கிறார்கள்.

அதனால் கிசுகிசுக்கள் கிளம்ப இடமில்லாமல் போய் விட்டது.

ஆனாலும் கிரேகாவிடம் இன்னமும் சமோராவின் நினைவுகள் பாக்கி இருக்கின்றன.

“சமோராவின் மனைவியாக மரணமடையவே விரும்புகிறேன்” என்கிறார்.

அதேசமயம் தன் காதலையும் மறைக்காமல் பேசுகிறார்.

“காதல் என்பதை திட்டமிட்டு செய்ய முடியாது, அது தானாக வருவது. சமோராவின் மரணத்தின் பின்னர் நான் யாரையும் காதலிப்பது இல்லை என்ற முடிவில் தீர்மானமாக இருந்தேன்.

ஆனால் நெல்சன் மண்டேலாவைச் சந்தித்த பின்னர் என் தீர்மானம் தகர்ந்து விட்டது. ஏனென்றே தெரியவில்லை.

நான் அவரை நேசிக்கிறேன். அதனைத்தான் சொல்ல முடியும். ஒருவரைக் காதலிக்கும்போது அவர் பெருந்தன்மையான பெரிய மனிதர் என்று யாரையும் குறிப்பிடாதீர்கள். ஏனென்றால் காதல் என்பது பெருந்தன்மைக்கும் அப்பாற்பட்ட விஷயம்” என்று கூறுகிறார் கிரேகா.

வயதான காதலர்கள்தான். ஆனால் இவர்களின் காதல் இளமையானது. பக்குவமானது.

வாழ்வின்மீதும், சுதந்திரம்மீதும் உள்ள காதலால் ஒரு காலத்தில் போராளியாக இருந்தவர்கள், இப்போது சுதந்திரக் காற்றை சுவாசித்த திருப்தியோடு, காதலையும் சுவாசித்துக் கொண்டிருக்கிறார்கள்.




> 'செக்ஸ் விசயங்களை நாகரிகம் என்னும் போர்வையால் மூடி பல மோசமான படங்கள் வருகின்றன. ஆனால், மக்கள் விழிப்புக் கொண்டு விட்டனர். இனியும் அவர்களை ஏமாற்ற முடியாது. மனைவி, மக்களுடன் பார்க்க லாயக்கற்ற படங்கள் வெற்றி பெற முடியாது என்பதை சமீபத்தில் சில புது ரிலீஸ்கள் நிரூபித்துவிட்டன'
>
> –தலையங்கத்தில் ஒரு பகுதியில்.... 'கலை' மே 1949 இதழில்–

**(13)**

"கொஞ்சம் வெளில இருன்னு சொன்னேன்." என்றாள் ரிசீவரின் மவுத் பீஸை மூடியபடி மதுமிதா.

"யாரு அந்த சந்திரசேகர்? அப்படி என்ன பர்சனலாப் பேசப் போறே?" என்றாள் அம்மா நகராமல்.

"நான் பேசறது உனக்குத் தெரிய வேணாம்னு நினைக்கிறேன். போதுமா? இதுக்கு மேல எப்படி வெளிப்படையா சொல்றது?"

"ஆனாலும் உனக்கு இவ்வளவு திமிரு ஆகாதுடி! உன் அம்மாவை ஒரு வேலைக்காரி மாதிரித்தான் நடத்தறே!"

நொடித்துக் கொண்டு துர்க்கா வெளியே போனாள்.

"ஹலோ சந்துரு" என்றாள் மதுமிதா.

"என்னாச்சும்மா?"

"ஆக்ஸிடெண்ட் யாரைக் கேட்டுப்பா நடக்குது?"

"கால்லயா? எந்தக் கால்ல?"

"லெஃப்ட்ல"

"ஃபிராக்ச்சரா?"

"உடைஞ்சே போச்சிப் போலிருக்கு. ஆபரேட் பண்ணி பிளேட் வெச்சு போல்ட் பண்ணியிருக்காங்க. இருபது நாளைக்குக் காலை அசைக்காம இருக்கணுமாம்... கட்டித் தொங்கவிட்டிருக்காங்க சந்துரு."



"ஐ ம் ஸாரி மது! என்னால தான்!"

"நீ என்னப்பா செஞ்சே?"

"நான்தானே உன்னை ஹொட்டலுக்குக் கூப்பிட்டேன். வந்துட்டு நீ திரும்பினப்பதானே இது நடந்திருக்கு."

"அசடு மாதிரிப் பேசாதே. விபத்துக்கு பெரிசா ஆராய்ச்சி பண்ணக்கூடாது. நடக்கணும்னு இருந்திருக்கு. நடந்துருச்சி. விட்டுடு"

"தைரியமா இருக்கியா?"

"தைரியம் இருக்கு. ஆனா, ஏமாற்றமா இருக்கு சந்துரு."

"என்ன ஏமாற்றம்?"

"இன்னும் நாலு நாள்ல கல்யாணம் பண்ணிக்கிறதா இருந்தோம். இந்தச் சூழ்நிலைல இப்படி வந்து படுத்துட்டேனே."

"பரவால்லை. அதனால என்ன? கொஞ்சம் தள்ளிப் போகுது."

"உனக்கு இதுல வருத்தமில்லையா?"

"கல்யாணம் தள்ளிப் போறதிலையா?"

"ம்.."

"ம்கூம். உனக்கு அடிபட்டதிலதான் வருத்தம். வலி இருக்கா?"

"இருக்கு"

"நான் உன்னைப் பார்க்கணும் மாதிரி இருக்கு மது."

"எனக்கும் ஆசையாத்தான் இருக்குப்பா. ஆனா, இங்க என் கூடவே அம்மா இருக்கா. உன் ஃபோனை முதல்ல அவதான் அட்டெண்ட் செஞ்சா. சரியான சந்தர்ப்பம் அமையறப்ப நானே ஃபோன் பண்றேன். வந்துடு"

"அது நல்ல ஹாஸ்பிடல்தானா? வேற யாராச்சும் பெஸ்ட் ஆர்த்தோ சர்ஜன் சிபாரிசு பண்ணட்டுமா?"

"இது பக்கத்தில இருந்த பெரிய ஹாஸ்பிடல்னு இங்க சேர்த்துட்டாங்க. கரெக்டான ட்ரீட்மெண்ட்னுதான் நினைக்கிறேன். இன்னும் நான் டாக்டரை கன்சல்ட் செய்யலை. அவசியப்படாதுன்னு நினைக்கிறேன்."

"மயக்கமாய்ட்டியா?"

"ஆமாம்."

"யாரு கொண்டு வந்து சேர்த்தது?"

"சித்தப்பா! டான்ஸ் ஹால்ல என்னை வேவு பார்க்கறதுக்காக பின்னாடியே வந்திருக்காருன்னு நான் கூட சொல்லலை? இந்த விஷயத்திலை அம்மாவுக்கு நான் தேங்க்ஸ் சொல்லியாகணும்."

"எதுக்கு?"

"அவதானே வேவு பார்க்க சித்தப்பாவை அனுப்பி வெச்சது."

"சரி. டாக்டர் சொல்ற அட்வைஸ்படி நடந்துக்க. உன்னை நேர்ல பார்க்க சந்தர்ப்பம் அமைச்சிக் கொடு."

"சரி."

"இப்போ உனக்கு உதவிக்கு இருக்கிற அம்மாவோட உதவி தேவை. அதனால அவங்ககிட்டே அனுசரணையா நடந்துக்கோ மது"

"அம்மா இல்லைன்னா ஒரு நர்ஸ் செய்துட்டுப் போறா!"

"எடக்குப் பேசாதே! உன் அம்மா எதிர்ப்பை இந்தச் சூழ்நிலைல காட்டாதே!"

"அப்புறம்?"

"டேக் கேர்! ஈவினிங் ஃபோன் செய்றேன்"

"ரைட்டு. தைரியமா இரு சந்துரு"

"அது நான் சொல்ல வேண்டிய வார்த்தை. வைச்சிடட்டுமா?"

"சரி..."

ரிசீவரை வைத்தாள் மதுமிதா. பெருமூச்சு விட்டாள்.

அறைக்கதவின் கீழ்ப்பகுதியில் அரை இஞ்ச் இடைவெளி இருந்தது. அந்த இடைவெளியில் அம்மாவின் புடவை லேசாகத் தெரிந்தது.

கதவிடுக்கில் காது வைத்து நான் என்ன பேசுகிறேன் என்று ஒட்டுக் கேட்டிருப்பாள். தெரியும். இதைவிட கேவலமாக வெல்லாம் நடந்து கொண்டிருக்கிறவள் தானே....

"பேசி முடிச்சிட்டியா? உள்ளே வரட்டுமா?"

கேட்டபடி உள்ளே வந்தாள் துர்க்கா.

"ஜூஸ் சாப்புடறியா?

"கொடும்மா"

துர்க்கா ஜூஸ் போட்டபடியே, "அப்படி என்ன ரகசியம்? யாரு அந்தச் சந்திரசேகர்? பேரு புதுசா இருக்கே..." என்றாள்.

"அவசியம் தெரிஞ்சுக்கணுமா?"

"ஒரு அம்மாவையே வெளில போகச் சொல்லிட்டு ஒருத்தனோட சிரிச்சுப் பேசறே! யாருன்னு கேக்கக்கூடாதா? அதுக்கு எனக்கு உரிமை இல்லையா?"

"இந்த இண்டஸ்ட்ரீல நான் யார் கிட்டே சிரிச்சுப் பேசலை? சிரிச்சுப் பேசணும்னு எனக்குக் கத்துக் கொடுத்ததே நீதானேம்மா?"

"காலொடிச்சுக்கிட்டு படுத்துக்கிட்டிருக்கறப்பவே உனக்கு எவ்வளவு திமிரு! இத பாரு மதுமிதா, இன்னைக்கு சினிமா உலகமே உன்னைத் தலைல தூக்கி வெச்சிக்கிட்டு கொண்டாடுதன்னா, அதுக்கு என்ன காரணம்னு யோசிச்சுப் பாரு!"

"என் அழகு! என் திறமை! என் உழைப்பு!"

"உன்னை அறிமுகப்படுத்தினது நான் தான். அதை மறந்துட்டுப் பேசறியே!"

"நான் கேட்டேனா? இல்லை கெஞ்சினேனா? என்னை நீ இதிலே திணிச்சே! உன் சௌகரியத்துக்காக செஞ்ச வேலை அது!"

"எல்லாத்தையும் குதர்க்கமா பார்க்கறதும், வெடுக் வெடுக்னு பேசறதும் உனக்குப் பழக்கமாப் போச்சு! முந்தியெல்லாம்

## பட்டுக்கோட்டை பிரபாகர்

வாயில்லாப் பூச்சியா, சாதுவா இருந்தே! இப்ப இப்படியெல்லாம் முரட்டுத்தனமா பேசறே! இப்படிப் பேச உனக்கு யாரு கத்துத் தந்தது? அந்தச் சந்திரசேகரா? யாரவன்? சொல்லுடி!"

மதுமிதா அமைதியாக இருந்தாள்.

"யாரும் எனக்கு எதுவும் கத்துக் கொடுக்க வேண்டியதில்லையம்மா. என் மனசுக்குள்ளேயே பேசிக்கிட்டிருந்தேன். இப்ப வெளிப்படையா பேச ஆரம்பிச்சிருக்கேன். அவ்வளவுதான் வித்தியாசம்."

"இந்தத் தைரியம் எப்படி புதுசா வந்திச்சு?"

"பலூன் சாதாரண ரப்பர் சமாச்சாரம் தான். ஊத ஊத பெருசாகும். ஒரு எல்லைக்கு மேல ஊதினா வெடிச்சுடும். இவ்வளவு நேரம் பேசாம இருந்த பலூன் இப்ப ஏன் வெடிக்குதுன்னு கேப்பியா? அப்பிடித்தான் மனசும். ஒரு எல்லை வரைக்கும்தான் அது பொறுமையா இருக்கும். அப்புறம் ஒரு 'கட்டத்தில் பொங்கத்தான் செய்யும்!"

"போதும்! நிறுத்துடி! நானும் பார்த்துக் கிட்டிருக்கேன். நீ பாட்டுக்கு பேசிக் கிட்டே போறியே என்ன? அந்த சந்திரசேகர் யாரு? இப்ப நீ சொல்லப் போறியா இல்லையா?"

மதுமிதா கண்களை மூடிக் கொண்டாள்.

"உன்னைத் தாண்டி கேக்கறேன்?"

"எனக்குத் தூக்கம் வருதும்மா"

"பதில் சொல்லிட்டுத் தூங்கு!"

மதுமிதா தன் கைக்கருகில் இருந்த அழைப்பு மணி பித்தானை அழுத்தினாள். வினாடிகளில் ஒரு நர்ஸ் வேகமாக உள்ளே வந்தாள்.

"சிஸ்டர்! எனக்கு ஆபரேஷன் செஞ்ச டாக்டரை நான் உடனடியாகப் பார்க்கணும். ப்ளீஸ்... உடனே வரச் சொல்லுங்க."

"உங்களுக்கு என்ன பிரச்சனை? எங்கிட்டே சொல்லுங்க மேடம்!"

"நான் தொடர்ந்து இங்க சிகிச்சை செய்துக்கணுமா இல்லை... வேணாமான்னு பிரச்சனை நீங்க வரச் சொல்லுங்க, ப்ளீஸ்"

"யெஸ் மேடம்"

நர்ஸ் வெளியேறினாள். துர்க்கா,

"இப்ப எதுக்குடி டாக்டரைக் கூப்புடறே? அவர்தான் ஈவினிங் வந்து பார்க்கறேன்னு சொன்னாரே... உனக்கு என்ன ட்ரீட்மெண்ட் கொடுத்திருக்காங்கன்னுதான் நான் விளக்கமா சொன்னேனே..." என்றாள்.

டாக்டர் தாமஸ் உள்ளே வந்தார்.

"யெஸ் மேடம்... வாட்ஸ் யுவர் ப்ராப்ளம்"

"உங்ககிட்ட கொஞ்சம் பர்சனலா பேசணும் டாக்டர்"

"அம்மா, நீங்க கொஞ்சம் வெளில இருங்க. சிஸ்டர், நீங்களும் வெளிய இருங்க" என்றார் டாக்டர்.

துர்க்கா தயங்கியபடி வெளியே சென்றாள்.

"எனக்கு என்ன ட்ரீட்மெண்ட் கொடுத்திருக்கீங்க டாக்டர்?"

தாமஸ் விளக்கமாகச் சொன்னார்

"இருபது நாளைக்கு அப்புறம் என் கால் பரிபூரணமா குணமாயிடும் இல்லையா? நடக்கறதில, ஓடறதில, டான்ஸ் ஆடறதில எந்தப் பிரச்சனையும் இருக்காதே!?"

"எதுவும் இருக்காது. யு வில் பீ கம்ப்ளீட்லி ஆல்ரைட். ஆனா, இந்த இருபது நாளும் நீங்க இங்க முழு ஓய்வுல இருக்கணும்."

"டாக்டர் என்னை இங்கே கவனிச்சுக்கறதுக்கு ஸ்பெஷலா ஒரு நர்ஸ் ஏற்பாடு செஞ்சிடுங்க. எங்கம்மா என்கூட இருக்கறதை நான் விரும்பலை. விளக்கம் கேக்காதீங்க. சம் பர்சனல் ப்ராப்ளம். நீங்க ஏதாவது காரணம் சொல்லி அவங்களை வீட்டுக்கு அனுப்பி வெச்சிடுங்க ப்ளீஸ்..." என்றாள் மதுமிதா.

டாக்டர் தாமஸ் அவளை ஆச்சரியமாகப் பார்த்தார். **(தொடரும்)**



### யார் இந்தக் குழந்தை

இந்தியில் பிரபலமாக இருந்த இவர், இரண்டு தமிழ்ப் படங்களில் நடித்துள்ளார். அந்தப் படங்களில் ஒன்றில் பிரபுவோடு 'டூயட்' பாடியுள்ளார். கண்டுபிடிக்க முடியாதவர்கள் பக்கம் 18ற்குச் செல்லவும்.

## அனுபவம் புதுமை

### கவியரசு கண்ணதாசன்

# அதன் பெயர் இலட்சியம்

**முத்தெடுக்க வேண்டுமானால் கடலில் மூழ்கியாக வேண்டும். வெற்றிபெற வேண்டுமானால் கஷ்டங்களை சகித்து போராடியாகவேண்டும். கவியரசுவின் கருத்துச் சுரங்கத்தில் இருந்து எடுத்துத் தரப்படுகிறது.**

அலைகடலில் அந்தக் கப்பல் மிதந்து கொண்டிருந்தது. ஆறு மாத காலமாகவே அது மிதந்து கொண்டு தான் இருக்கிறது.

கருங்கடலில் இருப்பதாகக் குறிப்பிட்ட ஒரு தீவைக் கண்டு பிடிக்க அது போய்க் கொண்டிருந்தது.

அந்தத் தீவு மட்டும் கண்டு பிடிக்கப் பட்டுவிட்டால், அந்தக் கப்பலில் பயணம் செய்த இருநூறு பேருக்கும் வளமான ஒரு நாடே கிடைத்து விட்டதாக அர்த்தம்.

கப்பல் தலைவன் கெட்டிக்காரன்; நம்பிக்கைக்குரியவன்.

அப்படி ஒரு தீவு இருப்பதை அறிந்தே அவன் பயணம் தொடங்கியிருந்தான்.

வாழ வழி இல்லாதவர்கள் இருநூறு பேருக்கு, வளமான வாழ்வை உருவாக்குவதே அவன் திட்டம்.

அதற்கென அவன் குறித்த இலக்கே அந்தத் தீவு.

பலவகைக் கடல்களையும் தாண்டிக் கப்பல் போய்க் கொண்டிருந்தது.

கடல் கொந்தளிப்பினாலும், பருவக் கோளாறினாலும், 'மூன்று மாதங்களில் அடையலாம்' என்ற கணக்குத் தவறி விட்டது; ஆறு மாதங்கள் ஓடிவிட்டன.

தேவைக்கெனச் சேமித்து வைத்திருந்த உணவுப் பொருட்களும், வசதிகளும் வெகுவாகக் குறையத் தொடங்கின. ஒரு நாள் அவை அறவே இல்லாமற் போய் விட்டன.

கப்பல் தலைவனோ பசியையும், தூக்கத்தையும் பொருட்படுத்தாமல் சுக்கானைப் பிடித்தபடி இருந்தான்.

பயணம் செய்தவர்களுக்குப் பசி எடுக்க ஆரம்பித்தது.

"எப்படியும் நாம் அந்தத் தீவை அடைந்துவிடுவோம்," என்று தலைவன் ஆறுதல் சொன்னான்.



அந்த ஆறுதலால் அவர்கள் பசி அடங்கவில்லை.

"எங்களுக்குப் பசிக்கிறது! பசிக்கிறது!" என்று அவர்கள் சத்தமிட்டார்கள்.

"நாம் விரைவில் அந்தத் தீவை அடைந்துவிடுவோம்; அங்கே காய்களும், கனிகளும் கேட்பாரின்றிக் குவிந்து கிடக்கின்றன. பசிக் கொடுமையைக் கொஞ்சம் பொறுத்துக்கொள்ளுங்கள். கடலில் நிறைய மீன்கள் கிடைக்கின்றன. குறிப்பிட்ட இலக்கை அடையும் வரை அந்த மீன்களை மட்டுமே உணவாகக் கொண்டு நாம் வாழ்ந்துவிட முடியும். நிரந்தர இன்பத்துக்காகத் தற்காலிகத் துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளுங்கள். நாம் ஒரு இலட்சியத்தை நோக்கிப் பயணம் செய்கிறோம் என்பதை மட்டும் மறந்துவிடாதீர்கள். சோதனைகளைக் கட்டுப்பாட்டோடு சகித்துக் கொள்வதன் மூலம்தான் ஒளிமயமான எதிர்காலத்தை நாம் பெற முடியும்.

உழுகின்ற காலத்தில் அரைவயிறுதான் கிடைக்கும்; சமயங்களில் கிடைக்காமலும் போகும். அறுவடைக்குப் பின் அற்புதமான சாப்பாடு கிடைக்கும். நாம் நமது இலட்சியத்தை அடைகிற வரையில் தயவு செய்து பொறுமையாக இருங்கள்!"

–தலைவன் எவ்வளவோ கெஞ்சினான்.

ஆனால், அவர்களோ வெறும் மீனை மட்டும் சாப்பிட்டுக் கொண்டிருக்கத் தயாராயில்லை.

"எங்களுக்கு இந்த உணவு அலுத்துப் போய்விட்டது. வேறு வகை உணவு வேண்டும்!" என்று கத்தினார்கள்.

அவர்கள் பொறுமையோடு இருக்கச் சக்தி அற்றவர்களானார்கள்.

எல்லாருமாகச் சேர்ந்து கப்பல் தலைவனை உதைத்தார்கள்: அடி தாங்காமல் அவன் மரணம் அடைந்தான்.

கப்பல் திக்குமுக்காடித் திசை தடுமாறி ஓடத் தொடங்கிற்று.

பயணம் செய்தவர்களுக்குப் பசியை உணரத் தெரிந்ததே தவிர, கப்பலை ஓட்டத் தெரியவில்லை.

சூறாவளியில் சிக்கிக் கப்பல் மூழ்கத் தொடங்கிற்று.

அவர்கள் தங்கள் தலைவனை எண்ணி அழத் தொடங்கினார்கள்.

என்ன செய்வது; அவன் இனி வர மாட்டான்!

கப்பல் மூழ்கிவிட்டது; இனி அவர்களுக்குப் பசியே எடுக்காது.

நம்பிக்கை வைத்து ஒருவனைப் பின் தொடரும்போது நீ அவசரக்காரனாக இருந்தால் அதுவரையில் பட்ட கஷ்டம் வீணாகிவிடும்.

ஒட்டகத்தில் ஏறியவன் ஊர் போய்ச் சேரும்வரை அதைக் கொன்றுவிடக் கூடாது.

குறிப்பிட்ட இலக்கை அடையும் வரையில் கொடுமைகளைத் தாங்கிக் கொள்வதே வெற்றிக்கு வழி.

**இந்தியாவில் தெலுங்கானா போராட்ட காலத்தில் எழுதப்பட்ட கதை இது! போராட்டம் என்பது மாலை விருந்தல்ல! சோதனைகளைக் கண்டு தளராது போராடும் மக்களால் படைக்கப்படுவது.**

# கவண் கற்கள்



**பி.துர்காபிரசாத்ராவ்**

கிழக்கு வானில் எட்டிப் பார்த்தது பிறை நிலா. துவாதசி இராத்திரியின் மூன்றாம் ஜாமம். ஊசியாய்க்குத்தும் குளிர். கடும் நிசப்தம்.

ஊருக்கு வெளியே மலை உச்சியில் மரத்தடியில் தூங்கி விழுந்துகொண்டிருந்த வெங்கம்மா உலுக்கி விழுந்து எழுந்தாள். கண்களை கசக்கியபடி நாலாப்பக்கமும் பார்த்துவிட்டு, மறுபடி தூங்க ஆரம்பித்தாள். கிழிசல் கம்பளி குளிருக்குப் போதவில்லை.

எங்க ஊரைச் சுற்றியுள்ள கிராமங்களில் ஒருவார காலமாக மிலிட்டரி தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கிறது. எந்த நிமிடம் எங்க ஊருல வந்து விழுமோ, தெரியாது. மலையிலிருந்து மிலிட்டரி வருகையைக் கவனித்துச் சொல்ல வெங்கம்மாவை நியமித்திருந்தோம். ஒரு எருமைக் கொம்பு, கிர்ரென சுழலும் கவண், கூடை நிறைய கூழாங்கற்கள் அவளிடம் தயாராக இருந்தன. ஒரு வாரமாக தூக்கமில்லாததால் கண்கள் சிவப்பேறி இமைச்சிப்பிகள் மூடி மூடித் திறந்தன.

திடீரென்று ஏதோ சலசலப்பு கேட்டு தூக்கி வாரிப்போட கண்திறந்து பார்த்தாள் வெங்கம்மா. மலையடிவாரத்தில் யாரோ பதுங்கிப் பதுங்கி ஊரை நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள். மிலிட்டரி போலிருக்கிறதே...? ஆமாம்; கொம்பெடுத்து 'பூம்...பூம்... பூம்' என ஊத ஆரம்பித்தாள். வயற்புறத்தில் ஒளிந்திருந்த வாலண்டியர் படை விழித்தெழுந்தது. கிராமம் அல்லோலகல்லோலப் பட்டுக் கொண்டிருந்தது. ஆயிரத்துக்கு மேற்பட்ட மிலிட்டரிக்காரர்கள் கிராமத்தை முற்றுகையிட்டார்கள். துப்பாக்கிகளின் வெடிச்சத்தத்தால் ஆகாயத்தில் ஆயிரக்கணக்கில்-இலட்சக் கணக்கில் துளைகள் விழுந்து விடும் போலிருந்தது. வெங்கம்மா கொம்பு ஊதிக் கொண்டே இருந்தாள். கிராமங்களிலிருந்து வாலண்டியர் படைகள் தடதடவென ஓடி வந்தன. மிலிட்டரிக்காரர்களின் டார்ச்லைட்டுகள் கொம்பு ஊதும் வெங்கம்மாவுக்காக மலை முழுக்க ஒளிக்கதிர்கள் வீசிதேடிக் கொண்டிருந்தன. பெரிய பாறைக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு, விடாது ஊதினாள் வெங்கம்மா.

"ஆந்திரமகா சபைக்கு...ஜே....!"

பெரிய மக்கள் சமுத்திரம் மிலிட்டரி மீது பாய்ந்தது. வெங்கம்மா கொம்பு ஊதுவதைவிட்டு மடிநிறைய கற்களும் கையில் கவணும் எடுத்துக்கொண்டு விறுவிறுவென மலையைவிட்டு இறங்கினாள். பாதையில் அழுத்தமாய் காலூன்றி கல்மழை பொழியலானாள். விர்ரென அம்பாய்ப் பாய்ந்த கற்கள் மிலிட்டரிக்காரர்களின் தலைகளைத் துளைத்தன. கற்களின் உக்கிரத்துக்கு முன் துப்பாக்கி குண்டுகள் தாக்குப்பிடிக்க முடியவில்லை.

வீதிகளில் இலக்கின்றி சுட ஆரம்பித்தார்கள் சிப்பாய்கள். ஜனங்கள் வீட்டின் பக்கத்திலும் வயற்புறங்களிலும் ஒளிந்தபடி கவண் கற்கள் வீசினார்கள். துப்பாக்கிகள் குறி தவறலாயிற்று. 'மிஷின்கன்' பிரயோகிக்குமாறு உத்தரவிட்டான் சார்ஜெண்ட். மலையடி வாரத்தினின்று சோளக்கொல்லையை அடைந்தாள் வெங்கம்மா.

துப்பாக்கிவீச்சுக்குப் பலியான சோளக் கதிர்கள் பொல பொலவென கீழே உதிர்ந்தன.

மெல்ல மெல்ல முன்னேறிக்கொண்டிருந்தவள் சட்டென நின்றாள்.

"யாரது?"

"நான்தான் வெங்கம்மா... ராகவய்யா..." கிசுகிசுப்பாய்ச் சொன்னார் ஆந்திர மகா சபையின் கிராமக்கமிட்டித் தலைவர்.

"அய்யா... நீங்க அவங்க கைல சிக்கிட்டா... அவ்வளவுதான்... நம்ம கஷ்டமெல்லாம் வீணாயிடும். மெல்ல மலையைத் தாண்டிடுங்க."

"அப்ப நீ...?"

"நான் ஊருக்குள்ள போறேன்..."

"ஐயோ.... வேணாம்... பாம்கூட வீசிட்டிருக்காங்க...."

"ஊர்ல பொம்பளைங்க என்னானாங்களோ?"

"எனக்கென்னவோ நீ ஊருக்குள்ளே போறது சரியாப்படல!"

"சரி...போகல..." ராகவய்யாவைத் தாண்டிச் சென்ற வெங்கம்மா, ஊர் எல்லையில் மறைவாய் நின்று கவண் கற்கள் வீசலானாள்.

"ஐயோ...அம்மா...!" திடீரென்று அலறியபடி கீழே சாய்ந்தாள். வலது கணுக்காலை துப்பாக்கி குண்டுபதம் பார்த்திருந்தது. வலியால் முனகியபடி எட்டிப் பார்த்தாள். நான்கு மிலிட்டரிக்காரர்கள்....

"யாருடீ நீ...?" சார்ஜெண்ட் உறும... அவள் மௌனமாய் இருந்தாள்.

"ஆந்திர சங்கத்தைச் சேர்ந்தவடா...!" இன்னொருவன் கூற...

"உங்க ராகவய்யா எங்க ஒளிஞ்சிருக்கான்?"

"......."

"உன்னைத் தாண்டி.... கேக்கறது; காதுல விழல... சொல்லுடி முண்டம்...!"

"தெரியாது...."

"தெரியாது...! அவன் இந்தப் பக்கமா வரல?"

"இல்லியே...?"

"நல்லதனமா கேட்டா சொல்லமாட்டே நீ..." ஒரு சிப்பாய் அவளைக் கீழே தள்ளினான்.

"டேய்... இங்க வேணாம்டா. கெரில்லாக் காரங்க வருவாங்க...!"

"சரி.. தூக்கி கார்ல போட்டுட்டுப் போவோம்..."

கணுக்காலினின்று வழிந்த இரத்தத்தில் நனைந்து போனாள் வெங்கம்மா. அவர்கள் கார் நகர்ந்தது.

பொழுது விடிந்துகொண்டிருந்தது. இன்னும் முழு வெளிச்சம் வரவில்லை. ஒரு பனைமரத்தின் கீழ் நின்றது கார். வெங்கம்மாவை இழுத்து கீழே தள்ளினார்கள். இரத்தம் வடிந்து கொண்டிருந்த இடத்தை உள்ளங்கையை வைத்து அழுத்திக் கொண்டாள்.

"ஏய்... மரியாதையா சொல்லிடு. அந்த ராகவய்யா எங்க?"

"......."

"சொல்லுடி...."

"மிலிட்டரி அட்டூழியம்... ஒழிக...!" கோஷமிட்டாள் வெங்கம்மா. ஆத்திரமடைந்த மிலிட்டரிக்காரர்கள் வெறி பிடித்தாற்போல் அவள் மீது பாய்ந்து அழுத்திப் பிடித்துக் கொண்டார்கள்.

"எதுக்கு அநியாயமா சாவப்பாக்கற...? அவன் எங்கன்னு சொல்லிடு....!"

"எங்க சங்கத்துக்காகத்தான் சாகப் போறேன்...!"

"செத்தாலும் சாவ தவிர சொல்ல மாட்ட...?"

"எனக்கு தெரிஞ்சாத்தானே?"

அவள் சேலையைப் பிடித்திழுத்தான் சார்ஜெண்ட்.

"அம்மா.. ஐயோ....!" ஓலமிட்டாள் வெங்கம்மா. சார்ஜெண்டின் கத்தி அவள் வயிற்றில் இறங்கியது.

சரசரவென கல்மழைபொழிய அவளை விட்டுவிட்டு மிலிட்டரிக்காரர்கள் தலை தெறிக்க ஓட்டம் பிடித்தார்கள். அவள் காலிலிருந்து வழிந்த இரத்தக்கோட்டைத் தடயமாய்க் கொண்டு அவ்வழியே வந்த நாற்பது வாலண்டியர்கள் சுற்று முற்றும் தேடினார்கள்.

"ஆந்திர மகா சபைக்கு... ஜே....!" பெரிதாய்க் கோஷமிட்டார்கள். வெங்கம்மா விழுந்துகிடப்பதைப் பார்த்த ராகவய்யா விசில் ஊத... வாலண்டியர்கள் ஓடி வந்தார்கள். வெங்கம்மா உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது.


"வெங்கம்மா..." அழுகை வெடிக்கும் குரலில் அழைத்தார் ராகவய்யா.

"ஆந்திர மகாசபைக்கு..." வெங்கம்மா ஈனஸ்வரத்தில் கூற... "ஜே" என்றார்கள் மற்றவர்கள்.

சில்லிட்டிருந்த அவள் உடல்மீது அவர்கள் வெப்பமான கண்ணீர்த்துளிகள் மலர்களாய் விழுந்தன.

**('கெலுபு மனதே' (வெற்றி நமதே) எனும் சிறுகதை தொகுப்பிலிருந்து. கதைக் காலம்–1947)** ■

# சூனியம்



**கனகசபை தேவகடாட்சம்**

"கலவை-கலவை... கொஞ்சம் கெதியாக வரட்டும்!"

தன்னை அறியாமல் மேசன் யோகனினால் வெளிவந்த வார்த்தைகள் சற்று சூடாக இருந்ததை எண்ணி அவனே தன் மனதிற்குள் நொந்து கொண்டான்.

'நோன்பின் வாட்டத்தை பிறர் காணக் கூடாது' என்று எண்ணிக்கொண்ட நிசார் தன்னை இயலுமானவரை நிதானப்படுத்தியவாறு அந்தக் கனமான சீமெந்து வாளியை முக்கிச் சுமந்து கொண்டு மேசனை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

யோகனால் என்ன செய்ய முடியும்? இன்னும் ஒருவாரகால எல்லைக்குள் கட்டடப் பணிகள் முடிக்கப்பட வேண்டுமென கட்டளையிட்ட ஒப்பந்தக்காரனின் குரல் அவனை வேகப்படுத்தியிருந்தது.

நிசாரும், யோகனும், பக்கத்துப் பக்கக் கிராமத்தவர்களோடு மட்டும் அல்ல, ஒரே பள்ளித் தோழர்களும்கூட.

காலத்தின் கோர நிலை இருவரையும் கல்வியை தொடர விடாது, வேறு வழியின்றி குடும்ப வலையில் தள்ளிவிட்டது.

இடம் பெயர்ந்து வாழும் இவர்கள்- புதிய தோழனாகிய 'வறுமை'யையும் இணைத்துக்கொண்டு தற்போது வாழ்பவர்கள்.

"அவசரப்படாதே நிசார்! ஆறுதலாக வா! கலவை கிடக்கு."

தன்னை அறியாது நோன்பைப்பற்றி சிந்தியாமல் கத்தியதையிட்டு மன்னிக்கும் பாவனையில் ஆசுவாசமாக கூறினான் மேசன் யோகன்.

அவன் நிழல், அவனில் இருந்து சாய்ந்த போதும் யோகனுக்கு மதிய போசனம் நினைவில் இல்லை. இருப்பினும் 'பாங்கு' ஒலி அவனின் பசிக்கு தூது அனுப்பியது. அந்த அளவு வேலைச்சுமை, நேரத்தை மறைத்திருந்தது.

"நிசார்! எந்தக் கடையில சாப்பாடு எடுப்பம்?" சேட் பொத்தான்களை பூட்டிக் கொண்டே கேட்டான் மேசன் யோகன்.

பதிலுக்கு நிசார் உதிர்த்த புன்னகையில் இருந்து புரிந்து கொண்ட யோகன், தன் அறியாமையை எண்ணியவாறு மெதுவாக பொத்தான்களை விடுவித்து சேட்டைக் கழட்டி பழைய இடத்தில் தொங்கவிட்டான்.

"என்ன யோசனை சாப்பிடப் போகல்லயா?" நிசாரின் கேள்வியை சட்டை செய்யாது யோகன், "நீ சாப்பிடாம, எனக்கென்ன சாப்பாடு? என்னை தெண்டிக்காதே!" என்றவாறு அருகே அமர்ந்தான்.

"இன்றைய நோன்பின் பலன் உனக்கு அதிகமாய்க் கிடைக்கும். உன்ர தூஆ (வேண்டுதல்) வையும் இறைவன் கேட்பார்!" குரல் தளுதளுக்க கூறி முடித்தான் நிசார்.

மெதுவாக நிசாரின் கைகளைப் பற்றிய யோகன், "அப்படி என்னதான் ஆண்டவனிட்ட பட்டினியா கிடந்து கேட்கப்போறாய்?"

"யோகன்! பெரிசா அதைத்தா... இதைத்தா எண்டு ஒண்டும் கேக்கல்ல! பழைய காலம் போல நீயும் நானும் ஒரே சைக்கிள்ல இரவு படம் பார்த்துவிட்டு, சென்ரியிலோ, செக் பொயின்டிலோ, மறிச்சு வைச்சு, அடையாள அட்டையை கேட்டு, நம்மள அந்நிய நாட்டுக்காரன்போல விசாரிக்காம, சுதந்திரமா, நம்பிக்கையாக, சந்தோசமாக, வீடு போய் சேருகின்ற காலம் வரணும் எண்டு மட்டும்தான் இந்த நோன்பு காலத்தில நான் கேட்கிற தூஆ!"

அனைத்தையும் ஆமோதித்ததற்கு அடையாளமாய் யோகனின் கண்களால் வெள்ளம் பெருகியது. அதோடு இணைந்த நிசாரின் கண்ணீரும் பெரு வெள்ளமாகி, ஒரு சூனியத்தை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறது. ●

**"....உன்னோட வடக்குமில்லாம, என்னோட தெற்குமில்லாம, இந்தச் சின்னத் தீவில.... நமக்கின்னு ஒரு கூடு கட்ட ஒரு இடம் இல்லாமப் போயிருமா.... கண்ணம்மா...!?"**

# வானவில்



**பாத்திமா ஸப்ரீனா**

சுதர்மா—

என் வெள்ளையாய் இருந்த இதயத்தை முழுசாய் கொள்ளையடித்தவள்! மழைத் தூறல் போட்டுக் கொண்டிருந்த ஒரு மந்தகாசப் பொழுதில்தான்... அந்தக் குவளை மலர்க் கண்களுக்குரியவளை முதன் முதலாய்ச் சந்தித்தேன். காக்கி உடைக்குள் வெகு கம்பீரமாய்த் தெரிந்தாள்.

எள்ளுப் பூ நாசியும்; எலுமிச்சைப் பழ நிறமும் கொண்ட அந்த இனிய தேவதையிடம் என்னை- என் வாழ்வை- என் எதிர்காலத்தை அடகு வைத்தேன்...!

"என்-
காக்கியுடைத் தேவதையே..!
உனக்கும் கனவுகள் இருக்குமா?......."

ஸ்நேகமாய்ச் சிரித்தாள் சுதர்மா.

"ஐடென்டி தியனவாத...?" (அடையாள அட்டை இருக்கா?)

எடுத்துத் திருப்பிப் பார்த்து மௌனமாய் அவள் புன்னகைக்கும் பொழுதிலே.... முழுதாய்..:

எனக்குள் வேர்விட்டு... விருட்சமாகி...... வியாபித்துக் கொண்டிருந்தாள்.! இந்த முப்பத்தைந்து வருட வாழ்க்கையில் கட்டிக் காத்த 'பிரம்மச்சரியம்' பொடிப் பொடியாய்ச் சிதறிவிட அங்கெல்லாம் 'வாழவேண்டும்'; சுதர்மா என்ற குருவியோடு சேர்ந்து கூடு கட்டிக் கொண்டு வெகு சுதந்திரமாய் சுற்றித் திரிய வேண்டும்..! என்ற வேள்வித் தீ கிளர்ந்து எழுந்து நெஞ்சுக் கூட்டைத் தகித்தது.

அலுவலகம் போகும் வேளைகளில், 'அந்தச் செக்பொய்ண்ட்' தாண்டும் போதெல்லாம் என் உயிர்வரைக்கும் குளிர் எடுக்கும். அவள்... பார்வையில் பன்னீர் புஷ்பங்கள் குடை விரிக்கும்.

இருவருக்கும் தெரிந்தது மௌனமொழி.

அந்த மௌனமே நமக்கொரு 'தாஜ்மஹாலை' நிர்மாணித்தது.

"... ராகுல்... இது சரி தானா...?"

பெரியதொரு ஆதங்கத்தோடு தினமும் என்னைக் கேட்பாள்.

"......என்னினிய சுவாசமே... பன்சலையும் கோயிலும் மசூதியும் வக்கிரத்தையும்....வன்மத்தையும் போதிப்பதில்லையடி.... இரத்த வாடை வீசிவரும் இந்தத்... தென்றலில் நம் தூய ஸ்நேகத்தைப் பூச முனைவது பிழை என்றா சொல்கிறாய்...?" நான் அவளைக் கேட்பேன். ஆதரவாய் அவள் தோளில் சரிந்து, சிரிப்புக்களைச் சேமிப்பேன்.

நெஞ்சுக்குள் வளர்ந்து, வானளாவப் படர்ந்து கொண்டிருக்கும் அன்பை மறைத்து வைப்பதில் தான் எத்தனை எத்தனை பாடு பட்டோம்.

கடவுளே...! கத்தி முனையில் நடக்கும் வித்தை மாதிரி..!

"இன்னும் கொஞ்ச நாளில் சண்டை ஓஞ்சிடும் ராகுல்...."

"ம்.... ஓஞ்சிட வேணும் கண்ணம்மா....!"

"அப்புறம் நம்ம வாழ்க்கைய... எங்கையாவது ஒரு ஊர்ல தொடங்கணும்.... இல்லையா?" அவளின் விழிகளில் அதீதமான ஒளி..... சுடர்விட்டுப் பிரகாசிக்கும்...

"......" நான் மௌனிப்பேன்....

"ராகுல்... இந்தச் சின்னத் தீவில நமக்கு ஒதுங்க இடம் கிடைக்காதின்னா நெனக்கிறே....?" ஆவலோடு என் கண்களுக்குள் தேடுவாள்.

"சுதர்மா என் கண்ணே! என்னோட வடக்குமில்லாம, ஒன்னோட தெற்குமில்லாம.... எங்கையாச்சும் நம்ம கூட்டை கட்டிக் கொள்ளலாமே!" சுருண்ட குழல்கள் சரிய நம்பிக்கையாய்ச் சிரிப்பாள் அவள்!

எங்கள் சின்ன இதயங்களில் எத்தனை எத்தனை நம்பிக்கை நட்சத்திரங்கள்!

★ ★ ★

"இன்று இரவு புறப்படுற படை நகர்வுல என்னை இணையச் சொல்லி உத்தரவு வந்திருக்கு ராகுல்.... ரண்டு கிழமைல மீண்டும்.... இங்கு வருவேன்.... காத்திருப்பாயா?"

"சுதர்மா.... என் ஆயுள் உனக்காகத் தான்... காத்திருக்கு..!"

"நிஷாந்த்... கிட்ட என்னைப் பற்றின தகவல்களை அப்பப்ப அனுப்பி வைப்பேன்... மறக்காம இடையில வந்து விசாரிச்சுப் போ... மறப்பாயா.....?"

"......."

இரவு முழுவதும் சூனியம் என்னை அழுத்திற்று. வெட்ட வெளியான பாலை நிலத்தில் நான் மட்டும் தன்னந்தனியனாய்.... தவிப்பது மாதிரியான பிரமை!

'பிள்ளையாரப்பா...

அவளோடு மாலை மாற்றிக் கொண்டு; உனக்கு நூறு தேங்காய்.... உடைப்பேன்...'

★★

பாலசூர்யன் கடமைக்கு வந்திருந்தான். செக்பொய்ண்ட் தாண்டுகையில் நிஷாந்த் நின்றிருந்தான்... முகத்தில் 'சவக்களை....' முகாமிட்டிருந்தது.

".......சுதர்மா..... ரெட் க்ரொஸ்...ல.... காத்திட்டிரு......"


அவன் முடிக்க முன்னரே நான் ரெட் க்ரொஸ் அலுவலகத்துக்கு.... ஓடினேன்.

சுதர்மா-தயாராகிக் கொண்டிருந்தாள் தன் பிறந்த ஊருக்கு....

புறப்படுவதற்கு- வெள்ளைப் பார்சலாய்....!!!

நான்- மரணித்துக் கொண்டிருந்தேன். ▫

# அம்மா அறிவது...



**ஜ.லக்ஷ்மி பாரதி**

அன்புள்ள 'அம்மாவிற்கு ஆனந்த் எழுதிக் கொள்வது என்னவென்றால், நான் நலமாக ஊர் வந்து சேர்ந்தேன். விரைவிலேயே வேலையும் கிடைத்துவிடும். கிடைத்தவுடன் லெட்டர் போடுகிறேன்.

**இப்படிக்கு உன் அன்பு மகன்**
**ஆனந்த்.**

கடிதம் கண்டவுடன் தாய் மரகதத்திற்கு மகிழ்ச்சி.

அன்புள்ள அம்மாவிற்கு

ஆனந்த் எழுதுவது என்ன வென்றால், இங்கு நான் நலம். அம்மா! வாயில் சர்க்கரையைப் போட்டுக் கொள். எனக்கு வேலை கிடைத்துவிட்டது. நண்பன் சங்கர் உதவியால் நல்ல கம்பெனியில் எனக்கு வேலை கிடைத்துள்ளது. சம்பளம் வாங்கியவுடன் உன் பெயருக்கு மாதா மாதம் அனுப்பி வைக்கிறேன்.

**இப்படிக்கு உன் அன்பு மகன்**
**ஆனந்த்.**

கடிதம் பார்த்தவுடன் அம்மா மரகதத்திற்கு பூரிப்பு.

அன்புள்ள அம்மாவிற்கு, ஆனந்த் எழுதுவது என்னவென்றால், இங்கு நான் நலம் அம்மா! என்னை மன்னித்துவிடு. இம்மாதச் சம்பளம் உனக்கு அனுப்ப முடியவில்லை. ஏனென்றால் இம்மாதம் ரூம் வாடகைக்கும், சாப்பாட்டிற்கும், இரண்டு ட்ரெஸ் எடுக்கவும் சரியாகப் போய்விட்டது. ஆதலால் அடுத்த மாதச் சம்பளத்தை அனுப்பி வைக்கிறேன்.

**இப்படிக்கு உன் அன்பு மகன்**
**ஆனந்த்.**

'இறைவா ஏம்புள்ள நல்லா இருந்தாப் போதும்!' பெருமூச்சு விட்டாள் அம்மா!


அன்புள்ள அம்மாவிற்கு, ஆனந்த் எழுதுவது என்னவென்றால், இங்கு நாங்கள் நலம். அம்மா! இம்முறை என்னை இருமுறை மன்னித்துவிடு. ஒன்று இம்மாதச் சம்பளம் சாப்பாடு, சினிமா, பூ இவற்றிற்கே போதவில்லை. ஆதலால் உனக்கு அனுப்பமுடியவில்லை. இன்னொன்று என் ஆபீஸில் வேலை செய்யும் லதாவை நான் மேரேஜ் செய்து கொண்டேன். ஆதலால்....

அதற்கு மேல் அம்மா படிக்கவில்லை. அழுவதா? சிரிப்பதா? அந்த அப்பாவி அம்மாவிற்குப் புரியவில்லை.

அன்புள்ள அம்மாவிற்கு, ஆனந்த் எழுதுவது என்னவென்றால், இங்கு நாங்கள் நலம் அம்மா! சர்க்கரையை வாயில் போட்டுக் கொள். நீ பாட்டியாகப் போகிறாய். ஆமாம்மா..... லதா இப்பொழுது மூன்று மாதம்.

**இப்படிக்கு உன் அன்பு மகன்**
**ஆனந்த்.**

அம்மாவிற்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. குழந்தை நன்றாகப் பிறந்தால் தான் மொட்டை போடுவதாக ஏழு மலையானுக்கு வேண்டிக் கொண்டாள், அந்த முகம் தெரியாத குழந்தைக்காக தன் மகனின் முகவரி தெரியாத, அந்த அன்புத் தாய். ▫



## மக்களே போல் இருப்பர்

“எலும்புத் துண்டுகளை
எடுத்து வீசினால்
முதுகெலும்பில்லாதவர்கள்
கவ்விக் கொண்டு போவர்!”

மன்னன்
இறுமாப்புடன் உரைத்தான்!

“நீறு பூத்த நெருப்பு,
புற்றுக்குள்
இருக்கும் பாம்பு!”

“யாரைச் சொல்கிறாய்?”
வேந்தன் புருவம் உயர்ந்தது!

“மக்களின்
உணர்வைச் சொல்கிறேன்!

“துஞ்சும் மான்களல்ல
தூங்கும் புலிகள்
என்கிறாய்?”

“ஆம்! வேந்தே!
கவரிமான்கள்!”

“கவரிமான்களையும்
தூங்கவைக்கலாம் தெரியுமா?”

“எப்படி மன்னா?
நாங்கள்
தாலாட்டுப் பாடினால்கூட
மக்கள்
சந்தேகத்தோடுதானே
பார்க்கிறார்கள்!”

வேந்தன்
விழிகளை மூடிச் சிந்தித்தான்!

தேவகுமாரனையும்
வெள்ளிக் காசுக்காக
விலைபேசிய உலகம் இது!

சீசரையும்
முதுகில் குத்திய
மனிதன் பிறந்த பூமி இது!

கட்டப் பொம்மன்
பிறந்ததும் இப் பூமியில்,
காட்டிக்கொடுக்க
எட்டப்பன்
பிறந்ததும் இப் பூமியில்!

கவரி மான்களும்
இங்கே உண்டு!
தேவைக்கு ஏற்ப
நிறம்மாறிக் கொள்ளும்
பச்சோந்திகளும்
இங்கே உண்டு!

சகல ஜீவராசிகளுக்குள்ளும்
சுயநல ஜீவராசிகள்
இருக்கவே செய்கின்றன!

எல்லாக் கனிகளுமே
புசிக்கக் கூடியவை அல்ல!
புசித்தாரை புசிக்கும்
விஷக் கனிகளும் உண்டு!

காலம் மாறலாம்
உருவங்கள் மாறலாம்!
ஆனால்-
யூதாசுகளும்
புரூட்டசுகளும்
எட்டப்பன்களும்
வேறு வேறு ரூபத்தில்
விளைந்து கொண்டேயிருப்பர்!

அவர்களை கண்டுபிடித்தால்
மட்டும் போதும்!
கொதிக்கின்ற மக்களை
அவர்களைக் கொண்டே
குளிர்வித்து விடலாம்!

எலும்புத் துண்டுகளையும்
அவர்களிடமே-
மொத்தமாக கொடுத்துவிடலாம்!
மக்களிடம்
பங்கிட்டுக் கொடுப்பார்கள்!

விஷக் கனிகளையும்
அவர்களிடமே கொடுக்கலாம்!
மக்களுக்கு ஆசை காட்டி
புசிக்கக் கொடுப்பார்கள்!

நஞ்சூட்டப்பட்ட
நீரைத் திறந்துவிடலாம்!
தாகம் தீர்க்கும்
அமுத சுனையென்று
அவர்களே
மக்களை அழைத்து வருவர்!

தாழம்பூவுக்குள்
நாகம் இருக்கும்
புற்களுக்குள்
புழு நெளியும்!

மக்களுக்குள்
கயவர் இருப்பர்!

மன்னன்
சித்தம் தெளிந்தான்!

தளபதிக்கு
உத்தரவு வீசினான்.

“மரக்கிளைதானே
மரத்தைத் தறிக்கும்
கோடாரிக்கு காம்பாகிறது!”

“ஆம்!
அதிலென்ன சந்தேகம்?”

“மக்களிடமே
மக்களை அழிக்கும்
சக்திகள் உள்ளன!
கண்டுபிடி!
சிண்டு முடி!

தளபதிக்கு
நம்ப முடியவில்லை!

“வீரம் விளைந்த பூமியில்
வீணர் விளைவதுண்டோ?”

மன்னன்
விழிகள் உருட்டி நகைத்தான்!

“ஏசு பிறந்ததும்
பூமியிலேதான்.
யூதாஸ் பிறந்ததும்
பூமியிலேதான்!”

“புரிகிறது,
ஆண்டவன் மனிதர்களையும்
படைத்திருக்கிறான்.
மனிதர்களுக்குள்
கயவர்களையும்
படைத்திருக்கிறான்!”

“சபாஷ் தளபதியாரே!
கயவர்களை
எப்படிக் கண்டுபிடிப்பீர்?”

தளபதி
தாமதியாமல் உரைத்தான்;

“வெள்ளிக்காசுகளுக்குள்
செல்லாக் காசுகளை
தெரிந்தெடுப்பதா கடினம்?!

ஐந்து விரலுக்குள்
அசிங்கமான விரலை
கண்டுபிடிப்பதா கஷ்டம்?”

மன்னன் தலை
மலுப்பாய் அசைந்தது.

“ஐந்து விரலும்
ஒன்று போல் இருப்பதில்லை.
ஆறறிவு மனிதரிடையே
கயவரும்
உருவத்தால் ஒத்திருப்பர்,

## இலக்கிய நயம்

அதனால்-வேறுபாடு
அறிவதுதான் கடினம்!”

தளபதிக்கு
ஒரு சந்தேகம் வந்தது!

மக்கள்
நிமிர்ந்திருப்பர் துணிவாக!
கயவர்
குனிந்திருப்பரோ குனிவாக?”

மன்னன்
மறுபடி மறுத்தான்.

“மக்களைவிட
துணிந்தது போலவும் நடிப்பர்.”

“பண்பின்
இருப்பிடம் மக்கள்!
பண்பின்
மறுப்பிடம்தானே கயவர்?”

“பண்பின் நிறைகுடமாய்
நடிக்கவும் வல்லார் கயவர்!”

தளபதி
வெறுத்துப் போனான்.

“அப்படியானால்
எப்படித்தான் மன்னா

## தருவது ரசிகன்

கண்டுபிடிப்பது?”

மன்னன் கூறினான்
வழி!

மக்களுடன்
உருவத்தால் ஒத்திருப்பர்
உள்ளத்தால் ஒத்திரார்
அதனால், குணத்தாலே
கண்டுபிடி!”

“கயவர் குணத்தில்
ஒன்று கூறுக மன்னா?”

“துன்பம் சூழ்கையில்
எதிர் நிற்க மாட்டார்கள்
தங்களையே விற்றும்
தம் நலம் காப்பார்கள்!”

தளபதிக்கு புரிந்துவிட்டது.
தங்களையே விற்பவர்க்கு
தம் மக்களை
விற்பதோ கடினம்?
கண்டு பிடிக்கிறேன்
சிண்டு முடிகிறேன்”
புறப்பட்டான் தளபதி.

மன்னன் கூறிய
கயவர் குணம்
திருக்குறளிலே இருக்கிறது.

“எற்றிற் குரியர் கயவரென்று
உற்றக்கால்
விற்றற்கு உரியர் விரைந்து”
குறள்- 1080, அதிகாரம்- 108.

## சிந்தியா பதில்கள்

பொய்மை, இரட்டுற தொழில், நயவஞ்சனை, நடிப்பு இவற்றால் பொருளீட்டிப் பிழைத்தல் நாய்ப் பிழைப்பென்று கொள்வேன்!” இவை எல்லாம் பாரதியார் ‘சங்கற்பம்’ என்ற கட்டுரையில் எழுதியவை!

**★ உள்ளூராட்சித் தேர்தலைக்கூட தடுத்து நிறுத்த முடியாத தமிழ்க் கட்சிகள், தமிழ் மக்களுக்கு நல்ல தீர்வு பெற்றுத் தருவதாக மார்தட்டும் துணிச்சல் எப்படி வருகிறது?**

பூ.அழகரட்ணம், யாழ்ப்பாணம்.

அத்தி மரத்தில் ஒரு கிளி உட்கார்ந்திருந்தது. எதிர்த்தாற்போலிருந்த ஆலமரத்தில் ஒரு குயில் உட்கார்ந்திருந்தது.

அத்திமரத்துக்கிளி இடைவிடாமல் “இன்றைக்கு மழை வரும்; மழை வரும்!” என்று சொல்லிக் கொண்டிருந்தது.

பலநாட்களாக அதையே திருப்பித் திருப்பிச் சொன்னது.

ஒரு நாளும் மழை வரவில்லை.

ஒரு நாள் குயில் கேட்டது:

“நீ தினமும் ‘மழை வரும் மழை வரும்’ என்கிறாய். ஒருநாளும் வரவில்லை. அதையே ஏன் திருப்பித் திருப்பிச் சொல்கிறாய்?”

கிளி சொன்னது:

“என்றைக்காவது ஒரு நாள் மழை வராதா? அப்போது நான் சொன்னதால்தான் மழை வந்தது என்று சொல்லிக்கொள்ள முடியாதா?”

குயில் கேட்டது:

“சரி, நீ இன்றைக்கு வரும் என்று சொன்னது பொய்தானே?”

கிளி சொன்னது:

“இன்றைக்கு என்பது என்றைக்கும் பொருத்தமல்லவா?”

உடனே குயில் சொன்னது:

“நீ அரசியலுக்கு இலாயக்கானவன்!”

**★ டெண்டுல்கரின் கப்டன் பதவியைப் பறித்தது சரியா?**

சி.வாசன், கொழும்பு-11.

சரிதான் போலுள்ளது, மகுடம் இறங்கியதும் அடுத்தடுத்து இரண்டு அரைச் சதம் போட்டுள்ளாரே! அசாருதீனும் சதம் போட்டு அசத்திப் புட்டாருங்களே!

**★ பணம் வந்தால் சிலருக்கு தலை கால் புரிவதில்லையே? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

திருமதி இ.மலர்விழி, கொழும்பு-09.

புதுப் பணக்காரர்களான ஒரு தம்பதி. அவர்கள் எப்போதும் தாங்கள் பாவிக்கும் பொருட்கள், அசலானவை, வெளிநாட்டில் இருந்து இறக்குமதியானவை, என்று பெருமையாகப் பேசிக்கொண்டிருப்பார்கள்.

“எங்கள் வீட்டில் சமையல் எல்லாம் அசல் நெய்தான். வேறு எண்ணெய் பயன்படுத்துவதே கிடையாது” என்று மனைவி கூறுவார்.

ஒரு நாள் கடற்கரைக்குச் சென்றனர். அலையடித்துக் கொண்டு போன கணவரை சிலர் காப்பாற்றி கரை சேர்த்தனர். உடனே ஒரு டாக்டரை அழைத்து சிகிச்சை செய்தனர்.

“பயப்பட வேண்டாம். செயற்கை சுவாசம் கொடுத்தால் பிழைத்துவிடுவார்,” என்றார் டாக்டர்.

மனைவி குறுக்கிட்டார்.

“செயற்கையெல்லாம் கூடாது. என் கணவருக்கு எல்லாமே அசலாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் எதுவும் வேண்டாம்!”

**★ டியர் சிந்தியா! அரவிந்தசாமியின் படங்களைக் காணோமே? தமிழுக்கு டாட்டாவா?**

எம்.உஷா, நீர்கொழும்பு.

அசத்தல், கலக்கல், தூள், படம் ரெடி. பெயர் ‘என்ஜினியர்.’ ஜோடி: மும்பாய் சூப்பர் ஸ்டாரினி மாதுரி டிக்ஷித்.

**★ இலங்கையில் சுதந்திரதின கிண்ண கிரிக்கெட் போட்டியைக் காணவில்லையே?**

பி.சிவசங்கர், கண்டி.

களத்திலும் எண்ணம் நிறைவேறவில்லை. கிரிக்கெட்டிலும், கிண்ணத்தை இழந்தால் என்னாகுமோ? என்று யோசித்திருக்கலாம்.

**★ பாரதிய ஜனதா கட்சி பதவிக்கு வந்தால், மதவாத சக்திகள் தலையெடுக்கும் என்கிறார்களே?**

சா.கஜேந்திரன், குருநாகல்.

காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோது தானே பாபர் மசூதி இடிக்கப்பட்டது; முஸ்லிம்களுக்கு எதிரான மதக்கலவரங்கள் சூடு பிடித்தன? மதசார்பு என்பதும், மதசார்பின்மை என்பதும் அரசியல்வாதிகளின் உதட்டில் இருந்துவரும் பேச்சாக மட்டும் இருப்பதுதான் உண்மை. பாரதிய ஜனதா வந்தால் இந்தியா ஒன்றும் குடி முழுகிப் போய்விடாது.

**★ யாழ் குடாநாட்டு மக்கள் இம்முறை வாக்களிக்கச் செல்வார்களா?**

ஜி.தர்மராசா, வவுனியா.

வாக்கைக் கெடுக்கவும் செல்லப் போவதாகச் சொல்லியிருக்கிறார்களாமே!

**★ சிந்தியா! யாழ்ப்பாண உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் போட்டியிடாவிட்டால் என்னாகியிருக்கும்?**

எம்.தேசிகன், திருமலை.

ஆளும் தரப்பு போட்ட கணக்கு தப்புக் கணக்காகி இருக்கும்! ‘அடடே தமிழ்க் கட்சிகளும் உருப்படியாக ஒரு நல்ல காரியம் செய்துவிட்டனவே!’ என்று நமக்கெல்லாம் வியப்பாக இருந்திருக்கும்!

**★ டியர் சிந்தியா! எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் நீங்கள் யார் பக்கம்?**

மா.பாஸ்கரன், மீசாலை-யாழ்.

தேவையற்ற தேர்தல் என்று தீர்க்கமாக முடிவெடுத்துள்ள மக்களின் பக்கம்!

**★ சிந்தியா! நம் தமிழ்க் கட்சிகளும் அரசியலை சாக்கடையாக்கி விட்டனவே?**

சி.தாரிணி, மட்டக்களப்பு.

இரண்டு பன்றிகள் சாக்கடையில் குளித்துக் கொண்டிருந்தன.

ஒரு பன்றி சொன்னது:

“இந்தச் சாக்கடைதான் குளிப்பதற்கு எவ்வளவு சுகமாக இருக்கிறது!”

இன்னொரு பன்றி சொன்னது:

“உஷ்... சத்தம் போடாதே! அதோ ஒரு அரசியல்வாதி வருகிறான். அவன் நம்மைப் பார்த்துப் பொறாமைப்படப் போகிறான்!”

**★ சோனியா வந்துவிட்டார். ரஜினியும் தமிழ்நாட்டில் பிரசாரம் செய்வார் போல் இருக்கிறதே?**

இ.குருபரன், கண்டி.

“ஒரு தடவை சொன்னா நூறு தடவை சொன்னமாதிரி,” என்று சென்றமுறை ஒரு தடவை மட்டும் சன்.ரி.வி.யில் பிரசாரம் செய்தார். இந்தத் தடவை மௌனமாக இருக்க நினைத்தவரை அம்மா ஜெயலலிதா சும்மா சீண்டி வம்புக்கிழுத்திருக்கிறார்.

**★ புத்தாண்டில் எடுக்க வேண்டிய சபதம் என்ன?**

ஏ.மன்சூர், கல்முனை.

“பொழுது வீணே கழிய இடம் கொடேன். மறந்தும் தற்புகழ்ச்சி பாராட்டுதல் விரும்பேன். மூடரின் உள்ளத்தில் என்னைப் பற்றிய பொய் மதிப்புண்டாக இடங் கொடேன்.



ஸ்போர்ட்ஸ்

## அக்ரம் விலக விருப்பம்



கப்டன் பதவியில் இருந்து விலகுவதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சகலதுறை ஆட்டக்காரர் வாசிம் அக்ரம் அண்மையில் தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் இரசிகர்களின் கொலை மிரட்டல் மற்றும் கிரிக்கெட்டில் சூதாட்டம் என்ற குற்றச்சாட்டின் காரணமாக தலைமைப்பதவி யிலிருந்து விலகுவதாக செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அக்ரம் தெரிவித்துள்ளார்.

“பாகிஸ்தான் தோல்வி என்றாலே வெறுப்படைந்த இரசிகர்களிடமிருந்து கொலை மிரட்டல்கள் வருகின்றன. நானும் ஒரு மனிதன்தான். எவ்வளவுதான் பொறுத்துக் கொள்வது? இதற்கு மேல் எனக்கு வேறு வழியே தெரியவில்லை,” என்றார்.

“லாகூரில், பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் மூத்த அலுவலர் மஜீத்கானிடம் கப்டன் பதவியில் இருந்து விலகுவது குறித்து தெரிவித்து விட்டேன்; அதே சமயம் அணிக்காக விளையாடுவேன்,” என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

“இது அக்ரமின் தனிப்பட்ட விஷயம். யாரும் அவரை கப்டன் பதவியில் இருந்து விலகச் செல்லவில்லை,” என மஜித்கான் தெரிவித்துள்ளார்.

32 வயதான அக்ரம் 77 டெஸ்ட் போட்டிகளில் 334 விக்கெட்டுக்களையும், 238 ஒரு நாள் போட்டிகளில் 341 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியுள்ளார். 17 டெஸ்ட் போட்டிகளுக்குத் தலைமை தாங்கிய இவர் 9 போட்டிகளில் வெற்றியும், 4 போட்டிகளில் தோல்வியும், 4 போட்டிகளில் வெற்றி தோல்வி இல்லாமலும் கண்டுள்ளார்.

இதுதவிர, டெஸ்ட், மற்றும் ஒருநாள் போட்டிகள் இரண்டிலும் 300 விக்கெட்டுக்களை வீழ்த்திய வீரர் இவர் ஒருவர்தான்.

## தடுப்பாளருக்கு வலிப்பு நோய்



உலகிலேயே சிறந்த ஃபீல்டர் யார் என்று கேட்டால் எல்லோரும் தென் ஆபிரிக்காவின் ஜோன்டி ரோட்ஸைத்தான் கூறுவார்கள். 1992ம் ஆண்டு நடைபெற்ற 5வது உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின்போது இன்ஸமாம்- உல்-ஹக் அடித்த பந்தை இவர் பறந்து போய்ப் பிடித்ததை கிரிக்கெட் இரசிகர்கள் யாராலும் மறந்துவிட முடியாது.

‘கட்ச்’ பிடிப்பதிலும் ‘ஸ்டம்ப்’ செய்வதிலும் இவருக்கு நிகர் இவர்தான். ஒரு நாள் போட்டிகளில், ஒரு ஆட்டத்தில் அதிக ‘கட்ச்’ பிடித்தவர் என்ற பெருமை இவருக்குண்டு.

துடுப்பாட்ட வீரர்களை ரன் அவுட் செய்ய இவர் ஸ்டம்பை நோக்கி வீசும் பந்து குறி தவறுவதில்லை. இப்படி இவர் நேரடியாக ஸ்டம்பை நோக்கி பந்தை வீசி 9 தடவை துடுப்பாட்டக்காரர்களை அவுட்டாக்கியுள்ளார்.

இவ்வாறான ஒரு சிறப்பு மிக்க வீரரைப் பற்றி ஒரு சோகமான செய்தியும் உண்டு. ரோட்ஸிற்கு திடீர் திடீரென வலிப்பு வரும் என்பது பலருக்குத் தெரியாது. வலிப்பு வந்து அவர் துடிக்கும் போது, பார்க்க பரிதாபமாக இருக்கும் என்று சக வீரர்கள் வருத்தப்படுகின்றனர்.

## இவர்தான் அவர்



மீனாட்சி சேஷாத்திரி

# நாற்காலி



நாற்காலியாய் இருந்தவன்
இருகாலி ஆனான்!
இருகாலி ஆனதால்
நாற்காலி செய்தான்!
நாற்காலிக்காக
நாற்காலி ஆனான்!

இதுதான்
நாற்காலியின் கதை!
நாற்காலி
வேட்டையாடும்;
வேட்டையாடப்படும்!

நாற்காலியில் ஏறப்
படிகளாகப்
பிணங்களோ,
பிணங்களைப்
போன்றவையோ
உதவும்!

ஏறித்தான்
போக வேண்டும்
என்பதில்லை;
இறங்கியும்
வரவேண்டியிருக்கும்!

பாட்டு நிற்கும்
தருணம் தெரிந்து
ஓடிப் பிடித்தால்
நாற்காலி கிடைக்கும்!

ஏலத்திலும்
எடுக்கலாம்!

முகத்திற்கோ
வேட்டிக்கோ
பண்ட மாற்றாகவும் பெறலாம்!

சிரமமின்றிப்
பிதுரார்ஜிதமாகவும்
வாய்க்கலாம்!

அதிர்ஷ்டப் பரிசாகவும்
குலுக்கலில் விழலாம்!

ஏதாவது அலை
கொண்டு வந்தும்
கொடுக்கலாம்!

சரியான காலில் கிடந்தால்
அபிஷேகத்தோடு ஏறலாம்!

கொலுக் காலத்தில்-
பரணில்
தூசி படிந்து கிடக்கும்
பொம்மைகளும்,
விலைக்கு வாங்கப்பட்ட
பொம்மைகளும்
அலங்காரமாய் அமரலாம்!

கவிக்கோ
## அப்துல் ரகுமான்
(தமிழக கவிஞர்)

நாற்காலியின் கைகளுக்கு
ரேகைகள் இல்லை;
நகங்கள் உண்டு!
எழுதத் தெரியாது
தூண்டில் பிடிக்கத் தெரியும்!

நாற்காலியின் கால்களுக்கு
நடக்கத் தெரியாது;
மிதிக்கத் தெரியும்!

நாற்காலியில் உட்கார்ந்தால்
தெய்வமாகி விடலாம்!
உளறலும்
வேதமாகிவிடும்!

பூ அமரும் காம்பு-
சுடர் அமரும் திரி
இல்லையா என்று
கேட்கிறீர்களா?

விதை வேண்டும். ...!
நெருப்பு வேண்டும்...!

வைத்திருக்கிறீர்களா?

## என்னவளே!

தீர்வுப் பொதியின்
'சமாதானப் பரிசு'போல
போதுமடி
உன் காதல் நாடகம்!
❤❤
எட்ட இருந்து
குழி பறிக்கும்
'புக்காரா'போல- என்
இதயத்தை
யுத்த களமாக்கும்
காதல் 'கன்னி!'
❤❤
அரசியல் காற்ற
அல்லலுறும் அகதி
என் மனம்!
❤❤
பறந்து போனோர்
நம் நாட்டின்
யுத்த நிறுத்தம்போல்
பிரிவு என்பதும்
நமக்குள் நிரந்தரமற்றது!
❤❤
ஏனெனில்,
உன்
அடையாள அட்டை
என்னிடம் தானே!
❤❤
பரிசோதனைச் சாவடியில்
சிறைப்படுமுன்
சரணடைந்துவிடு
என்னிடம்!

கே. ஜஸ்டின்,
வவுனியா.

## யாரிடம் கேட்பது?

வானம் ஒன்று
பூமி ஒன்று
வாழும் உயிர்கள்
அனைத்தும் ஒன்று!
இந்த மனிதர்கள்
மடையர்களா?
இல்லை,
பலியெடுக்கும்
பூதங்களா?

முன்னே வந்தவர்கள்
மோதி எடுத்ததென்ன?
பின்னே வருபவர்கள்
மோதி எடுக்கப் போவதென்ன?
சொல்ல முடியாமல்
துக்கம் எந்நெஞ்சை
சக்கையாகப் பிழிகிறது!

பூக்களும், காய்களும்
இரத்தத்தில் கனிந்தும்
புரிந்து கொள்ளாமல்
மனிதன்
புரிந்து கொண்டிருக்கிறான்!
போர்!
போர்! போர்!
பூமி எங்கும் போர்!

எதனைச் சாதித்தீர்களென
யாரிடம் கேட்பது...?
நெப்போலியனிடம் போனால்;
கல்லறை மட்டும்
கிடக்கிறது!
ஹிட்லரிடம்
கேட்கலாமென்றாலோ;
சமாதிகூட இல்லை!

ஜெயமணி.

## தேன் கிண்ணம்

மகன் :.பிரான்ஸில்,
மகள் ஜெர்மனியில்,
பேரன் நோர்வேயில்,
பேத்தி சுவிடனில்!
▫▫
எங்கள்
மரண அறிவித்தல்கள்
இலங்கை வானொலியில்!
மலர்வளையமும்
மரணக் கிரியைகளும்
குத்தகை ஒப்பந்தங்களாக-
ஜெயரத்ன
மலர்ச்சாலையிலிருந்து
கனத்தைவரை!

கல்வியூர்ச் சந்திரன்-
கோட்டைக்கல்லாறு.



## இறுதி அஞ்சலி

ஆமாம்....
நாங்கள்
நவீன அகதிகள்-
முகாம்களிலல்ல;
முற்பணங் கொடுத்த
வாடகை அறைகளில்!
▫▫

## சாபக்கேடு


கீரியும் பாம்பும்
சேர்ந்தே வாழலாம்;
கிளியும் பருந்தும்
ஒரு கூட்டில் வாழலாம்;
நரியும் ஆடும்
நட்பை வளர்க்கலாம்;
நம் இனம் மாழினும்
ஒற்றுமை செய்திடான்!
••

எலியும் பூனையும்
எதிர்ப்பைத் துறக்கலாம்;
எண்ணெயும் நீரும்
கூடிக் கலக்கலாம்;
பஞ்சும் நெருப்பும்
பற்ற மறுக்கலாம்;
பாழும் இனம் இது
பகைமை மறந்திடான்!
••

குலத்தை அழித்திடும்
கோடரிக் காம்புகள்
இனத்தை அழித்திடும்
நம்மிடைப் பேதங்கள்
குளத்தைக் கலக்கிப்
பருந்திடம் கொடுப்பினும்
இனத்தைக் காக்கும்
மனத்தைக் கொண்டிடான்!


நெடுந்தீவு லக்ஸ்மன்.

## மீதி



நாங்கள்....
ஜனநாயகக் கடலில்
ஆண்டாண்டு காலமாய்
ஆடிவரும்
தேர்தல் அலைகளின்
வருடல்களை நம்பி
முத்துக்களை இழந்து
வெற்றுக் கூடுகளாய்
ஏங்கி நிற்கும்
மனித சிப்பிகள்...!

யாழ்-
செல்வகுமார்.




'நாடோடி மன்னன்' படப்பிடிப்பில் எம். ஜி. ஆர். படத்தின் இயக்குநரும் அவர்தான். இயக்குவார்- இயங்குவார்.

## இந்த மாதம் பிறந்த பிரபலங்கள்

| | | |
|---|---|---|
| வீரபாண்டிய கட்டப் பொம்மன் | - | 03.01.1760 |
| கபில்தேவ் | - | 06.01.1959 |
| விவேகானந்தர் | - | 12.01.1863 |
| மாட்டின் லூதர் கிங் | - | 15.01.1929 |
| எம்.ஜி.ஆர். | - | 17.01.1916 |
| சுபாஸ் சந்திரபோஸ் | - | 23.01.1897 |
| லோர்ட் பைரன் (கவிஞர்) | - | 22.01.1788 |
| ரூஸ்வெல்ட் | - | 30.01.1882 |


## பேனா நண்பர்கள்



பெயர்:
வி. ஆதீசன்
வயது: 20
முகவரி: வட்டு வடக்கு,
சித்தங்கேணி,
யாழ்ப்பாணம்.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்:
இ. சாந்தி
வயது: 20
முகவரி:
208/1, பாரதிபுரம்,
கன்னியா வீதி,
திரு மலை.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்:
எம்.எல். பௌஸர்
வயது: 21
முகவரி:
100, சமகி மாவத்தை,
பண்ணவ, கொபெய்கன.
பொழுது போக்கு:
பத்திரிகை, வானொலி.



பெயர்:
எச்.எஸ். அனாஸா
வயது: --
முகவரி:
7, ஏ.பி.எச். ஒழுங்கை,
காத்தான்குடி-06.
பொழுது போக்கு:
வழமையானவை



பெயர்:
எஸ். செல்வகுமார்
வயது: 21
முகவரி:
P.O.BOX- 90936,
DOHA, QATAR.
பொழுது போக்கு:
வானொலி.



பெயர்: எம். அன்வர்
வயது: 27
முகவரி: P.O.BOX-8363,
CODE NO-22054,
SALMIYA, KUWAIT.
பொழுது போக்கு:
நண்பர் தொடர்பு.

## இந்த வாரம் உங்கள் பலன்

(18.01.1998 தொடக்கம் 24.01.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பகல் | 12 | மணி |
| **திங்கள்**- தொழில் சிறப்பு, பணவரவு. | பகல் | 11 | மணி |
| **செவ்வாய்**- அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப. | 2 | மணி |
| **புதன்**- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 | மணி |
| **வியாழன்**- துயர் நீங்கும், உயர்ந்த நட்பு. | பகல் | 12 | மணி |
| **வெள்ளி**- பிரயாணக் கஷ்டம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 2 | மணி |
| **சனி**- மனக்குறை நீங்கும், உயர்ந்த வாழ்க்கை. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- உறவினர் உதவி, பிரயாண மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| **திங்கள்**- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | மு.ப. | 10 | மணி |
| **செவ்வாய்**- வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு. | பி.ப. | 1 | மணி |
| **புதன்**- இனசனக் கஷ்டம், பயனற்ற செயல். | மு.ப. | 10 | மணி |
| **வியாழன்**- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| **வெள்ளி**- பெரியோர் நட்பு, பலவித சிறப்பு. | பி.ப. | 1 | மணி |
| **சனி**- தொழில் உயர்ச்சி, பண வரவு. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- அந்நியர் நட்பு, கௌரவக் குறைவு. | பகல் | 11 | மணி |
| **திங்கள்**- இனசன நன்மை, உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| **செவ்வாய்**- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பகல் | 11 | மணி |
| **புதன்**- வீண் துயர், செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| **வியாழன்**- காரியத் தடை, வீண் பிரயாணம். | பி.ப. | 2 | மணி |
| **வெள்ளி**- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| **சனி**- உயர்ந்த நட்பு, கௌரவ மிகுதி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- தொழில் கஷ்டம், செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| **திங்கள்**- பிரயாண மிகுதி, மனக்குறை நீங்கும். | பி.ப. | 2 | மணி |
| **செவ்வாய்**- மறைமுக எதிர்ப்பு, பணக் கஷ்டம். | பி.ப. | 1 | மணி |
| **புதன்**- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| **வியாழன்**- அந்நியர் சகாயம், பயனுள்ள செயல். | பி.ப. | 1 | மணி |
| **வெள்ளி**- பெரியோர் உதவி, பண வரவு. | பகல் | 12 | மணி |
| **சனி**- முயற்சி பலிதம், வெளியிடப் பயணம். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- பயனற்ற செயல், காரியத்தடை. | பி.ப. | 1 | மணி |
| **திங்கள்**- பெரியோர் உதவி, செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| **செவ்வாய்**- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பகல் | 11 | மணி |
| **புதன்**- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| **வியாழன்**- தொழில் மந்தம், பணச் செலவு. | பகல் | 11 | மணி |
| **வெள்ளி**- அந்நியர் உதவி, கௌரவ மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| **சனி**- முயற்சி பலிதம், உயர்ந்த நிலை. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### நவக்கிரக சஞ்சாரம்

| | | |
|---|---|---|
| மகரம் | - | சூரியன், செவ்வாய், வெள்ளி. |
| கும்பம் | - | வியாழன், கேது. |
| மீனம் | - | சனி. |
| சிம்மம் | - | இராகு. |
| தனு | - | புதன். |

★ சந்திரன்- சிம்மம், கன்னி, துலாம், விருட்சிகம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- உயர்ந்த நிலை, உறவினர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| **திங்கள்**- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- தொழில் உயர்ச்சி, உயர்ந்த நட்பு. | மு.ப. | 10 | மணி |
| **புதன்**- அந்நியர் உதவி, பண வரவு. | பகல் | 11 | மணி |
| **வியாழன்**- வெளியிட வாழ்க்கை, மனக் கலக்கம். | மு.ப. | 10 | மணி |
| **வெள்ளி**- பெரியோர் சகாயம், காரியானுகூலம். | பகல் | 12 | மணி |
| **சனி**- பயனுள்ள செயல், மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- பிரயாண மிகுதி, கடன் தொல்லை. | பகல் | 12 | மணி |
| **திங்கள்**- மனக்குறை நீங்கும், செய்தொழில் விருத்தி. | பகல் | 11 | மணி |
| **செவ்வாய்**- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| **புதன்** - உறவினர் உதவி, மனக் கலக்கம். | மு.ப. | 10 | மணி |
| **வியாழன்**- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. | 2 | மணி |
| **வெள்ளி**- தொழில் கஷ்டம், மனக்குறை நீங்கும். | பகல் | 12 | மணி |
| **சனி**- பெரியோர் சகாயம், செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- தொழில் கஷ்டம், முயற்சி பலிதம். | பகல் | 12 | மணி |
| **திங்கள்**- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| **செவ்வாய்**- இனசன மகிழ்ச்சி, செலவு மிகுதி. | மு.ப. | 10 | மணி |
| **புதன்**- வீண்குறை கேட்டல், அந்நியர் நட்பு. | பி.ப. | 2 | மணி |
| **வியாழன்**- முயற்சி பலிதம், பண வரவு. | பி.ப. | 1 | மணி |
| **வெள்ளி**- கௌரவக் குறைவு, மனக் கலக்கம். | பகல் | 11 | மணி |
| **சனி**- கடன் சுமை, காரியத் தடை. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- தொழில் மந்தம், மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| **திங்கள்**- பெரியோர் உதவி, காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| **செவ்வாய்**- வீண் முயற்சி, செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| **புதன்**- தொழில் உயர்ச்சி, அந்நியர் நட்பு. | பி.ப. | 1 | மணி |
| **வியாழன்**- இனசன நன்மை, பொருள் வரவு. | மு.ப. | 10 | மணி |
| **வெள்ளி**- வெளியிடப் பயணம், காரிய சித்தி. | பகல் | 1 | மணி |
| **சனி**- தொழில் கஷ்டம், மனப் பயம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் சுகம், காரியானுகூலம். | பகல் | 12 | மணி |
| **திங்கள்**- முயற்சி பலிதம், தொழில் விருத்தி. | பி.ப. | 2 | மணி |
| **செவ்வாய்**- இனசன நன்மை, மனக்குறை நீங்கும். | பகல் | 11 | மணி |
| **புதன்**- வீண் முயற்சி, தொழில் கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| **வியாழன்**- பயனற்ற செயல், அந்நியர் பகை. | பகல் | 12 | மணி |
| **வெள்ளி**- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| **சனி**- உயர்ந்த நிலை, உறவினர் உதவி. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- மனக் கலக்கம், செலவு மிகுதி. | புகல் | 12 | மணி |
| **திங்கள்**- புதிய முயற்சி, பண வரவு. | பகல் | 11 | மணி |
| **செவ்வாய்**- தொழில் சிறப்பு, வெளியிட வாழ்க்கை. | மு.ப. | 10 | மணி |
| **புதன்**- பயனுள்ள செயல், பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| **வியாழன்**- உயர்ந்த நட்பு, மன மகிழ்ச்சி. | பகல் | 11 | மணி |
| **வெள்ளி**- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. | 1 | மணி |
| **சனி**- தொழில் கஷ்டம், பண விரயம். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6


### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- அந்நியர் உதவி, மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| **திங்கள்**- உயர்ந்த நட்பு, காரியானுகூலம். | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- மன மகிழ்ச்சி, தொழில் உயர்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| **புதன்**- செய்தொழில் நன்மை, காரியச் சிறப்பு. | பி.ப. | 2 | மணி |
| **வியாழன்**- பலவித பேறு, உயர்ந்த நிலை. | பி.ப. | 1 | மணி |
| **வெள்ளி**- வெளியிடப் பயணம், மனக்குறை நீங்கும். | பகல் | 12 | மணி |
| **சனி**- பெரியோர் உதவி, கௌரவக் குறைவு. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3





சின்னப் பறவையின் மெல்லொலி
கொண்டிங்கு
சேர்ந்திடு நற் காற்றே!
மின்னல் விளக்கிற்கு வானகங்
கொட்டுமிவ்
வேட்டொலி யேன் கொணர்ந்தாய்?
–சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை



# உபத்திரவமான உதவி

ஒரு விறகு வெட்டியிடம் ஒரு கோடரி இருந்தது. ஆனால் அதற்குக் கைபிடி இல்லை. அதனால் அவன் மரங்களை வெட்ட முடியாமல் இருந்தது.

கோடரிக்கு கைபிடி போடுவதற்காக அவன் காட்டிற்குச் சென்றான். காட்டில் பல வகையான மரங்கள் செழித்து வளர்ந்திருந்தன. மரங்களின் முன்னால் நின்று,

"மரங்களே, எனக்கு ஒரு முழு நீள அளவுக்கு ஒரு தடி வேண்டும். தயவு செய்து இந்த உதவியைச் செய்யுங்கள்!" என்று கேட்டான் விறகுவெட்டி.

அந்தக் காட்டில் நின்ற இரண்டு வயதான மரங்கள், விறகுவெட்டி எதற்காக நீண்ட தடி கேட்கிறான், என்று விசாரிக்காமல், அவன் கேட்ட தடியை அவனுக்கு வழங்கின.

தடியை வாங்கிச் சென்ற விறகு வெட்டி, அதை வீட்டிற்கு எடுத்துச் சென்று, ஒழுங்குபடுத்தித் தனது கோடரியில் பொருத்தினான்.

காட்டில் செழித்து வளர்ந்திருந்த மரங்கள் விறகுவெட்டியின் ஞாபகத்திற்கு வந்தன.

உடனே கோடரியை எடுத்துக் கொண்டு, அந்தக் காட்டிற்குச் சென்றான்.

அங்கிருந்த பெரிய மரங்களை எல்லாம் விறகுக்காக வெட்டிச் சாய்த்தான்.

அப்பொழுதுதான் வயதான அந்த இரண்டு மரங்களும் தாம் செய்த தவறை உணர்ந்தன.

"அந்த விறகுவெட்டி நீளமான தடியொன்று கேட்டபோது, அதை எதற்காகக் கேட்கிறான் என்பதைக் கேட்டிருந்தால் இப்படி நடந்திருக்காதே!

விறகு வெட்டி நாம் செய்த உதவியை வைத்தே நம்மை அழித்துக் கொண்டிருக்கிறான். நாம் அவனுக்குச் செய்த இந்த உதவியானது நாமே நம் கைகளால் நம் கண்களைக் குத்திக் கொண்டதுமாதிரி ஆகிவிட்டதே." என்று இரண்டு மரங்களும் அழுதன.

இனி அழுது என்ன செய்வது? விறகு வெட்டி எல்லா மரங்களையும் வெட்டி விடுவான்.

***ஒருவருக்கு உதவி செய்யும்போது, அவருக்குச் செய்யும் உதவியானது எவ்வாறு பயன்படப் போகிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் உதவி உபத்திரவமாகி, விறகு வெட்டிக்குக் காட்டு மரங்கள் செய்த உதவி போலாகிவிடும்.***

## அதிசயம்–ஆனால் உண்மை!



### பெரிய தற்பெருமை:


↑ பூட்டான் நாட்டு லாமா, அரசு முத்திரையில் தம்முடைய 16 குணாதிசயங்களைப் பொறித்து வைத்துள்ளார். இவற்றுள் ஒன்று, 'நான் புனிதத்திலும், ஞானத்திலும் தன்னிகரற்றவன்.'

### மயிலிறகுப் புழு:




→ இது கடலின் அடிமட்டத்தில் சேற்றில் வாழ்கிறது. இது நீரினுள் தனது இரையைப் பிடிக்க மயிலின் வண்ணத்தைப் போன்ற செவுளை விரிக்கும்.

### காக்டஸ்:




→ இந்து சமுத்திரத்தின் ரியூனியன் தீவிலுள்ள காக்டஸ் என்னும் பூ- 50 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் பூக்கிறது.




### சிப்பி நாணயங்கள்:

← உலகப் பொருளாதார சரிவு காலத்தில் (1930-40) கலிபோர்னியாவில் உள்ள பிஸ்மோ பீச் என்ற இடத்தில் சிப்பி நாணயங்கள் செலாவணியில் இருந்தன.

## வாரம் ஒரு நாடு



### ஸயர்

**தலைநகர்**– கின்ஷாஸா
**பரப்பு**– 23,44,885 சதுரகிலோ மீட்டர்
**மக்கள் தொகை**– 4.37 கோடி
**மொழி**– ஃபிரெஞ்சு, கிஸ்வாஹிலி, ஆபிரிக்க மொழிகள்
**எழுத்தறிவு**–72%
**சமயம்**– கிறிஸ்தவம், இஸ்லாம், ஆவி வழிபாடு.
**நாணயம்**– புதிய ஸயர்
**தனிநபர் வருமானம்**– 180 டொலர்.

**அமைவிடம்:**

ஆபிரிக்காவின் மத்தியிலிருக்கும் இந்நாட்டின் வடக்கே மத்திய ஆபிரிக்கக் குடியரசும், மேற்கே கொங்கோ மற்றும் அங்கோலாவும், தெற்கே ஸம்பியாவும், கிழக்கே தன்ஸானியா, புருண்டி, ருவாண்டா மற்றும் உகண்டா ஆகிய நாடுகளும் எல்லைகளாக உள்ளன. வடகிழக்கு எல்லையை சூடான் நாடு தொட்டு நிற்கிறது.

**வரலாறு:**

முற்காலத்தில் கொங்கோ என்று வழங்கப்பட்டது. 1971ல் ஸயர் என்று பெயர் மாற்றப்பட்டது. பெல்ஜியம் காலனியாக இருந்த இது 1960 ஜூன் 30ம் திகதி சுதந்திரமடைந்தது. 1994 ருவாண்டா கலவரங்களைத் தொடர்ந்து இங்கு 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட ருவாண்டா அகதிகள் உள்ளனர்.

**பொருளாதாரம்:**

கனிப்பொருட் சுரங்கங்கள் ஏராளமாக உள்ளன. இவற்றில் செம்பு மிக அதிகமாகக் கிடைக்கிறது. காடுகளில் மிகச் சிறந்த மரவகைகள் உள்ளன.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 24.01.1998.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 228
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 226

பரிசுக்குரியவர்:
ஜெ. அசோக்,
மட்/ களுதாவளை ம.வி., களுவாஞ்சிக்குடி.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| எப். பரீனா அபுசாலி, மு.ம.வி.,யஹலத்தன்னை, கண்டி. | சி. சுலக்ஷனா, சைவ மங்கையர் கழகம், கொழும்பு-06. |
| பி. ஸ்ரீபன், புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு. | அனஸ் அனீஸ் மொஹமட், ப/ தமிழ் மகா வித்தியாலயம், ஹல்தும் முல்லை. |
| ரி. சரண்யா, அன்னம்மாள் ம.ம.வி., கொழும்பு-13. | குலேந்திரன் திவ்வியலஷ்மி, விகாரமகாதேவி வித்தியாலயம், கண்டி. |
| க. தட்சனி, றம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம், வவுனியா. | மு.ச. சாமில் பௌஸாத், ஸம்ஸ் மத்திய கல்லூரி, மருதமுனை. |
| கே. ஷ.:.ப்வான் மொஹமட், மஹவெலமுல்ல, மு.வி., வெள்ளவாய. | மே. சிவசங்கர், தமிழ் மத்திய ம.வி, வவுனியா. |

## விசித்திர மூஞ்சூறுகள்



**கஸ்தூரி மூஞ்சூறு:**

அமெரிக்காவில் காணப்படும் இவ்வகை மூஞ்சூறுவின் வயிற்றுப் பக்கம் கஸ்தூரி மானைப்போன்று ஒருவகை வாசனைப் பொருளுண்டு. எனவேதான் இப்பெயர் வந்தது.

**துதிக்கை மூஞ்சூறு:**

வட அமெரிக்கவாசியான இவற்றின் மூக்கு யானையின் துதிக்கையைப் போல் நீண்டுள்ளது.

**நட்சத்திர மூக்கு மூஞ்சூறு:**

ஐரோப்பாவின் வடபாகத்தில் காணப்படும் இவற்றின் மூக்கின் தசை நட்சத்திரம் போல் இருக்கும். இது தன் நீண்ட நாவால் பூச்சிகளைப் பிடித்துண்ணும்.


**பன்றிக்கால் மூஞ்சூறு:**

இவற்றின் முன் கைகள் சிறுத்தும், கால்கள் நீண்டும் முயல்போல் இருக்கும். கால்களில் உள்ள நகங்கள் பன்றியைப் போல் உள்ளதால் இப்பெயர் வந்தது.

**மர மூஞ்சூறு:**

ஐரோப்பாவில் இருக்கும் இவற்றின் கால், கைகள் பூனையை ஒத்தவை. விரல்கள் மூஞ்சூறு போன்றவை. இவை மரங்களில் ஏறிக் கூடு கட்டி வாழும்.

## வெப்பநிலை அளவுகள்



வெப்பநிலை மூன்று விதங்களில் அளக்கப்படுகின்றது. அவை செல்ஷியஸ், ஃபாரன்ஹைட் மற்றும் கெல்வின் என்பனவாகும்.

1742ல் சுவீடன் சோதிட நிபுணரான அண்டர்ஸ் செல்ஷியஸ் என்பவரே இதை உருவாக்கியவர். இது பின்னர் சுவீடன் இயற்பியலாளரான ஜெ.பி. கிறிஸ்டல் என்பவரால் செம்மைப்படுத்தப்பட்டது.

இந்த 'செல்ஷியஸ்' அளவு முதலில் 'சென்டிகிரேட்' என்றே அழைக்கப்பட்டது. பின்னர் இதை உருவாக்கியவரைச் சிறப்பிக்க 'செல்ஷியஸ்' என்ற பெயர் வழங்கப்பட்டது.

'ஃபாரன் ஹைட்' அளவை உருவாக்கியவர் ஜெர்மன் இயற்பியலாளரான காப்பிரியல் டானியல் ஃபாரன் ஹைட் என்பவர். இவர் 1686–1736 காலப் பகுதியில் வாழ்ந்தவர்.

1824–1907 காலப்பகுதியில் வாழ்ந்த வில்லியம் தொம்சன் கெல்வின். பிரிட்டிஷ் இயற்பியலாளரான இவர்தான் 'கெல்வின்' அளவை உருவாக்கியவர்.

## விடுகதைகளும் • விடைகளும் •

1. பருத்த வயிற்றுக்காரன் படுத்தே கிடப்பான். அவன் யார்?
2. தண்ணீரில் தாவும் கப்பல், தரையிலே பாயும் கப்பல். அது என்ன?
3. வாலால் நீர் குடிக்கும், வாயால் பூச்சொரியும். அது என்ன?
4. சின்னத் தம்பிக்குத் தொப்பியே வினை. அது என்ன?
5. பறக்கும், ஆனால் பறந்து செல்லாது. அது என்ன?
6. குளம்படி ஓசைக்காரன், போருக்குப் பின் நிற்கமாட்டான். அவன் யார்?
7. செக்கில் ஆட்டாத எண்ணெய்; விதையில் கிடைக்காத எண்ணெய். அது என்ன?
8. உழுதவன் ஊதியம் வாங்க மாட்டான். அவன் யார்?
9. யானை படுக்க நிழலுண்டு; கடுகு மடிக்க இலை இல்லை. அது என்ன?
10. கழுத்தைச் சுற்றியவன் கடிக்க மாட்டான். அவன் யார்?

**விடைகள்**

1. தலையணை 2. தவளை 3. விளக்கு
4. தீக்குச்சி 5. கொடி 6. குதிரை
7. மண்ணெண்ணெய் 8. மண் புழு
9. சவுக்கு மரம் 10. கழுத்துப்பட்டி.

**தொகுப்பு: எம். புனிதா.**

## வெள்ளைப் பெண்மணி

மெக்ஸிக்கோ நகரின் அருகில் ஒரு எரிமலை உள்ளது. அதன் பெயர் 'இக்ஸ்டாட் சிகுவாடி' என்பதாகும். 'இக்ஸ்டாட் சிகுவாடி' என்றால் 'வெள்ளைப் பெண்மணி'



(WHITE WOMEN) என்று அர்த்தமாகும்.

இந்த எரிமலையைத் தூரத்தில் இருந்து பார்த்தால் ஒரு பெண்மணி உறங்குவதைப் போன்று இருக்கும். அதனால்தான் 'வெள்ளைப் பெண்மணி' எனப் பெயர் வந்தது.

## துணுக்குகள்

★ ஆபிரிக்காவில் உள்ள விக்டோரியா நீர்வீழ்ச்சியின் சத்தம் 20 மைல்களுக்கு அப்பாலும் கேட்கும். இந்த நீர்வீழ்ச்சியிலிருந்து கிளம்பும் புகை போன்ற நீர்த்திவலைகள் 10 மைல்களுக்கு அப்பாலும் தெரியும்.

★ கலிஃபோர்னியா எரிமலைக்குத் தெற்கில் ஒரு சிறிய ஏரி இருக்கிறது. அதன் தண்ணீர் முழுவதும் பேனா மை போல் கறுப்பாக இருக்கிறது. இந்தக் கறுப்புத் தண்ணீரில் வெள்ளைத் துணியை நனைத்தால் கறுப்பு நிறமாக மாறி விடுகின்றது. துணியைத் துவைத்தாலும் கறுப்பு நிறம் அழியாது. இந்த ஏரியை 'மை ஏரி' (INK LAKE) என்று அழைக்கிறார்கள்.

## வைகூனா



படத்தில் காணப்படும் வைகூனா என்ற இந்த விலங்கு அடர்த்தியான ரோமம் கொண்டது. தென் அமெரிக்க நாடான பெரு நாட்டின் காடுகளில் அதிகமாகத்திரியும். இந்த விலங்கை அந்நாட்டினர் சுற்றி வளைத்துப் பிடிப்பார்கள். பின்னர் அதன் உடலில் உள்ள உரோமங்களை வெட்டியவுடன் அவற்றை விட்டு விடுவார்கள்.

வைகூனா ரோமத்தால் செய்யப்பட்ட கம்பளிக்கு உலகில் அதிக கிராக்கி உண்டு.

# இராமாயணம் அங்கம் 117

இராமபிரானின் ஆணையினை ஏற்று உடனடியாகவே வானில் தாவிய ஆஞ்சநேயர், கணப்பொழுதில் கங்கைக் கரையை அடைந்தார். கங்கைக் கரையிரண்டையும் உள்ளடக்கிய பெரும் பிரதேசத்துக்கு அதிபனான குகனைப் பற்றி இராமபிரான் ஆஞ்சநேயருக்குக் கூறியிருந்தார். தன்மீது அளவற்ற அன்பும் பக்தியும் கொண்டவனான குகனைத் தனது சகோதரர்களுள் ஒருவனாக தான் ஏற்றுக் கொண்டதையும் கூறியிருந்தார். இராமபிரான் அயோத்தியை நோக்கி வந்து கொண்டிருக்கிறார் என்ற செய்தியை குகனிடம் தெரிவிப்பதற்காக ஆஞ்சநேயர் கங்கைக் கரையில் இறங்கினார்.

தரையிறங்கும்போதே, தன்னை மாற்றான் எனக்கருதி குகனின் படைவீரர்கள் தவறுதலாக எண்ணி விடக்கூடும் என்பதனால், "ஸ்ரீ ராம ஜெயம்" என்ற மந்திரத்தைப் பலமாக உச்சரிக்கலானார். அந்த மந்திரம், தனது அரண்மனையிலிருந்த குகனுக்குக் கேட்டதும், மெய்மறந்தவனாக எழுந்தோடி வந்தான். வானிலிருந்து வானர உருவத்தில்

இராஜகுமாரன்

தரையில் குதித்த அனுமன் தனது கைகள் இரண்டையும் சிரசின் மேல் குவித்த வண்ணம் குதித்துக் குதித்து ஆடலானார். இச்செயல் குகனை மட்டுமல்ல, அவனுடைய அமைச்சர்கள், பிரதானிகள் மற்றும் வேடுவ மக்கள் அனைவரையும் பரவசத்திலாழ்த்தியது. ஆஞ்சநேயருடன் சேர்ந்து அனைவரும் பாடி ஆடினர்.

அனுமன், குகனிடம் வந்து தன் இருகைகளாலும் குகனை அணைத்துக்கொண்டார். காரணம் தெரியாமல், இராம மந்திரத்தின் இலயத்திலேயே ஊறிப்போயிருந்த குகன் அப்போதுதான் கண்களைத் திறந்து அனுமனைப் பார்த்தான்.

"ஸ்ரீ இராமச்சந்திரப் பிரபுவின் அன்புக்குப் பாத்திரமான சிருங்கபேர நகரின் அதிபனான குகனே! உமக்கு மிக்க மகிழ்ச்சியூட்டும் செய்தியைக்கூற வந்தேன். நான் இராமபிரானின் தூதன். அஞ்சலைக்கும் வாயுதேவனுக்கும் பிறந்தவன்; ஆஞ்சநேயன், அனுமன், மாருதி என்பவை எனது பெயர்கள். அண்ணல் இராமபிரான், இலங்கையின் மன்னனான இராவணனை வதம் செய்துவிட்டு, இராவணனின் தம்பியான விபீடணருக்குப் பட்டம் சூட்டியபின் சீதாப்பிராட்டியாருடனும் இளைய பெருமாளான இலக்குவனுடனும் புட்பக விமானத்திலேறி, தற்போது பரத்துவாச மாமுனிவருடைய தபோவனத்தில் தங்கியிருக்கின்றார். இன்னும் சில நாழிகையில் அவர் அயோத்தி நோக்கிப் புறப்படவிருக்கிறார். நீர் உடனடியாக அங்கு சென்றால் ஐயனைக் காண்பாய்! நான் அவருடைய தம்பியை அயோத்தியில் கண்டு அண்ணலின் வருகையை அறிவிக்கச் செல்கிறேன்!" என்று கூறிவிட்டு, குகன் இத்தகைய மகிழ்ச்சிகரமான செய்தியைக் கூறிய அனுமனை உபசரிக்க எத்தனிக்குமுன்னமே, வானில் தாவிச் சென்று மறைந்துவிட்டார்.

## குகனின் குதூகலம்

இராமபிரான் பற்றிய செய்தி காதில் விழுந்ததுமே தன்னிலை மறந்தவனான குகன் படகில் ஏறி கங்கையைக் கடந்து அக்கரைச் சென்றான். குகனுடைய பரிவாரங்களும் தங்கள் தலைவனை பின்பற்றி, ஓட்டமும் நடையுமாக பரத்துவாச முனிவரின் ஆசிரமத்தை நோக்கிப் புறப்பட்டனர்.

இராமபிரான், பிராட்டியார், இலக்குமணர் மற்றும் அவர்களுடன் வந்த அனைவருக்கும் பரத்துவாச முனிவரும் சீடர்களும் அறுசுவை உணவினை வழங்கினர். வானரர்கள் பசுஞ்சோலைகளில் கிடைத்த தீஞ்சுவைப் பழங்கள், கிழங்குகள் ஆகியவற்றை உண்டு தேனைப் பருகினர். விபீடணருடன் வந்திருந்த அரக்கர்களுக்கும் அவரவர்க்கு வேண்டிய உணவு படைக்கப்பட்டது.

இராமபிரான் உணவினை உண்டு முடித்தபோது வடதிசையிலிருந்து பெரும் பேரொலி கிளம்பியது. யாராவது எஞ்சியுள்ள துஷ்டர்கள் போர் முழக்கமிட்டு வருகின்றார்களோ? என்று சுக்கிரீவன் ஐயுற்றான். வானர வீரர்களை, உயர்ந்து நின்ற மரங்களில் ஏறி நின்று உண்மையை அறியுமாறு பணித்தான். அவர்கள் நொடிப் பொழுதில் மரங்களின் உச்சிக்குத் தாவிச் சென்றனர். அதே வேகத்தில் கிழே குதித்து வந்து அவர்கள் கண்ட காட்சியை விபரித்தனர்.

தங்கள் கைகளைச் சிரமேற் குவித்த, வண்ணம் பல்லாயிரம் பேர் 'ஸ்ரீ ராம ஜெயம்' என்ற மந்திரத்தை ஓதிய வண்ணம் வந்து கொண்டிருப்பதாகக் கூறினர். குகன் தன் பரிவாரங்களுடன் தன்னை நாடி வருவதை இராமபிரான் உணர்ந்து கொண்டார். குகனையும் பரிவாரத்தையும் வரவேற்க அவரும் முன்னேறிச் சென்றார். இராமபிரானைப் பின் தொடர்ந்து, அவருடன் இலங்கையிலிருந்து வந்தவர்களும் சென்றனர். சமுத்திரமும் சமுத்திரமும் சங்கமமாவது போல் இரு தரப்பினரும் ஒன்று கலந்த காட்சி கண் கொள்ளாக்காட்சியாக இருந்தது.

இராமபிரான் குகனை நெருங்கியதும் குகன் அவருடைய பாதங்களில் விழுந்து விம்மி விம்மி அழலானான். குகனைத் தூக்கி நிறுத்திய இராமபிரான், அவனுடைய கண்களிலிருந்து பெருக்கெடுத்தோடிய கண்ணீரைத் துடைத்தார். சற்று நேரம் இருவரும் ஒருவருடன் எதுவித வார்த்தையும் பேசவில்லை. இராமபிரானே குகனிடம் சுக நலன்களை விசாரித்தார். "என் அன்புக்குரிய தம்பி குகனே! நான் உடனடியாக அயோத்தி மாநகர் செல்கிறேன். தம்பி பரதனுக்குக் கொடுத்த வாக்கின்படி நான் உடனடியாகச் செல்லாவிட்டால் விபரீதமான விளைவுகள் ஏற்படக்கூடும். ஆகவே எனக்கு விடைகொடு தம்பி...!" என்றார்.

குகன், இராமபிரானின் அடிகளை மீண்டும் தொழுதெழுந்தான். சீதாப்பிராட்டியாரினதும் இலக்குவனதும் அடிகளைத் தொழுது விடைகொடுத்தான். இராமபிரான், பரத்துவாச முனிவரிடம் விடைபெற்றுக் கொண்டு புட்பக விமானத்தில் ஏறினார். ஏனையோரும் ஏறிக்கொண்டதும் விமானம் புறப்பட்டது.

## பரதனும் சத்துருக்கனும்

பரதனிட்ட கட்டளைப்படி சத்துருக்கன் தனது அண்ணனைக் காண ஓடோடி வந்தான். சோகமே உருவாக, தன் வரவை எதிர்பார்த்துக் காத்து நின்ற பரதனை அணுகி, பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். தம்பியை தனது இருகைகளாலும் தூக்கி எடுத்த பரதன், "தம்பி! நமது அண்ணன் இராமச்சந்திரப் பிரபு எனக்கு வாக்களித்தபடி உரிய நேரத்தில் வருவார் என்ற நம்பிக்கை எனக்கில்லை. அவர் குறித்த காலக்கெடு முடிவடையப் போகிறது. நான் எடுத்துக் கொண்ட பிரமாணப்படி, நான் தீக்குளித்து உயிரை விடத் தீர்மானித்து விட்டேன். ஆகவே நாளை அயோத்தியின் அரியணையிலேறி, முடிசூட்டி பரிபாலனம் செய்வாயாக!" என்றான்.

# அயோத்தியை அடைந்த இராமபிரான்



இவ்வார்த்தைகளைக்கேட்ட சத்துருக்கன், அடியற்ற மரம்போல் சாய்ந்தான். அழுது புரண்டவனாக, "அண்ணா! நான் தங்களுக்கு என்ன குற்றம் செய்தேன்? அண்ணன் இராமன் அரசாளும் உரிமை பெற்றிருந்தும் தந்தையின் வார்த்தையைக் காப்பாற்ற கானகம் சென்றார். அண்ணனைப் பின் தொடர்ந்து அண்ணன் இலக்குவன் சென்றான். எனக்கு மூத்தவனான நீ துறவு பூண்ட நிலையில் அரச பரிபாலனம் செய்தாய். அண்ணன் இராமச்சந்திரப் பிரபு கொடுத்த வாக்குறுதிப் படி வராமையினால் நீயும் உயிரை விடப் பார்க்கிறாய்! உங்கள் அனைவரின் தம்பியான நான் மட்டும் அரியாசனம் ஏறி விடுவேனா? நானும் தங்களைப் பின்பற்றி உயிர்மாய்ப் பேன்!" என்று கூறினான்.

இதற்கு பரதன், "தம்பி! நான் அரச பரிபாலனத்தைத் தொடர்ந்து புரிவேன் என்ற கருத்தில் அண்ணன் இராமபிரான் தாமதிக்கிறார் போலும். நான் உயிர்துறப்பேனேயானால், நாட்டையும் நாட்டு மக்களையும் காக்கும் பொருட்டு அண்ணன் விரைந்து வரக்கூடும். ஆகவே மூத்தவனான நான் இட்ட கட்டளைப்படி நான் தீயினில் புகுவதற்கு உடனடியாக தீமூட்டுவாயாக!" என்றான். அண்ணன் வாக்குக்கு மறுவார்த்தை கூறமுடியாது வாயடைத்துப்போன சத்துருக்கன், முறைப்படி தீயை வளர்க்க ஆயத்தமானான்.

"பரதன் தீக்குளிக்கப் போகிறான்!" என்ற செய்தி அயோத்தி மாநகரெங்கும் பரவலாயிற்று. இதனைக் கேள்வியுற்ற இராமபிரானின் தாயார் கோசலை அழுது புரண்ட வண்ணம் பரதனிடம் ஓடிவந்தார். அமைச்சர்களும் நாட்டின் பிரமுகர்களும் முனிவர்களும் நந்திக்கிராமம் வந்தனர். கோசலைத் தாயார் எவ்வளவோ ஆறுதல் மொழிகளைக் கூறியும், ஏனையோர் நல்வார்த்தைகளை எடுத்து ஓதியும் பரதனின் பிடிவாதத்தைத் தகர்க்க முடியவில்லை.

## ஆஞ்சநேயரின் வருகை

சத்துருக்கன், பரதன் ஆணைப்படி தீயை மூட்டினான். தீ கொழுந்துவிட்டு எரிந்தது. பரதன் நீராடிவிட்டு தீக்கடவுளுக்குரிய வழிபாடுகளைச் செய்த பின்னர், தீக்குண்டத்தை வலம் வந்து கொண்டிருந்தான். அப்போது வான மண்டலத்திலிருந்து வாயு புதல்வனான ஆஞ்சநேயர் பலத்த ஒலியுடன் 'ஸ்ரீ ராம ஜெயம்' என்ற மந்திரத்தை ஜெபித்த வண்ணம் தரையிறங்கினார். தரையைத் தொட்டதும் முதலில் அயோத்தியின் மண்ணைத் தொட்டு வணங்கினார். ஓடோடிச் சென்று பரதனின் கால்களில் விழுந்து, அக்கால்களை அசையவொட்டாமல் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்.

"பண்பில் சிறந்த பரதப் பெருமானே! நமது தெய்வம் ஸ்ரீ இராமச்சந்திரப் பிரபு வந்து கொண்டிருக்கிறார். பரத்துவாச மாமுனிவரின் தபோவனத்தில் அம்முனிவர் அளித்த உணவினை ஏற்று, உடன் விமானத்தில் வரவிருக்கிறார். இச்சந்தர்ப்பத்தில் தாங்கள் தீயில் மாண்டால், அந்தப்பெருந்தகை நிச்சயமாக உயிர் துறக்க நேரிடும். அண்ணல் தங்களுக்கு அளித்த காலக்கெடு முடிவதற்கு இன்னும் சில நாளிகைகள் இருக்கின்றன. அதற்குள் பிராட்டியாரும் இளையபெருமாளும் ஏனையோரும் தொடர்ந்து வர, இங்கு எழுந்தருளுவார்!"

இவ்வாறு கூறிய ஆஞ்சநேயர், தன்னிடமிருந்த இராமபிரானின் மோதிரத்தை எடுத்து பரதனிடம் கொடுத்தார். மோதிரத்தைக் கண்டதும் பரதனின் முகம் கோடி சூரியப் பிரகாசம் போல் ஜொலித்தது. கோசலைத் தாயார் பெருமகிழ்ச்சிக் கடலில் குதித்தார். சத்துருக்கன் முதலானோரும் துயரம் நீங்கப் பெற்றவர்களாக, தென் திசையையே நோக்கினர்.

கதிரவன் தெற்கிலே தோன்றிவருவதைப் போல் புட்பக விமானம் ஜொலித்தது. அது வந்து தரை தொட்டதும் அனைவரும் மட்டற்ற மகிழ்ச்சியுடன் ஆனந்தக் கூத்தாடினர். பதரன் ஓடோடிச்சென்று அண்ணல் இராமச்சந்திரப் பிரபுவின் தாளினைக் கட்டிக் கொண்டார்.

(தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி: 115

**சரியானவிடை:- இலங்கை மாநகருக்கு.**

1. ராம் லக்ஷ்மணர், மீதும்பிட்டிய பஸார், பசறை.
2. ஏ.சீ.எம்.முஸம்மில், 37 மெயின் வீதி, குளியாப்பிட்டிய.
3. ஆ.அஜந்தினி, 8,முருகன் வீதி, பள்ளத்தோட்டம், திருகோணமலை.
4. கே.புஸ்பலதா, ஆறுமுகத்தான் குடியிருப்பு, தன்னாமுனை.
5. எஸ்.பரமேஷ்வரன், சிவன் கோயில், 38, ஸ்ரீ இராமநாதன் வீதி, கொழும்பு-13.

**போட்டி இல. 117** கேள்வி:- இராமபிரான் பரதனிடம் கூறிய காலக்கெடு எவ்வளவு காலம்?

ஜனவரி 24 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி – இல.117, தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

# வேட்பாளர்களின் பாவனைக்கு



பகிரங்க பொதுக்கூட்டங்கள் நடத்த கட்சிகள் முன்வந்தால், மைதானம் அதிர முழங்குவதற்கு உபயோகப்படக்கூடிய உரை ஒன்று இங்கு தரப்படுகிறது. யார் வேண்டுமானாலும் உபயோகிக்கலாம்.

தேர்தல் காலத்தில் விடுதலைப் புலிகளைக் கண்டிக்க நாம் விரும்பவில்லை. தேர்தல் முடிந்த பின்னர் எங்கள் தலைவர்கள் பத்திரமாக தங்கள் கூடுகளுக்கு சென்ற பின்னர் வேண்டுமானால் புலிகளைக் கண்டிப்பார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தல் காலத்தில் இன உணர்வு பேசி மக்களைக் கவர வேண்டும், தேர்தல் முடிந்த பின்னர் புலி எதிர்ப்பு பேசி அரசினரைக் கவரவேண்டும் என்பதுகூட தெரியாதளவுக்கு நாங்கள் விவேகம் இல்லாதவர்களல்ல.

ஆனாலும் புலிகளுடன் எங்களையும் ஒப்பிட்டுக் கொள்ளும் தகுதி இல்லாமல் இல்லை.

ஒவ்வொன்றாக அவிழ்த்துவிட்டால் நேரம் போதாது. நீங்களும் தாங்கமாட்டீர்கள். அதனால் சுருக்கமாக விளக்கித் தள்ளுகிறேன்.

செய் அல்லது செத்துமடி என்று போர்க்களத்தில் தன் அணிகளை இறக்கிய பிரபாகரனை மட்டும் போற்றுகிறீர்களே, நாங்களும் தேர்தல் களத்தில் செய் அல்லது செத்துமடி என்றுதானே எமது உறுப்பினர்களை தள்ளிவிட்டிருக்கிறோம்.

ஆயுதக் கப்பல் கொண்டு வருகிறார்களாம் புலிகள். நாங்கள் மட்டும் என்ன கொழும்பில் இருந்து சுவரொட்டிகள், துண்டுபிரசுரங்களை காரிலா கொண்டு வருகிறோம்? கப்பலில்தானே கொண்டு வருகிறோம். அவர்கள் ஆயுதக் கப்பல் கொண்டு வருகிறார்கள். நாங்கள் காகிதக் கப்பல் கொண்டுவருகிறோம். கப்பல் கப்பல்தான்.

ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம் என்றார் பாரதியார். புலிகள் போருக்கு ஆயுதம் செய்கிறார்கள். நாங்கள் தேர்தலுக்கு காகிதம் செய்கிறோம். புலிகள் மட்டும் தனியாகவோ, அல்லது நாங்கள் மட்டும் தனியாகவோ இருந்திருந்தால் பாரதியாரின் கனவை முழுமையாக நிறைவேற்றி இருக்க முடியுமா?

அரசுக்கு எதிராக புலிகள் ஆயுதம் ஏந்தியிருக்கிறார்கள். நாங்கள் காகிதம் ஏந்தியிருக்கிறோம்.

ஆயுதங்களில் மட்டும்தான் ஏ.கே. 47, ரி.56 போன்ற பல ரகங்கள் இருக்கிறது என்று நினையாதீர். காகிதங் களிலும் பல ரகங்கள் உள்ள. மகஜர்-பி.10 (அதாவது பத்துப்பக்கம் கொண்டது), அறிக்கை பி.4 (நான்கு பக்கங்கள் கொண்டது), யோசனைகள் ஜே. 90 (90 கிலோ எடை) ஃபக்ஸ் ரொக்கட் (ஃபக்ஸ் மூலம் அனுப்பப்படும் கடிதங்கள்), ஸ்பீக் ஷெல் (பாராளுமன்ற உரை பத்திரிகையில் வருவது) போன்ற நவீன காகிதப் புரட்சியில் நாம் குதித்திருக்கிறோம்.

எனவே- நாம் தொடர்ந்தும் இப்படி குதித்துக்கொண்டே இருக்க வாக்குச் சீட்டில் முத்திரையை குத்திக்கொண்டே இருக்குமாறு வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறோம்.

# காணவாரீர்–காணவாரீர்

## அனுமதி மட்டும் இலவசம்




வேட்பாளர் சாம்பியன் வாள் சண்டைப் போட்டி.
இடம்: தியாகி திருக்குமரன் அரங்கம்.

திகதி: ஜனவரி 29
நடுவர்: படையினர்
விசேஷ அதிதி: அரசாங்கம்
அனுமதி: இலவசம்
அன்பளிப்பு: ஆளுக்கொரு வாக்கு (மேலதிகமாகவும் போடலாம்)

# அதிரடி சுவரொட்டித் தாக்குதல்

யாழ் குடாநாட்டில் சுவரொட்டி ஒட்டும் போட்டிகளும், சின்னம் வரைந்து புள்ளடி கீறும் போட்டிகளும் சூடு பிடித்துள்ளன என்பது யாவரும் அறிந்ததே.

தேர்தல் களத்தில் இருந்து நமது நிருபர் அனுப்பிவைத்துள்ள செய்தியை இங்கு தருகிறோம்.

முன்னாள் போராளிகளான இந்நாள் கட்சிகள், முன்னாள் பயிற்சிகளையெல்லாம் முழுவேகத்தில் காட்டிக் கொண்டிருக்கின்றன.

துப்பாக்கிகளை இலாவகமாக தோள்களில் சுமந்து செல்வதுபோல, சுவரொட்டிகளை தூக்கிச் செல்கின்றனர்.

முகாம் தாக்குதலுக்கு முன்பாக தகவல் திரட்டுதலை 'றெக்கி ரிப்போர்ட்' என்று அழைப்பர்.

அதுபோன்றே, சுவரொட்டி வீச்சுக்கு உள்ளாகாத சுவர்கள் பற்றியும் றெக்கி ரிப்போர்ட் எடுக்கப்படுகிறது. அதனையடுத்து குறிப்பிட்ட சுவர்களை நோக்கி பசை வாளியுடனும், சுவரொட்டியுடனும் ஒட்டல் அணி பாய்ந்து செல்லும் காட்சியை விபரிக்க வார்த்தையில்லை.

முகாமை தாக்குவது போன்ற அதிரடி வேகத்தில் சுவர்களை ஒருவழி பண்ணிவிட்டுத்தான் திரும்புகிறார்கள்.



முன்னாள் போராளிகளின் இந்நாள் பிரசார உலாக் காட்சி

இத்தனை வேகமும், கடும் உழைப்பும் மக்களுக்கு தெரு விளக்குப் போட்டுக் கொடுக்கவும், தெரு திருத்தவுமான பதவிக்காகத்தான் என்று நினைக்கையில் புல்லரிப்பு ஏற்படாமல் இல்லை.

# சின்னங்களை அறிமுகம் செய்ய சிறப்பான யோசனைகள்

1) சுவர்கள் இல்லாத இடங்களில் சிரமதான முறையில் சுவர்கள் நிறுவி, அவற்றில் பிரமாண்டமான சுவரொட்டிகள் ஒட்டுதலும், சின்னம் வரைதலும்.
2) சந்திக்கு சந்தி கொடிக் கம்பம் நட்டு கட்சிச் சின்னம் பொறித்த கொடிகளை சடசடத்து பறக்கவிடல்.
3) பாடசாலை மாணவர்களின் சட்டைகளில் கட்சிச் சின்னங்களை அணியக் கொடுத்தல். (அவற்றைப் பார்க்கும் ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் வாக்களிக்க வேண்டும்போல் ஆசை எழும்)
4) சைக்கிள்களே அதிகளவில் இருப்பதால், சைக்கிள்களில் ஒட்டக்கூடிய மினி சைஸ் ஸ்டிக்கர்களாக கட்சிச் சின்னங்களைத் தயாரித்து ஒட்டுதல்.
5) மக்கள் சற்று ஏமாந்தால் அவர்களின் தலையை மொட்டையடித்து, கட்சிச் சின்னத்தை வரைந்து விடுதல்.

காதிலை பூ கந்தசாமி




105, காலி வீதி வெள்ளவத்தை, கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# குவா குவா கொண்டாட்டம்



→ மனிதர்களுக்கு மட்டும்தான் பிறந்தநாள் கொண்டாட முடியும் என்று விதி இருக்கிறதா என்ன? இப்போதெல்லாம் தங்கள் செல்லப் பிராணிகளுக்கும் பிறந்தநாள் கொண்டாடுகின்றனர்.

இங்கே மெழுகுதிரி ஏற்றி கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடப்படுவது வாத்துக்காக. வாத்தின் பெயர் 'பில் குவாக் குவாக்'.

இத்தனை கொண்டாட்டம் ஏன்? காரணம் இருக்கிறது. உலகிலேயே அதிககாலம் உயிர் வாழ்ந்த வாத்து இதுதான். 25வது பிறந்தநாள்தான் கொண்டாடப்படுகிறது. அதன் உரிமையாளர் கிறே ஃபுட் என்பவர்தான் செல்லமாக தூக்கிவைத்திருக்கிறார். இங்கிலாந்திலதான் இந்த உலக சாதனை வாத்து இருக்கிறது. வாழ்க இன்னும் பல லாண்டு.





புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


# பணமலை

↓ விளையாட்டு பணமாக விளைகிறது. உலகில் பெரும் பணக்காரர்கள் வரிசையில் விளையாட்டு வீரர்களுக்கும் பிரதான இடம் கிடைத்து வருகிறது. பணமலைமீது தூங்கும் விளையாட்டு வீரர்களின் வருமானத்தைப் பாருங்கள். (மூர்ச்சையாகிவிடாதீர்கள்)

கடந்த வருடம் மிக உச்ச வருமானத்தைப் பெற்ற உலக விளையாட்டு வீரர்களில், கூடைப்பந்தாட்ட வீரரான மைக்கல் ஜோர்டன் முதலிடத்தைப் பெறுகிறார்.

கடந்த 6 வருடங்களில் 5 வருடங்கள் தொடர்ந்து முதலிடத்தைப் பெறும் ஜோர்டன், 1997ல் மொத்தம் 469 கோடியே 8 இலட்சம் ரூபாவைச் சம்பாதித்திருக்கிறார். அமெரிக்காவிலுள்ள சிக்காகோ- புள்ஸ் தேசிய கூடைப்பந்து விளையாட்டுச் சங்கத்தின் அங்கத்தவர் ஜோர்டன்.


ஜோர்டனுக்கு கடந்த வருடம் சம்பளமாக மட்டும் கிடைத்த தொகை 187 கோடியே 8 இலட்சம் ரூபா. தவிர முதலீடுகள், சொத்துக்கள் மற்றும் விளம்பர வருமானங்களின் மூலம் மேலும் 282 கோடி ரூபாவை வாரிப் போட்டுக் கொண்டார். முன்னாள் அதிபாரக் குத்துச்சண்டை வீரரான மைக் டைசன், சில ஆண்டுகளுக்கு முன்னர் அதிக வருமானம் பெறும் விளையாட்டு வீரராகத்திகழ்ந்தார். கடந்த ஆண்டில் டைசன் ஐந்தாம் இடத்துக்குத் தள்ளப்பட்டு விட்டார். உலக அதிபாரக்குத்துச்சண்டையின்போது மைக் டைசனிடம் காதில் கடி வாங்கியவரான இவாண்டர் ஹொலி ஃபீல்டு, கடந்த வருட வருமானமாக 385 கோடி 8 இலட்சம் ரூபாவைப் பெற்று இரண்டாவது இடத்திலிருக்கிறார்.

மற்றுமொரு குத்துச்சண்டை வீரரான ஒஸ்கார் டி லா ஹோயா 228 கோடி ரூபா சம்பாதித்து மூன்றாம் இடத்திலும், மைகேல் ஷுமாச்சர் என்ற சாரதி 230 கோடி ரூபாவைப் பெற்று 4வது இடத்திலும் வந்துள்ளனர். கோல்ஃப் விளையாட்டு வீரரான டைகர் வூட்ஸ் 6வது இடத்தைப் பெறுகிறார்.

இவர் 156 கோடி 6 இலட்சம் ரூபாவைப் பெற்றார். வூட்ஸ் பரிசுத் தொகையாக மட்டும் 12 கோடி ரூபா பெற்றிருக்கிறார்.

ஏழாவது இடத்தைப் பிடித்துக் கொண்டவர் ஒரு உதைப்பந்தாட்ட வீரர். ஷக்குவில் ஓ நீல் என்ற பெயருடைய இவருக்குக் கிடைத்த மொத்த வருமானம் 152 கோடி 4 இலட்சம் ரூபாவாகும். மோட்டார்ப் பந்தயங்களில் கட்டிய வெற்றிகளுக்காக டேல் ஏர்ன்ஹார்ட் 114 கோடி 6 இலட்சம் ரூபாவைப் பெற்று எட்டாவது இடத்தில் வைக்கப்பட்டுள்ளார். தேசிய ஹொக்கி லீக்கில் விளையாடும் கொலோராடாவைச் சேர்ந்த ஜோ சக்கிக் 42 கோடி ரூபா பெற்று ஒன்பதாவது நிலையினைப் பெறுகிறார்.

கடந்த வருடம் அதிக வருமானம் பெற்ற டென்னிஸ் ஆட்டக்காரரான பீட் சாம்பிராஸ் 87 கோடி ரூபா பெற்றார். கூடைப் பந்தாட்டத்தில் கூடுதலான வருமானம் பெற்ற மற்றுமொருவர் கால் றிப்கின் என்பவர். இவர் 79கோடி 2 இலட்சம் ரூபா வருமானம் பெற்றுள்ளார்.




# உறிஞ்சி



↑ சற்று வித்தியாச ரக நண்டு என்று கண்டதும் நினைத்திருந்தால், மூன்று தடவைகள் தோப்புக்கரணம் போடக்கடவீர். மனிதர்களின் தலையில் குடியிருந்து இரத்தத்தை உறிஞ்சிக் குடித்து உயிர்வாழும் பேன்களைப் போன்று மிருகங்களின் உடலில் ஒட்டிக் கொண்டு இரத்தம் குடிக்கும் பூச்சி வகைகளில் இதுவும் ஒன்று. இப்பூச்சிகளுக்கு இறக்கைகள் கிடையாது. ஆனால் மிக வேகமாக ஓடித்திரியும் வல்லமை கொண்டவை. இவை அளவில் மிகச் சிறியவை. இதன் உருவத்தைப் பன்மடங்காகப் பெருப்பித்துப் படம் பிடித்துள்ளார்கள். இது ஒட்டுயிர்ப் பூச்சி வகையைச் சேர்ந்தது.

இரத்தம் குடிக்க இந்த ஒட்டுயிர்ப்பூச்சி கைப்பிடிக்கும் தந்திரத்தை அறிந்தால் அசந்துபோவீர்கள். இறக்கைகள் இல்லாத போதும் இப்பூச்சிகள் ஒரு பிராணியிலிருந்து மற்றொரு பிராணிக்குப் பாய்ந்து சென்று பரவும். ஒரு மிருகத்துடன் அதனுடைய குட்டிகள் வந்து அணையும்போது தொற்றிக் கொள்ளும். ஒரு மிருகம் படுத்துக் கிடக்கும் இடத்தில் இப்பூச்சி நிலத்தில் இறங்கி அடுத்து அண்மையில் கிடக்கும் மிருகத்தின் உடலில் போய் ஒட்டிக் கொள்ளும்.

இப்பூச்சிகள் நிலத்தில் விழுந்து கிடக்கும்போது வேறு மிருகம் அருகில் வராதிருந்தாலும் இரத்தம் குடிக்காமல் ஒரு வாரம் வரை காய்ந்து சருகுபோல் கிடக்கும். இதற்கிடையில் ஏதாவது ஒரு பிராணி வந்து சேர்ந்தால், போதுமான இரத்தத்தைக் குடித்து பழைய உருவத்தைப் பெற்றுக்கொண்டு விடும்.

இதனால் ஒட்டுயிர்ப் பூச்சிகளில் உலக சாதனைப் பூச்சியாக இது இடம்பெற்றுள்ளது.

## 1வது பிறந்த தினம்



செல்வி தானியா
(20 - 01 - 1998)

ஏழுதுமட்டுவாள் வடக்கைச் சேர்ந்த குகன், சாந்தி தம்பதியினரின் செல்வப்புதல்வி தானியா தனது முதலாவது பிறந்த நாளை 20-01-1998 அன்று கண்டா, ஸ்காபரோவில் உள்ள தனது இல்லத்தில் அமைதியாகக் கொண்டாடுகின்றார்.

பலகலையும் பெற்றுப்பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: ச. குமாரவேலு (அப்பப்பா)

# குறி




↑ மரத்தில் இருக்கும் கனிக்கு குறிவைத்தால், கனி மட்டும்தான் தெரியவேண்டும். மரம், இலை, காய் எதுவும் தெரியக்கூடாது. இலக்குத்தான் முக்கியம். மகாபாரதத்தில் அர்ஜுனன் வில்வித்தையில் கில்லாடியானது அப்படித்தான்.

படத்தில் இருக்கும் அலன் மாரிசன் துப்பாக்கி வித்தையில் நவீன அர்ஜுனன். கனடாவைச் சேர்ந்த குறி மன்னர். இலக்கு வைத்து துப்பாக்கியால் சுடும் போட்டியில் மூன்று தடவைகள் இவர் வெற்றியீட்டியுள்ளார். மகாராணியின் பரிசுக்கான போட்டி 1996 ஜுலை 27ல் இடம் பெற்றபோது இவ்வாறு காட்சி அளித்தார். 300 தடவைகள் சுட்டதில் 298 தடவை குறித்த இலக்கினை எட்டினார். இவர் 1980, 1983 மற்றும் 1996ம் ஆண்டுப் போட்டிகளில் வெற்றி குவித்தார். ஏற்கனவே இத்தகைய போட்டிகளில் பிரிட்டனைச் சேர்ந்த ஆர்தர் ஜோர்ஜ் ஃபுல்டன் 1912, 1926 மற்றும் 1931ம் ஆண்டுகளில் மூன்று முறை வெற்றிருக்கிறார்.

தற்போது உலகில் உயிருடன் உள்ள துப்பாக்கி சுடும் போட்டி வீரர்களில் உலக சாதனையாளர் இவர்தான்.